www.padippakam.com

# புதிய கலாச்சாரம்

பிப்ரவரி –2002
மகஇக மாத இதழ்
ரூ 5.00



என்ரான்
திவாலான
கதை

ஆண்டிப்பட்டியில் விவசாயம் பொய்த்துவிட்டது.

25000 ஹெக்டேர் நிலம் மானாவாரி. 15000 ஹெக்டேர் தரிசு.

பிழைக்க வழிதேடி ஊரைவிட்டு ஓடியவர்கள் 25000 பேர்.

மக்களுக்கு அது பஞ்சபூமி. ஜெயலலிதாவுக்கு...?




படிப்பகம்

www.padippakam.com

# வாசகர் கடிதம்

★ **சனவரி 2002 இதழ் அட்டைப் படம்:** ஆளும் வர்க்க ஏடுகள் பாராளு மன்றத் தாக்குதலைக் காட்டி பயங்கர வாதத்தைப் பீதி ஊட்டிப் போர்வெறிக்குத் தூபம் போட்டுவந்த வேளையில், போர் வெறியால் ஆதாயம் அடையத் துடிக்கும் இருநாடுகளின் முகத்திரை கிழித்து 'போர்வெறியை நிறுத்து!' என்ற முழக்கத் துடன் தக்க தருணத்தில் அட்டைப்படம் வெளியிட்டது ஆளும் கும்பலைத் திரை கிழிக்கப் பெரிதும் உதவியது.

**தீப்பொறிக்காகக் காத்திருக்கும் சருகுகள்:** இந்தியா போன்ற ஒரு ஏழை அடிமை நாட்டில் எல்லாக் கட்சிகளின் மீதும் நம்பிக்கை இழந்துவிட்ட மக்கள் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரை எங்கி ருந்து துவங்குவது என்ற கேள்விக்கு 'அர்ஜன்டினா உணவுக் கலகம்' தெளிவாக விடையளிக்கிறது. போராட்டத்தைத் தொகுத்திருந்த முறை நாமும் போராட் டத்தில் பங்கேற்ற உணர்வை ஏற்படுத்தியது.

**பெண்களைப் பேசவிடு:** உத்திரப் பிரதேசத்தில் பெண்களுக்கு இழைக்கப் படும் கொடுமைகள் ஆணாதிக்கத்தின் கொடூர மனப்பான்மையை எடுத்துக் காட்டின. 'பாரத மாதாவை'யே அமெரிக்க னுக்கு அடிமையாக்கிய பா.ஜ.க. பெண் விடுதலைக்காகப் போராடும் என எதிர் பார்க்க முடியாதுதான். பெண்விடுதலைப் போராட்டங்களைச் சாந்தப்படுத்தித் திசை திருப்பும் அரசு நிறுவனங்களையும், தன்னார்வக் குழுக்களையும் திரை கிழித்துப் புரட்சிகர அமைப்புகளே தீர்வு எனச் சுட்டியது சிறப்பாக இருந்தது.

**என்ன இருந்தாலும் தோழரே!:** கட்டுரையைப் படித்தவுடன், ''கம்யூனிஸ்ட் அல்லது கம்யூனிஸ்ட் அனுதாபி எவரா வது சோசலிசத்தையும், கம்யூனிசத்தையும் பேசிக்கொண்டு இக்குறிக்கோளுக்காகப் போராடத்தவறினால், இம்மியளவு தளர் வுற்றால், உற்சாகமின்றியிருந்தால் அவர் அறிந்தோ அறியாமலோ சோசலிசத் திற்கும் கம்யூனிசத்திற்கும் துரோகம் செய்தவராவார்''-என்ற மாவோவின் மொழியைச் சட்டென நினைவூட்டியது.

**துப்பாக்கியின் தெரு:** கவிதையைப் படித்து விட்டுப் பின்அட்டையைத் திருப்பிப் பார்த்தேன். அர்ஜன்டினா உணவுக் கலகத்தில் உணர்வுபூர்வமாகக் கலந்து கொண்ட ஒவ்வொருவரும் தாங்கள் துப்பாக்கியின் தெருவில் இறங்கிய அனுபவத்தை உரைப்பதுபோல் இருந்தது.

**— சுரேஷ், திருச்சி.**

★ **'கரும்புக்கு ஆசைப்பட்ட வேம்பு':** இலட்சுமணப்பெருமாளின் சிறுகதை: 'ஓட்டுப்போடாதே' என்றால் போடாமல் என்ன செய்வது என்ற கேள்வி மக்களி டையே எழுகிறது. புரட்சிசெய் என்று கூற வேண்டுமானால் நீண்டநேரம் விளக்க வேண்டியுள்ளது. இந்தக்கதையில் இதுவும் புரட்சிதான் என்பதையும், மக்களிடையே அதற்கான ஆயுதம் இருப்பதையும் விளக் கியுள்ளார் ஆசிரியர்.

**— மீனா, சென்னை.**

★ நான் தொழிற்சாலை ஒன்றில் நிரந்தர மற்ற தொழிலாளியாக வேலை செய்கி றேன். தங்களின் இதழை மாதந்தோறும் படிப்பேன்...... இப்போது ஒரு சிந்தனையா ளனாக மாறி இருக்கிறேன் என்பதில் பெரும்பங்கு உங்கள் இதழுக்கு உண்டு.

**— சி. ஆரோக்கியதாஸ், ஏனாத்தூர்.**

★ ***செப்-11 நியூயார்க் தாக்குலை யொட்டி இணையத்தளமொன்றில் 'புதிய கலாச்சாரம்' வெளியிட்டிருந்த கட்டுரைக்கு மேலும் பல வாசகர் கடி தங்கள் வந்துள்ளன. அவற்றில் ஒன்றை மட்டும் வெளியிடுகிறோம்:***

அமெரிக்காவில் குடியேறிய 'இந்திய மக்கள்' பலர் உங்கள் கருத்துக்களை ஏற்க வில்லை என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அவர்களை இந்திய மக்கள் என்று அழைப்பதும் பொருத்தமில் லைதான். அவர்கள் அதற்குத் தகுதியற்ற வர்கள். ஏனென்றால், இந்த 'தேசபக்த உள்ளங்கள்' அமெரிக்காவின் இதயம் போன்ற இடங்களில் சுகபோகமாக வாழ்கி றார்கள். அவர்கள் — தங்கள் செந்த நாட்டு மக்கள் சந்தித்துவரும் கொடூரமான யதார்த் தத்திலிருந்து துண்டித்துக் கொண்டு வெளி யேறி ஓடிவந்து — பாதுகாப்பாக அமெ ரிக்க அறைகளுக்குள் தங்களைப் பூட்டிக் கொண்டவர்கள்; அவர்களின் இந்தியச் சகோதரர்கள் முதல்தர அமெரிக்கப் பிரஜை யாக வாழக் கொடுத்து வைக்காதவர்கள்.

செப்.11 பற்றிய பின் விளைவு களையோ, அதன் அரசியல் தாக்கங் களையோ உணராமல் அவர்கள் 'பயங்கர வாதிகளை'க் கடுமையாகச் சாடினார்கள். (அந்தச் சந்தர்ப்பங்களில் 'பயங்கரவாதி களின்' தாய்மார்களைப் பழிக்கும் சொற்களையும் பயன்படுத்தினார்கள் என்பதை இங்குச் சொல்ல விரும்பு கிறேன்). இப்படிப்பட்ட ஒரு சிலரை எனக்குப் பரிச்சயம் உண்டு என்று சொல்லிக் கொள்ளவே வெட்கப் படுகிறேன்.

இத்தகைய சூழலில் உண்மையான கண்ணோட்டத்தைப் பகிர்ந்து கொள்ளும் உங்களைப் போன்ற சிலர் இருப்பது எனக்கு எதிர்பாராத ஆறுதலைத் தருகிறது.

**— டிவியண்ட், அமெரிக்கா.**

●○●




●○●

1.1.2002 அன்று புதிய கலாச்சார வாசகர் வட்டம், சிவகங்கை மையம் சார்பில் 'அமெரிக்க பயங்கரவாதமும் இந்தியப் பொடோ சட்டமும்' என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற் றது. தியாகிகளுக்கான செவ்வணக்கப் பாடலோடு துவங்கிய இக்கருத்தரங் கிற்கு தோழர் குருசாமி மயில்வாகனன் தலைமை ஏற்க தோழர் எழில்மாறன் கருத்தரங்கின் நோக்கம் குறித்து உரை யாற்றினார்.

''தமிழக மக்கள் மீது பினாமி ஜெயா அரசு தொடுத்துள்ள கொடூர யுத்தம்'' என்ற தலைப்பில் தோழர் மக்கள் நேசன் உரையாற்ற, சிறப்புரை யாக ம.க.இ.க. மாநில இணைச் செயலர் தோழர் காளியப்பன் கருத் தரங்கத் தலைப்பை ஒட்டி சுமார் இரண்டு மணி நேரம் விளக்கிப் பேசினார்.

பின்னர் நடந்த கலந்துரையாடலில் இடதுசாரிகளின் ஒற்றுமை பற்றி எழுந்த கேள்விக்கு மகஇக மாநிலச் செயற்குழு உறுப்பினர் தோழர் கதிரவன் விரிவான விளக்கம் அளிக்க தோழர் கா.அம்பேத்கரின் நன்றியுரை யோடு கருத்தரங்கம் நிறைவ டைந்தது.

**— வாசகர் வட்டம், சிவகங்கை.**



படிப்பகம்

www.padippakam.com

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

◆ புதிய கலாச்சாரம்
◆ மக்கள் கலை இலக்கியக் கழக மாத இதழ்

◆ போர்: 19
◆ குரல்: 9
◆ பிப்ரவரி - 2002

உள்நாடு
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டுச் சந்தா: ரூ. 60.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டுச் சந்தா: US$ 9

மின் அஞ்சல் முகவரி:
puthiyakalacharam@hotmail.com

சந்தா,
படைப்புகள் அனுப்பவும்
தகவல்களுக்கும்:

இரா. சீனிவாசன்,
16, முல்லைநகர் வணிக வளாகம்,
2-வது நிழற்சாலை,
15-வது தெரு அருகே,
அசோக் நகர், சென்னை-600 083.

அலுவலக நேரம்:
காலை 10 முதல் 2 மணி வரை
ஞாயிறு விடுமுறை

# ஆண்டிப்பட்டி: பனித்துளியில் தெரியும் நாடு

அரசியல் அறிவு, கல்வியறிவில் பின்தங்கிய வட்டாரமாக, தொழில் வளர்ச்சியற்ற பகுதியாக, சாதிவெறியும் அடிமைப் பண்பாடும் மேலோங்கியிருக்கும் தொகுதியாக ஒன்றைச் சல்லடை போட்டுச் சலித்துத் தேர்ந்தெடுத்து அங்கிருந்து போட்டியிடுவது என்பது இந்தியத் தேர்தல் அரசியலில் பாசிஸ்டுகள் கையாண்டு வரும் நிரந்தரமான உத்தி. ரேபரேலி, சிக்மகளூர், மேடக் முதலியவை இந்திராகாந்தி தெரிவு செய்த தொகுதிகள்; ஆண்டிப்பட்டி, அருப்புக் கோட்டை போன்றவை எம்.ஜி.ஆர். கண்டுபிடித்த தொகுதிகள். நாட்டின் எந்த வட்டாரத்து மக்களிடையே ஜனநாயக உணர்வு ஆகத் தாழ்ந்த நிலையில் உள்ளதோ அந்த வட்டாரத்து மக்களால் 'ஜனநாயகப் பூர்வமாக'த் தேர்ந்தெடுக்கப்படுவதையே பாசிஸ்டுகள் விரும்புகிறார்கள். ஜெயலலிதா ஆண்டிப்பட்டியை விரும்புகிறார்.

அதேநேரத்தில் ஆண்டிப்பட்டி மக்கள் ஜெயலலிதாவைத் தோற்கடித்துவிட வேண்டும் என்று பலரும் விரும்புகிறார்கள். தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சியினர் மட்டுமல்ல, ஜெயலலிதாவின் இலஞ்ச ஊழல் அதிகார முறைகேடுகள், சாதித்திமிர் ஆகியவற்றை வெறுக்கும் ஜனநாயக உணர்வு கொண்ட பலரும் ஆண்டிப்பட்டி மக்கள் ஜெயலலிதாவுக்குப் பாடம் புகட்ட வேண்டும் என விரும்புகிறார்கள். கட்டண உயர்வு, விலைவாசி உயர்வு ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட தமிழக மக்களும், போனஸ் போன்ற கோரிக்கைகள் மறுக்கப்பட்ட அரசு ஊழியர்கள் போக்குவரத்துத் தொழிலாளர்கள் போன்றோரும், விளை பொருளைக் கொள்முதல் செய்ய மறுக்கும் அரசுக்கெதிராகக் குமுறிக் கொண்டிருக்கும் விவசாயிகளும் - ஆண்டிப்பட்டி மக்கள் ஜெயலலிதாவைத் தோற்கடிக்க வேண்டுமென விழைகிறார்கள். ஜெயலலிதா வெற்றி பெற்று விட்டால் அந்த 'கேணப்பய ஊரை' எல்லோரும் ஒரு சுற்றுத் திட்டித் தீர்ப்பார்கள்.

ஜெயலலிதாவை முறியடிக்கும் 'மாபெரும்' பொறுப்பை படிப்பறிவற்ற பாமர மக்கள் தலையில் சுமத்துவதற்கு முன், படித்த - அரசியல் அறிவு கொண்ட வர்க்கத்தினரும் கட்சிகளும் தங்கள் முதுகைக் கொஞ்சம் திரும்பிப் பார்த்துக் கொள்ள வேண்டும். "டான்சி நிலம் அரசு நிலமல்ல, அரசுச் சொத்தை அரசு ஊழியர் வாங்குவது சட்டப்படி குற்றமும் அல்ல" என்று தீர்ப்பளித்து ஊழலுக்குப் புனிதநீர் தெளித்த உயர்நீதி மன்றத்தை என்ன செய்வது? தில்லுமுல்லுகளைத் தெரிந்தே அனுமதிக்கும் தேர்தல் ஆணையத்தை என்ன செய்வது? குடிதண்ணீரும் சாலையும் இன்றி வாழமுடியாமல் தேர்தல் புறக்கணிப்பு செய்த குண்டுப்பட்டி மக்களைப் போலீசு நாய்களை ஏவிக் குதற வைத்து விட்டு, ஆண்டிப்பட்டியில் தனது "ஜனநாயக உரிமை" போய் விட்டதால் தேர்தலைப் புறக்கணிக்கப் போவதாகக் குமுறிய கருணாநிதியை என்ன செய்வது? தென்னை மரத்தில் புல் பிடுங்கப் போகிறோமென்று ஆறுமாதம் முன்னால் ஜெயலலிதாவுக்குக் கூட்டம் சேர்த்துவிட்டு, இப்போது உண்மை தெரிந்து கூட்டணியிலிருந்து கீழே இறங்கிவிட்டதாகக் கூறும் களவாணிகளான போலி கம்யூனிஸ்டுகளை என்ன செய்வது? இப்பொழுதும் தங்களுடைய மனச்சாட்சி என்ன சொல்கிறது என்பதை வெளியில் சொல்லாமல், மக்களைத் தங்கள் மனச்சாட்சிப்படி ஓட்டுப் போடுமாறு உபதேசம் செய்யும் இந்தக் கயவர்களை என்ன செய்வது? இந்தக் குற்றவாளிகளைத்தான் முதலில் தண்டிக்க வேண்டும் என்பதை ஒப்புக் கொள்ளாதவர்களுக்கு ஆண்டிப்பட்டி மக்களை நோக்கி விரல் நீட்டிக் குறை சொல்லும் உரிமை கிடையாது.

வரவிருக்கும் தேர்தலைப் பற்றி ஆண்டிப்பட்டி தொகுதியின் பல தரப்பு மக்களும் என்ன கருதுகிறார்கள் என்பது குறித்த சித்திரத்தை இவ்விதழில் வெளியிடப்பட்டுள்ள பேட்டிகள் தருகின்றன. அம்மக்கள் வெளியிட்டுள்ள கருத்துகளில் அதிர்ச்சியோ பரபரப்போ எதுவும் கிடையாது. விவசாயம் நசிந்ததற்கும், கைத்தறி, விசைத்தறி நலிவுக்கும், கந்து வட்டிக் கொடுமைக்கும், பஞ்சம் பிழைக்க ஊரைவிட்டு ஓடவேண்டிய நிலைமைக்கும் - இந்தத் தேர்தலுக்கும் உள்ள உறவு பற்றி அவர்களுக்குத் தெரியவில்லை. மறுகாலனியாக்கக் கொள்கைகளுக்கும் விவசாயத்தின் அழிவுக்கும் உள்ள தொப்பூழ்க் கொடி உறவு அவர்களுக்கு இருட்டடிப்பு செய்யப்பட்டிருப்பதன் விளைவு இது. எல்லோரும் அயோக்கியர்கள் எனும்போது என் சாதிக்கார அயோக்கியனுக்கு ஓட்டுப் போடுகிறேனென்று அவர்கள் சொல்வது ஓட்டுக் கட்சிகள் உருவாக்கி வளர்த்த சாதி அரசியலின் விளைவு. ஜெயலலிதாவுக்கு ஓட்டுப் போட்டால் தொகுதிக்குச் சில சலுகைகளாவது கிடைக்கும்; எதிர்த்துப் போட்டு ஏன் அதைக் கெடுத்துக் கொள்ள வேண்டும் என்ற கருத்து பிழைப்புவாத அரசியலின் ஒரு பிரதிபலிப்பு.

**வென்றாலும், தோற்றாலும் ஜெயலலிதா எதையும் இழக்கப் போவதில்லை; ஆண்டிப்பட்டி மக்கள் எதையும் பெறப்போவதுமில்லை. ஆண்டிப்பட்டி மக்களின் கருத்தில் இந்தியக் கிராமப்புறம் பிரதிபலிக்கிறது. பனித்துளியில் தெரியும் தோற்றத்தை மாற்றினால் நாட்டின் முகம் மாறிவிடாது. நாட்டின் முகத்தை மாற்றினால் பனித்துளி காட்டும் தோற்றம் தானாய் மாறும்.** ●

படிப்பகம்

www.padippakam.com



# ஆண்டிப்பட்டியா ஏமாளிப்பட்டியா?

## ஆண்டிப்பட்டி - ஒரு பார்வை

✱ ஆண்டிப்பட்டித் தொகுதியில் முக்குலத்தோர் ஓட்டு 65,000., தாழ்த்தப்பட்டவர்கள் ஓட்டு 47,000, நாய்க்கர் ஓட்டு 42,000., இதர ஓட்டு சுமார் 15,000. இது சாதிவாரிக் கணக்கு.

✱ பெருவாரியான மக்கள் ஈடுபடும் தொழில் விவசாயம். கைத்தறி, விசைத்தறியை நம்பியுள்ளவர்கள் சுமார் 20,000.

✱நிலத்தடி நீர் அதிகஅளவு வற்றிப்போய், நிலத்தடி நீரே இல்லாத கருமைப்பகுதியாக அறிவிக்கப்படும் அபாயக்கட்டத்தில் ஆண்டிப்பட்டிப் பகுதி உள்ளது என நீரியல் வல்லுனர்கள் கூறுகின்றனர்.

✱நிலத்தடி நீர் பற்றாக்குறையால் சுமார் 25,000 ஹெக்டேர் நிலம் மானாவாரி நிலமாக மாறிவிட்டது. 15,000 ஹெக்டேர் நிலம் நிரந்தரத் தரிசு நிலமாகி விட்டது. தேனி மாவட்டத்திலேயே அதிகத் தரிசு நிலமுள்ளது ஆண்டிப்பட்டி தாலுக்காதான்.

✱வாக்காளர் பட்டியலில் முறைகேடு பற்றிய திமுகவின் புகாருக்கு அதிமுகவின் பதில்: ''விவசாயம் பொய்த்துப் போனதால் சுமார் 25,000 பேர் ஊரை விட்டு வெளியேறி கேரளா, திருப்பூர், கோவை, ஆந்திர ஊர்களுக்குச் சென்று விட்டார்கள். இவர்களின் பெயர்கள் பட்டியலில் இருப்பதைப் பார்த்துத்தான் திமுகவினர் கள்ள ஓட்டு என்றும், நாங்கள் முறைகேடு செய்துவிட்டோம் என்றும் சொல்கிறார்கள்!'' (பஞ்சம் பிழைக்கப் போன புள்ளி விவரம் மட்டும் உண்மைதான்)

✱வாய்ப்பிருந்தும் அரசால் புறக்கணிக்கப்படும் நீர்வளத்திட்டங்கள்: திப்பரேவு அணைத்திட்டம்; தெப்பம்பட்டி அணைத்திட்டம். இவற்றின் திட்ட மதிப்பீடு (3+2.5) வெறும் 5.5 கோடிதான்.

✱கைத்தறி மற்றும் விசைத்தறி நலிவால் வெளியூர்க்காரர்களுக்கு விலை பேசப்பட்டு வருகிறது. தினசரி 30 ரூபாய்க்கு மேல் கூலி கிடைப்பதில்லை.

## கட்சிகளின் அணுகுமுறை

✱அதிமுக, தேவர் சமூகத்தவர்களை மட்டுமே குறிவைத்துள்ளது. தேவர் சாதியினர் அதிகமுள்ள கிராமங்களைத் தேர்வு செய்து வீடுவீடாகக் காலண்டர் தருவது (ஜெயா + இரட்டை இலை படத்துடன்), விசேச வீடுகளுக்குச் சென்று செய்முறை செய்வது, (T.T.V. தினகரன் எம்.பி தவறாமல் கலந்து கொண்டு 500 ரூபாய் மொய் எழுதுகிறார்) வங்கிக் கடன்கள் மற்றும் பால்மாட்டு லோன் வாங்கித் தருவது, ஊருக்குள் சாக்கடை வசதி, குடிநீர், சமுதாயக்கூடம் கட்டுவது ஆகியவை மூலம் தேவர் சாதியினரைத் தக்க வைத்து வருகின்றனர். ஆதிதிராவிட மாணவிகளுக்கான சைக்கிள் வழங்கும் திட்டத்தில் முறைகேடாக தேவர் சாதியினருக்கும் கொடுத்துள்ளனர்.

✱ 25.01.02 ம் தேதி நடந்த அ.தி.மு.க செயல்வீரர்கள் கூட்டத்தில் அமைச்சர் துரைராஜ் பேசியது:

''தொண்டர்கள் யாரும் தண்ணி அடித்துவிட்டு கேன்வாஸ் போகக் கூடாது.''

**தினகரன் எம்.பி:**

''அதிகமான ஓட்டுகளை கட்சிக்கு வாங்கிக் கொடுக்கும் உள்ளூர் நிர்வாகிகளுக்கு உரிய பரிசு வழங்கப்படும். அம்மா கையால் இந்தப் பரிசை வழங்க ஏற்பாடு செய்கிறோம்.''

**அறிவிக்கப்படாத உண்மை:**

2 கிராமத்துக்கு ஒருவர்வீதம் வெளித் தொகுதி அதிமுக நிர்வாகிகளை நியமித்து, அவர்கள் மேற்கண்ட நிபந்தனைகளைச் செய்து முடிக்க வேண்டும். இல்லையென்றால் அவரின் தற்போதைய பதவி பறிக்கப்பட்டு போட்டி அணியினருக்கு கொடுக்கப்படும் என எச்சரித்துள்ளார்.

**மலைச்சாமி எம்.பி:**

''தேர்தல் கமிசன் அதிகாரிகள் வர்றான் - போறான். கண்ணுல ஏதாவது சிக்குனா பிரச்சனையாக்கி விட்டுறலாம்னு திரியுறானுக. அவனுகள நானும், தினகரனும் பாத்துக்கறோம். நீங்க கவலைப்பட வேணாம்.''

✱ தாழ்த்தப்பட்டோரிடம் கிருஷ்ண சாமிக்கு ஆதரவு - எதிர்ப்பு என 2 பிரிவாக உள்ளனர்.

✱ மதிமுக நாய்க்கர் சாதிக்கட்சியாகவே தொகுதியில் உள்ளது. அதிமுக - திமுக எதிர்ப்பு வேசம் போடும் வைகோ சவடால்கள் எதுவும் தொகுதி ஆதரவாளர்களிடம் இல்லை.

✱ அதிமுகவின் அராஜகங்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் தி.மு.கவினர் பரிதவிப்பது தெளிவாகத் தெரிகிறது. உதய சூரியன் சின்னத்தை தொகுதியில் தேடிப் பிடிக்க வேண்டியுள்ளது. கிராம அளவிலுள்ள குட்டித் தலைவர்களை (காங் + த.மா.க + கம்யூ) அதிமுக விலைக்கு வாங்கி வருகிறது.

✱ தி.மு.க. பிரச்சாரத்திலும் தோல்வி பயமே உள்ளது. ''ஜெயலலிதா ஜெயித்தால் முக்குலத்தைச் சேர்ந்த பன்னீர் செல்வம் முதலமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்படுவார். எனவே எங்களுக்கு ஓட்டுப் போடுங்கள்'' என்றுதான் அதிகமாகப் பிரச்சாரம் செய்கின்றனர்.

✱கிருஷ்ணசாமி நிற்காமல் இருந்தால் மிகக் குறைந்த ஓட்டுவித்தியாசத்தில்தான் ஜெயா வெற்றிபெற முடியும் என்பது உண்மை.

✱காங்கிரசுக்கு, தமாகாவுக்கு செல்வாக்கு என்பது கிடையாது. போலி கம்யூனிஸ்டுகளுக்கு ஓரளவு உண்டு. மக்களின் ''மனசாட்சிப்படி ஓட்டுப் போடு''மாறு பேசி வருகிறார்கள். தங்களது மனசாட்சி என்ன சொல்கிறது என்று மக்களிடம் கூறுவதில்லை.

www.padippakam.com

# ஆண்டிப்பட்டி தேர்தல்களம்-மக்களிடம் நேர்காணல்

## சுப்புலாபுரம்

(ஊர்க் கோயில் திண்ணை யில் அமர்ந்திருந்த பெரியவர்களிடம்)

**நம் நிருபர்:** உங்க தொகுதி தேர்தல் நிலவரம் எப்படிங்கய்யா இருக்கு?

**பொது மக்கள்:** சொல்றதுக்கு என்னங்க இருக்கு. எங்க ஊர்ல முக்கால்வாசி ஓட்டு அ.தி.மு.க வுக்குத்தான். பஸ்சார்ஜ், கரண்டுபில் கூட்டுனதுனால பொம்பளங்க ஓட்டு கொஞ்சம் குறையும்னு பயப்படுறோம். கிருஷ்ணசாமி நிக்கிறதுனால எஸ்.சி ஓட்டு பிரியும். அதனால அம்மா கண்டிப்பா ஜெயிக்கும்.

**நம் நிருபர்:** அம்மா ஜெயிச்சு வந்தா ஏறின பஸ் கட்டணம், ரேசன் அரிசிவிலை, மின்கட்டணம், இதுவெல்லாமல் குறையுமுன்னு நினைக்கிறீங்களா?

**பொது மக்கள்:** இதையெல்லாம் எங்க அம்மா மட்டும்தான் கூட்டுறாங்களா, கருணாநிதி கூட்டலையா? போனதடவ தி.மு.க எம்.எல்.ஏ தான் இருந்தாரு. எங்க ஊருக்கு ஒன்னுமே செய்யல. கருணாநிதி 5 வருசத்தில எங்களுக்கு என்ன செஞ்சாரு. என்ன விலைவாசி ஏறினாலும் நாங்க அதிமுகவுக்குத் தான் ஓட்டுப் போடுவோம்.

**நம் நிருபர்:** இந்த ஊர்ல நிறைய தறி ஓடுறதா சொன்னாங்க. தொழில் நிலைமையெல்லாம் எப்படி இருக்குங்க?

**பொது மக்கள்:** தறி ஓட்டுறதுதான் இங்க முக்கிய வேலை. ஊருல பாதிப்பேரு அதை நம்பித் தான் பிழைக்குறாங்க. விவசாயத்துல தண்ணி வற்றிப் போனதால இதைவிட்டா ஊர்ல வேற வழியில்லீங்க.

**தறி உரிமையாளர்:** தொழிலும் ரொம்ப நசிஞ்சுப் போச்சுங்க. எங்களுக்குக் கொடுத்த கோட்டாவை விசைத்தறிக்கு ஒதுக்கிட்டாங்க. வெளிநாட்டிலிருந்து நூல், துணி இறக்குமதி செய்யுறதால எங்க துணிய வாங்கநாதியில்லாமக் கெடக்குது.

**தொழிலாளி:** ஒரு நாளைக்கு 30 ரூபாய்க்குதான் நெய்யுறோம். இதுக்குமேல தறிய டிக்கிறதுக்கு வேலையுமில்லை, ரேசன் அரிசிக்கே பெரும்பாடுபட வேண்டியிருக்கு.

**நம் நிருபர்:** இந்த நிலைமைய அம்மா ஜெயிச்சுவந்தாமாத்திடும்னுநம்புறீங்களா?

**தொழிலாளிகள்:** யாரு ஜெயிச்சுவந்தாலும் இதை மாத்த மாட்டாங்க.

**நம் நிருபர்:** இப்படி நம்ம பிழைப்புக்கு வழி பண்ணாத கட்சிகளுக்கு ஏன் ஓட்டுப் போடுறீங்க.

**தொழிலாளர்கள்:** ஓட்டுப் போடாட்டி செத்ததுக்கு அர்த்தமுங்குறாங்க. ரேசன் கார்டு தர மாட்டானாம். இதுக்குதான் ஓட்டுப் போட வேண்டியதாருக்கு.

**நம் நிருபர்:** உலகவங்கின்னு கேள்விப்பட்டிருக்கீங்களா?

**பொதுமக்கள்:** ஒரு கம்யூனிஸ்டுக் கட்சிக் காரன் இருக்கான். எப்பப்பாத்தாலும் இதத்தான் பேசுவான். நல்ல விவரமான ஆளுங்க.

**நம் நிருபர்:** அப்படி விவரமான ஆளுக்கு ஓட்டுப்போட வேண்டியதுதானே?

**பொதுமக்கள்:** வெவரமான ஆளுகதான் எவன் பின்னாலயாவது ஒட்டிக்கிட்டுத் தானே திரியுறாங்க. அவங்களுக்குப் போட்டு என்ன ஆகப் போகுது?

## பொம்மிநாயக்கன்பட்டி

(தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமுள்ள ஊர்)

ஒரு டீக்கடையில்....

> இப்படி நம்ம பிழைப்புக்கு வழி பண்ணாத கட்சிகளுக்கு ஏன் ஓட்டுப் போடுறீங்க?
>
> ஓட்டுப் போடாட்டி செத்ததுக்கு அர்த்த முங்குறாங்க. ரேசன் கார்டு தர மாட்டானாம். இதுக்குதான் ஓட்டுப் போட வேண்டிய தாருக்கு.

**நம் நிருபர்:** இந்த ஊருல கட்சிகள் நிலவரம் எப்படிங்க?

**விவசாயிகள்:** எங்க ஊர்ல 1500 ஓட்டு இருக்கு. 500 பேருக்கு மேல வெளியூரு போயிட்டாங்க. மீதி இருக்குறதுல 800 ஓட்டு புதிய தமிழகத்துக்குத் தான் போடுவோம்.

**நம் நிருபர்:** அந்த 500 பேரு ஏன் வெளியூரு போனாங்க?

**விவசாயிகள்:** விவசாயத்துல வேலை இல்லாமத்தான் கேரளா, திருப்பூர்ன்னு போயிட்டாங்க. கிணத்துல தண்ணியில்ல. வைகை அணை எங்க தொகுதியில இருந்தாலும் எங்களுக்குப் பயனில்ல. மழைத் தண்ணியத் தேக்கி வைக்கிற குளம்கூட தூர்வாராம கிடக்கு.

**நம் நிருபர்:** சரி... கிருஷ்ணசாமிக்கு ஓட்டுப் போட்டாலும் தோற்கத்தான் போறாரு. அதிமுகவுக்கு ஓட்டைப் போட்டுட்டு ஊருக்குச் சலுகைய வாங்கிட்டுப் போக வேண்டியதுதானே?

**விவசாயிகள்:** அதிமுக தேவர் சாதிக் காரங்க கட்சி. தி.மு.க.வுலையும் தேவர் சாதிக்காருதான் நிக்குறாரு. இவுங்களுக்கு ஓட்டுப் போட்டாலும் எங்களுக்கு எந்த நல்லதும் கிடைக்காது. எங்க சாதிலயும் பொறுக்கித் தின்னிப் பயலுக ரெண்டுபேரு அவங்ககூடத் தான் திரியுறாங்க. ஆனாலும் தோற்றாக்கூட நம்மாளுக்குத்தான் ஓட்டுப் போடுவோம்.

**நம் நிருபர்:** உலக வங்கி - மத்தியஅரசு, மாநில அரசுகளின் நிதி நெருக்கடி, மறுகாலனியாதிக்கம் பற்றிச் சுருக்கமாகச் சொல்லிவிட்டு கருத்து கேட்டதற்கு

**விவசாயிகள்:** நீங்க பத்திரிக்கைக்காரங்க - அதனால நெறைய விசயத்தைச் சொல்றீங்க. அதெல்லாம் எங்களுக்குத் தெரியாது. எங்க ஊர் நிலைமையிலேருந்துதான் நாங்க பார்க்க முடியும்.

## ஆசாரிப்பட்டி

(ஒரு டீக்கடையில் உட்கார்ந்திருந்த மக்களிடம்)

**நம் நிருபர்:** உங்க தொகுதியில ஜெயலலிதா நிக்குறாங்க. முதலமைச்சரைத் தேர்ந்தெடுக்கப் போற தொகுதியின்னு



படிப்பகம்

www.padippakam.com

பெருமையா எல்லாரும் பேசுறாங்க. நீங்க என்ன சொல்றீங்க?

**பொது மக்கள்:** எப்படியும் ஜெயிக்கனுங்குறதால, ஆளும் கட்சி செல்வாக்கப் பயன் படுத்தி நிறைய வேலை செய்யுறாங்க. எங்க ஊருக்குக் கூடப் புதுசா சமுதாயக்கூடம் கட்டு றாங்க பாருங்க... (விறுவி றுப்பாக வேலை நடக்கும் கட்டிடத்தைக் காட்டி னார்கள்)

**நம் நிருபர்:** அப்போ... உங்க ஓட்டுப்பூராம் அம்மாவுக்குத்தானா?

**ஒரு திமுககாரர்:** இதெல்லாம் தேர்தல் வேசங்க. எங்க ஊரு மக்கள் இதுக் கெல்லாம் மயங்கமாட்டாங்க. 80 சதவீதம் ஓட்டு திமுகவுக்குத்தான் விழுகும்.

**நம் நிருபர்:** தாழ்த்தப்பட்டவங்க அதிகமாக இருக்குறீங்க. கிருஷ்ணசாமிக்கு ஓட்டுப் போடலையா?

**திமுககாரர்:** கிருஷ்ணசாமி ஜெயாகிட்ட காசை வாங்கிக்கிட்டு திமுகவை தோற்கடிக் கணும்னே நிக்குறாரு. இந்த ஆளு நிக்க லைன்னா எங்க தாழ்த்தப்பட்ட மக்களோட 42,000 ஓட்டுல முக்கால்வாசி திமுகவுக் குத்தான் விழுகும். ஆனால் இப்ப 15,000 ஓட்டை கிருஷ்ணசாமி பிரிச்சிடுவாரு. இத னாலதான் கிருஷ்ணசாமிக்குக் காசைக் கொடுத்து நிப்பாட்டிருக்கு (அங்கு இருந்த வர்கள் - இதை ஆமோதிக்கிறார்கள்)

**நம் நிருபர்:** 'கம்யூனிஸ்டு' கட்சிக்காரங்க மாதிரி ஆளுங்கட்சிய கண்டிச்சு இந்த தேர்தலைப் புறக்கணிக்கலாமே. இப்படிக் கூட உங்க எதிர்பைக் காட்டலாமே!

**பொதுமக்கள்:** கண்டிப்பா தோற்கத்தான் போறோம். பிறகு எதுக்குப் பணத்தைச் செலவு பண்ணிக் கத்தணும்னுதான் அவங்க நிக்கல. எதிர்ப்பைக் காட்டு றோம்ன்றது ஏமாத்துற பேச்சு. முன்னால கூட்டு சேர்ந்து அம்மாவை ஜெயிக்க வைச்சாங்க. இப்ப தேர்தல்ல விலகி நின்னு ஜெயிக்க வைக்கப் போறாங்க.

**நம் நிருபர்:** திப்பரேவு அணைத் திட்டம் நிறைவேறினா இந்த ஏரியா விவசாயத் துக்கு பெரிய உதவியா இருக்கும்னு சொல்றாங்களே?

**பொது மக்கள்:** ஆமாம் நல்லதுதான். எம்.ஜி.ஆர் காலத்துலேர்ந்து எல்லாரும் சொல்றாங்க. எல்லாத் தேர்தல்லையும் எல்லாக்கட்சியும் வாக்குறுதியாச் சொன் னாங்க. இன்னிக்கு வரைக்கும் நடக்கல.



**மீண்டும் ஆயிரம் கார் பவனி!**

**நம் நிருபர்:** தி.மு.க ஆட்சியிலே என்ன நடந்துச்சு?

**தி.மு.க.காரர்:** கலைஞர்கிட்ட பலமுறை முறையிட்டோம் சட்டசபையில எங்க எம்.எல்.ஏ பேசினாரு. நிதி நெருக்கடியி னால அதைச் செய்ய முடியல. (சமா ளிக்கும் தோரணையில் சுருதி குறைத்துப் பேசினார்.)

## சுப்புலாபுரம்

(ஒரு கடைவாசலில் இருந்தவர்களிடம்)

**நம் நிருபர்:** தேர்தல் நிலவரம் எப்படிங்க இருக்கு?

**ஒரு இளைஞர்:** தேர்தல் நல்லாத்தான் நடக் குது. இந்த அம்மா 6 மாதத்துக்கு ஒரு தடவை பதவியை ராஜினாமா செஞ்சிட்டு ஒவ்வொரு தொகுதியா மாறி மாறி நின்னா நாட்டுல பணப்புழக்கம் தன்னால அதிகமா யிடும். ஊருக்கு 10 பயலுகளுக்கு வேலையும் கெடைக்கும் பாருங்க.

**நம் நிருபர்:** என்னங்க இவ்வளவு வெறுப்பா பேசுறீங்க. முதலமைச்சரைத் தேர்ந்தெடுக்கப் போறோம்னு பெருமையா பேசிக்கிறாங்க.

**இளைஞர்:** ஆமா... அதுல ஒண்ணும் குறைச்சல் இல்ல. யாரைத் தேர்ந்தெடுத்து என்ன ஆகப்போகுது.

**50 வயது பெரியவர்:** அய்யா, இந்த ஊருல விவசாயமே அழிஞ்சி போச்சு. இளவட்டம் பயலுக பூராம் திருப்பூரு, ஆந்திரான்னு பிழைக்கப் போயிட்டாங்க. என்னய மாதிரி கிழடுகள் தான் வீட்டைக் காத்துக்கிட்டுக் கெடக்கிறோம்.

இந்தக் கட்சிக்கா ரங்க ரோடு போடுறோம், கரண்டு போடுறோம்ன் றாங்க. ஆனா விவசாயி கள மட்டும் நடுத்தெரு வுல விட்டுட்டுப் போயிரு வாங்க. இவங்களும் சொரணையே இல்லாம ஓட்டுப் போடப் போயிரு வாங்க...

**இளைஞர்:** இந்த ஊருக் குள்ள ஒழுங்கான சாக்கடை வசதியே இல் லீங்க. ஆனா எங்க ஊர் வழியா ஓட்டுக் கேட்டு வர்றதுக்காக ஒரு அடி உய ரத்துல புதுரோடு போடுறாங்க. இனி ரோடு மட்டத்துக்கு எங்க வாசல்படியையும் தூக்கியாகணும். வெட்டியா நாங்க 200, 300 ரூபாய் இதுக்குச் செலவு பண்ணனும்.

**நம் நிருபர்:** திப்பரேவு அணைத் திட்டத்து னால இந்த ஊருக்குப் பலனிருக்குமா?

**பெரியவர்:** அது வந்தாதான் இங்க விவசா யமே நடக்கும். கூலிவேலைக்காகப் பொம்பளைக தினமும் 10, 15 கி.மீ பஸ்ல போயி வர்றாங்க. இதைப்பத்தி எந்தக் கட்சிக்காரனும் கவலைப்படுறதில்லை.

தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்னு பலமா பேசுனாங்க தேனி மாவட்டத்துல ஆண்டிப்பட்டி தாலுகாவிலதான் அதிகமா தரிசு நிலம் இருக்குன்னு கலக்டரும் சொன்னாரு. ஆனா, இன்னிக்கு வரைக்கும் ஒரு மேம்பாட்டையும் காணோம்.

**நாம்:** அப்போ.... உங்க ஓட்டு தி.மு.க.வுக்குத்தானா?

**பெரியவர்:** எல்லாப்பயலும் ஒண்ணுதான். எங்க நாய்க்கர் சாதி ஓட்டு பூராவும் ம.தி.மு.க வுக்குத் தான். இவங்களும் பெரிசா எதுவும் செய்யப் போறதில்லை. போன தேர்தல்ல தேவர் சாதிக்காரங்க எங்கள என்ன கிழிச்சுப்புட்டாங்கனு கேவ லமா பேசிட்டாங்க. அதுக்காகவே இந்த தடவை நாங்க மதிமுகவுக்குத் தான் ஓட்டுப் போடப்போறோம்.

## கண்டமனூர்

(அ.தி.மு.க தேர்தல் அலுவலகத்தில்)

**நாம்:** தொகுதி முழுக்க வீடுதவறாம விளம் பரம் இருக்கே. வெளியூருக்காரங்க வந்து



படிப்பகம்

www.padippakam.com

எழுதினதா மக்கள் சொல்றாங்க.

**அ.தி.மு.க. பெரியவர்:** சும்மா பொய் சொல றாங்கய்யா. எங்கக் கைக்காசை 50,100 ரூபாய்னு போட்டுச் செஞ்சிருக்கோம். இன்னும் தட்டி, பேனர்னு நிறைய இருக்கு. அதையெல்லாம் கட்ட வேணாம்னு கட்சி யில சொல்லிருக்காங்க.

(பத்திரிக்கைக் காரர்கள் என்பதால் 'விவரமாகப்' பொய் சொல்கிறார்)

**நாம்:** சமீபத்தில் கட்டண உயர்வு, விலை வாசி உயர்வுனால மக்கள் பாதிக்கப்பட்டு இருக்காங்க. அதை மூடிமறைச்சு மக்களை ஏய்க்கத்தான் தொகுதி முழுக்க பல வேலைகள் நடக்குதுன்னு சொல்றாங் களே?

**இன்னொருவர்:** இதெல்லாம் எதிர்கட்சிக் காரங்க சொல்ற பொய்யிங்க. கட்டண உயர்வையெல்லாம் நாங்களோ, மக்களோ பெரிசா எடுத்துக்கலை. கண்டிப்பா எங்க அம்மாதான் ஜெயிக்கப் போறாங்க. நீங்களே பார்க்கத்தானே போறீங்க!

**அருகிலிருந்த ஒருவர்:** அய்யா, இந்தத் தொகுதியில ஜெயலலிதா ஜெயிச்சே ஆகணும். தோத்துப் போனா இந்தத் தொகுதிக்கு கால் ரூபாகூட ஒதுக்க மாட்டாங்க. நாலு நல்லது நடக்கனும்னாவே, இந்த அம்மாவை ஜெயிக்க வைக்கிறது தவிர வேற வழியில்லை.

**மற்றவர்கள்:** ஆமாமா... இது தெரியாம தி.மு.க.காரங்க பேசிக்கிட்டுத்திரியுறாங்க.

**நம் நிருபர்:** ஆண்டிப்பட்டிக் காரன்லாம் படிக்காதவன், கேணப்பயலுகள்... என்ன செஞ்சாலும் அ.தி.மு.கவுக்குத் தான் ஓட்டுப் போடுவாங்கன்னு பேசுறாங்களே, அதுக்கு என்ன சொல்றீங்க?

**பெரியவர்:** இவங்க கேணப்பயலுகதான். யாருஇல்லைன்னது.

(ஒரு டீக்கடையில் இருந்த அதிமுக காரரிடம்)

**நம்நிருபர்:** ரேசன் அரிசி விலை கூடுனது, புதுரேசன் கார்டு பிரச்சனையால மக்கள் அதிருப்தியா இருக்காங்களே... உங்க வெற்றி வாய்ப்பு எப்படி இருக்கு?

**அதிமுக நபர்:** எல்லாத்தையும் அந்தக் களவாணிப்பய (கருணாநிதி) அள்ளிக்கிட்டுப் போயிட்டான். வேற என்ன செய்ய முடியும்? அவனப் பத்தி பத்திரிக்கைக் காரங்க எழுத மாட்டேன்றீங்களே. மக்கள் அதிருப்தின்றதெல்லாம் பொய். மக்கள் எங்கப் பக்கம்தான் இருக்காங்க.

> இந்த ஊருக்குள்ள ஒழுங்கான சாக்கடை வசதியே இல்லீங்க. ஆனா எங்க ஊர் வழியா ஓட்டுக் கேட்டு வர்றதுக்காக ஒரு அடி உயரத்துல புதுரோடு போடுறாங்க. இனி ரோடு மட்டத்துக்கு எங்க வாசல் படியையும் தூக்கியாகணும். வெட்டியா நாங்க 200, 300 ரூபாய் இதுக்குச் செலவு பண்ணனும்.

**நம் நிருபர்:** விவசாய நிலமையெல்லாம் பரவாயில்லீங்களா?

**அதிமுக நபர்:** தண்ணியில்லாம நிலம்பூராவும் காஞ்சு கெடக்கு. தண்ணி வசதி இருக்குற 3,4 பேருதான் விவசாயம் பண்றாங்க. ஊருல பாதிப்பேரு பஞ்சம் பிழைக்க வெளியூரு போய் வர்றாங்க.

**நம் நிருபர்:** திப்பரேவு அணைத் திட்டம் என்னாச்சு?

**பக்கத்திலிருந்தவர்:** அது அப்படியே கெடக்கு. யாரும் கண்டுக்குறதில்ல.

**அதிமுக நபர்:** எங்க அம்மா ஜெயிச்சு வந்தா கண்டிப்பா செய்வாங்க.

**நம் நிருபர்:** ஏண்ணே... 90 கோடி ரூபாயை இறைச்சுவிட்டு ரோடு, சமுதாயக்கூடம், வீடுதவறாம விளம்பரம்னு செலவு பண்றீங்களே. அதுல ஒரு 3 கோடி ரூபாயை ஒதுக்குனா திப்புரேவு திட்டத்தையே முடிச்சுப்புடலாமே.

**அதிமுக நபர்:** ஆமாமா... செய்யலாம். செஞ்சுருவோம்.

**நம் நிருபர்:** ரோடு, சமுதாயக் கூடம்னா காண்ட்ராக்ட் காரனுக்கு லாபம்! காருல போறவனுக்கு வசதி! திப்பரேவு தண்ணியிலதான நம்ம பொழப்பு இருக்கு.

**அதிமுக நபர்:** ம்ம்... ம்ம்... (சிரிச்சுக்கிட்டே தலையாட்டுகிறார்.)

**நம் நிருபர்:** என்னண்ணே... கலைஞரு, ஜெயலலிதானு அடுத்தவங்களைப்பத்திப் பேசும்போது சத்தமாப் பேசுனீங்க. இப்ப நம்மப் பொழப்பைப் பத்திப் பேசும்போது சத்தத்தையே காணோம்.

**டீக்கடைக்காரர்:** நீங்க சொல்றதுதானப்பா நியாயம். இப்படி எவன் செய்யப் போறான்?

(**அதிமுக நபர்:** வாயை மூடிக் கொண்டார்.)

**நம் நிருபர்:** இப்படி யோசனை இல்லாம கட்சிக்காரங்க பின்னாடி கண்ண மூடிக்கிட்டு போறதாலதான் ஆண்டிபட்டிகாரன்னா கேண - கிறுக்குனு ஊர்ப்பயலுக பேசுறாங்க...

**பக்கத்திலிருந்த இரண்டுபேர்:** பதில் பேசாமல் தலையை அசைத்து ஆமோதித்தார்கள்.

தங்களின் அன்றாட கேவலமான வாழ்க்கைக்கும், தங்களை இந்த இழிவு நிலைக்குத் தள்ளிவிட்ட அரசியல் கட்சிகளுக்கும் உள்ள சங்கிலித் தொடர்பை அறியாமல் வாழும் அப்பாவி உழைக்கும் மக்களை மூலதனமாக்கி முதலமைச்சராகப் போகும் ஒரு அரசியல் கழிசடையை நினைத்து மனக்குமுறலுடன் திரும்பினோம். ஆண்டிப்பட்டி மக்களின் அறியாமை, சாதி உணர்வுகளை விலக்கிவிட்டு அவர்களின் விவசாயம், கைத்தறி, வாழ்க்கையின் நெருக்கடிகளைப் பார்த்தால், குடிசைகள் குமுறிக் கொண்டிருப்பதைக் கேட்க முடிந்தது.

● விவசாயிகள் விடுதலை முன்னணி, கம்பம்.

**ஜெயாவின் காருக்காகப் போட்ட சாலையா ஊருக்காகப் போடும் சாலையா?**





படிப்பகம்

www.padippakam.com

### அனைத்திந்தியப் புரட்சிப் பண்பாட்டு மையத்தின் எட்டாவது மாநாடு

# உலகமயமாதல் - காவிமயமாதலுக்கெதிராக!

அகில இந்தியப் புரட்சிப் பண்பாட்டு மையத்தின் (அஇபுபமை) 8-வது மாநாடு ஆந்திராவின் ஐதராபாத் நகரில் உள்ள அம்பர்பேட்டில் தியாகத் தோழர் சுதாகர் நகரில், விலாஸ் கோக்டே அரங்கில் சனவரி 13, 14 நாட்களில் நடைபெற்றது.

ஒருபுறம் சந்திரபாபு நாயுடுவின் அமெரிக்கச் சரணாகதி, அடிவருடல், துதிபாடல், ஹைடெக் சாம்ராச்சியமுமாக வண்ணமயமான ஆந்திரம்; மறுபுறம் போலீசின் காட்டுத் தர்பார் துப்பாக்கி ராச்சியம் - புரட்சியாளர் படுகொலை, உலகமயம், தாராளமயம் தனியார்மயத்தால் விவசாயிகள் தற்கொலை - வேலை இல்லாத் திண்டாட்டம் - வறுமை - பசி பஞ்சம் பட்டினி இவற்றால் தீய்ந்து கருகிக் கிடக்கும் ஆந்திரம்.

இதன் ஊடே, கஷ்டஜீவிகளின் இதயக் கொதிப்பை செங்கொடிகளின் அணி வகுப்பாகத் தீட்டுவதற்காகக் கூட்டிய பண்பாட்டு எழுச்சிமிக்க அரங்கில் இரண்டு நாள் நிகழ்ச்சிகள் அ.இ.பு.ப.மையத்தால் நடத்தப்பட்டன. அரங்கில் ஆயிரக் கணக்கில் திரண்டிருந்த மக்கள் கூட்டத்தில் தொழிலாளர்களும், விவசாயிகளும், மாணவர்களும், எழுத்தாளர்களும், அறிவுஜீவிகளும், பாட்டுக்காரர்களும்;கலைஞர்களும் ஒன்றாகக் கலந்திருந்தார்கள். மேடையில் முழங்கிய பல பாடல்களை அரங்கில் கூடியிருந்தவர்கள் கூட்டிசையாக எதிரொலித்தார்கள்.

கருத்தரங்கின் தலைப்பு ''உலகமயமாதல் - காவிமயமாதல் - பண்பாட்டு அடக்குமுறை''. பேச்சாளர்களாக வந்திருந்தவர்கள் இம்மூன்று பொருள் பற்றியும் பல விவரங்களைத் தொட்டுப் பேசினார்கள். செப்டம்பர் 11 - ல் அமெரிக்கா தாக்கப்பட்டது, ஆப்கன மீதான அமெரிக்க ஆக்கிரமிப்புப் போர், மூன்றாம் உலக நாடுகளின் எழுச்சிமிகு போராட்டங்கள், இந்தியாவில் சாதி ஒடுக்குமுறைகள் மற்றும் சாதி ஒழிப்பின் உடனடித் தேவைகள், இந்து மத வெறியின் திட்டங்களும் வெறிச் செயல்களும், உழைக்கும் மக்களுக்காகப் போராடுபவர்களை ஒடுக்க 'பொடோ' போன்ற அடக்குமுறைச் சட்டங்கள் பாய்வது போன்ற பல விஷயங்களைப் பேச்சாளர்கள் ஆராய்ந்தார்கள்.

புரட்சிகரக் கலைஞர்களின் அணி வகுப்பில் தோழர் கத்தார்.



மாநாட்டு வரவேற்புக் குழுவின் சிறப்புத் தலைவராக இருந்த முற்போக்கு எழுத்தாளர், தெலுங்குக் கவி காளோஜி நாராயணா துவக்க உரை நிகழ்த்தினார். இவரது வயது 92. இன்றைய அரசியல் நிலவரம் எப்படிப் பாசிச மயமாகி வருகிறது என்றும் அதில் மக்கள் கலைஞர்களின் போராட்டப் பணி, பங்கு பாத்திரம் ஏன் முக்கியமானது என்றும் தன் ஒரு மணி நேர உரையில் எளிய தெலுங்கில் கணீரென்ற குரலில் விளக்கினார்.

அடுத்துப் பேசிய ஆர்.எஸ். ராவ், ஹரகோபால் இருவரும் இரு விஷயங்களைத் தெளிவாக்கினார்கள். ஒன்று: தாங்கள் மெத்தப் படித்த பேராசிரியர்கள் என்ற நிலையிலிருந்து இங்கு பேச வரவில்லை; இரண்டு: தொழிலாளர் - விவசாயிகள் அச்சில் சுழலும் இந்தியப் புரட்சியே உடனடித் தேவை. கடினமான பொருளாதார ஆய்வுகளையும் எளிமையாக்கி இருவரும் தெலுங்கிலேயே பேசினார்கள்.

முதல் நாளின் இரண்டாம் அமர்வில் *மக்கள் கலை இலக்கியக் கழகத்தின்* (தமிழ்நாடு) கட்டுரையும், *புரட்சிகர எழுத்தாளர் சங்கத்தின்* (ஆந்திரம்) கட்டுரையும், மற்றும் அட்சரம், அரசம், தெலிங்கானா மாணவர் சங்கம் போன்ற அமைப்புக்களின் கட்டுரைகளும், வாழ்த்துச் செய்திகளும் இடம் பெற்றன.

மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் கட்டுரை கீழ்க்கண்ட விஷயங்களை மையமாக முன்வைத்தது:

உலகமயமாதல் என்று கூறுபவர்களில்



படிப்பகம்

www.padippakam.com

பலர் அது ஏகாதிபத்தியத்தின் கூடுதல் அளவிலான சுரண்டல் என்று மட்டுமே பொருள் கொள்கிறார்கள். ஆனால் உலகு தழுவிய சாம்ராச்சியத்தை அமைக்கும் ஏகாதிபத்தியம் புதியதொரு கட்டத்தில் நுழைந்துள்ளது. அதுவே மறுகாலனி ஆதிக்கம். மூலதனம், உற்பத்தி, வர்த்தகம், உழைப்புப் பிரிவினை அனைத்தும் உலகு தழுவிய பரிமாணத்தை எட்டியுள்ளன. எனவே, உலகமயமாதல் என்பதன் பின்னால் உள்ள அரசியலை விளங்கிக் கொள்ள வேண்டும்.



அதேபோல, 'காவிமயமாதல்' என்பதன் பின்னால் உள்ள சித்தாந்தத்தை விளங்கிக் கொண்டு அதற்கெதிராகப் போரிட வேண்டும். அது - பார்ப்பனீய இந்து மதவெறிப் பாசிசம்; அது நாடு மறுகாலனியாதலை, மத அடிப்படைவாதத்தை, மதவெறியை 'தேசீயம்' என்று அழைக்கிறது. இந்தப் போலி தேசியம் பாசிசமே தவிர வேறல்ல.

எனவே, மறுகாலனியாதிக்க எதிர்ப்பு, பார்ப்பன இந்து மதவெறிப் பாசிச எதிர்ப்பு இரண்டையும் வரையறுப்பதே முக்கிய அரசியல் செயல் தந்திரம்; இதுவே இன்றைய உடனடித் தேவை.

ஆந்திரத்தின் புரட்சிகர எழுத்தாளர் சங்கம் பாட்டாளி வர்க்கத்தின் முன் உள்ள பிரச்சனைகளைப் பின் வருமாறு தனது கட்டுரையில் விவரித்தது:

முதலாளித்துவம் ஏகாதிபத்தியமாக வளர்ச்சியுறும் கட்டத்தில் பல சிக்கல்களைச் சந்திக்க நேருகிறது; உலகமயமாதல் என்ற முழக்கத்தினை முன்வைத்து உலகு தழுவிய உழைப்பைச் சுரண்ட முயல்கிறது ஏகாதிபத்தியம்; தற்காலிகமாக நெருக்கடியிலிருந்து தப்ப முயல்கிறது; புதிய தாராளவாதத்தையும்,

சந்தையையும் முன் தள்ளி ஒரு புதிய அரசியல் மூல உத்தியை மக்கள் முன் வைக்கிறது. இந்து மதவெறிப் பாசிசத்துக்குப் பலியாகாமல், ஏகாதிபத்தியத்தின் சதி வலைக்குள் சிக்கி விடாமல் உழைக்கும் மக்கள் விடுதலை பெறப் போராட வேண்டும். பல தேசிய இனங்களின் எதிர்ப்புப் போராட்டப் பாரம்பரியங்களைப் புதிய ஜனநாயகக் கலாச்சாரப் புரட்சியில் தமதாக்கிக் கொண்டு புரட்சியை முன்னெடுக்க வேண்டும்.

இவ்விரண்டு கட்டுரைகள் தவிர மற்ற ஜனநாயக அமைப்புக்கள் அவர்களது கட்டுரைகளைச் சுருக்கமாக அறிமுகப்படுத்தினார்கள்.

மாநாட்டு நிகழ்ச்சிகளில் ஒன்றாக ஊர்வலம் நடத்த அரசுக் கெடுபிடி இருந்தது. எனவே மாநாட்டுக்கு முன்நாளில் - அரசு அடக்குமுறை, பொடோ, மோதல் என்ற நாடகம் நடத்தி போலீசார் புரட்சியாளரைக் கொல்வது, தோழர் கத்தார் சுடப்பட்ட வழக்கை விசாரணையின்றி 'ஏறக்கட்ட' அரசு செய்யும் தீவிர முயற்சி ஆகிய அனைத்துக்கும் எதிராக - மாநில ஆளுனருக்குக் கோரிக்கை அளிப்பது என்ற வடிவத்தில் ஆர்ப்பாட்ட ஊர்வலமாக மாற்றி நடத்தப்பட்டது.

பிரஜா கலா மண்டலி (மக்கள் கலைக் கழகம், ஆந்திரம்) தோழர்களும், கத்தாரும், வெங்கண்டு பிரசாத்தும் சுப்பாராவ் பாணிக்கிராகி, செரபண்ட ராஜூ ஆகியோரின் புரட்சிப் பாடல்களிலிருந்து தொடங்கி தியாகிகள் மீதான புதிய பாடல்கள் வரை மேடையேற்றினார்கள். தீபங்களால் சிகரம் அமைத்துத் தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்திய பிரஜாகலா மண்டலிக் கலைஞர்களின் 'தீப நடனம்' பார்வையாளரின் நெஞ்சில் எழுச்சியை ஊட்டியது.

மாநாடு அரங்க அளவிலாவது நடக்குமா, அடக்குமுறை நிகழ்ந்தால் தடையை மீறியும் மாநாடு நடத்திவிட வேண்டும் என்ற இறுக்கமான சூழலில்தான் நிகழ்ச்சிகள் நடந்தன. நூற்றுக்கணக்கான இளம் தோழர்களின் கடும் உழைப்பு மாநாடு வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட உதவியது. பொதுக்கூட்ட நிகழ்ச்சிக்கு அனுமதி மறுக்கப்பட்டது அரசின் அடக்குமுறைக்கு ஓர் எடுத்துக் காட்டு.

*அரங்க நிகழ்ச்சிகளில்* - குறிப்பாக ஓவிய அரங்கில் - இடம்பெற்ற கேலிச் சித்திரங்களையும் தியாகிகளின் உருவப் படங்களையும் குறிப்பிட வேண்டும். அமெரிக்கப் போர்வெறி, ஆர்.எஸ்.எஸ். கும்பல் கல்விக் கூடங்களைக் காவிமயமாக்குவது போன்றவை ஒரு சில முக்கியக் கருப் பொருள்கள்.

*கலை நிகழ்ச்சிகளில்* முக்கியமாகச் சில பதிவு செய்யப்பட வேண்டியவை: புர்ரகதா, ஹொக்கு கதா போன்ற நாட்டுப்புறக் கலைக் குழுக்கள் பழைய வடிவத்தில் பழைய பாடல்களையும், பிறகு புதிய கதைக் கருக்களையும் இணைத்து மேடையில் நிகழ்த்திக் காட்டின. இவற்றை முறையாக அறிமுகப்படுத்தி விளக்கினார் தோழர் கத்தார். இதுதவிர, பீகார் ஜார்கண்ட், சந்தால் மொழியில் பாடல்களோடு கொட்டு, மத்தளத் துடிப்பிசையில் பாடல்கள் பாடினார்கள்; இவர்களே தெலுங்கு மொழிப் பாடலையும் பயின்று பாடி ஆடியது சிறப்பான அம்சமாகும்; பஞ்சாபித் தோழர் குர்மீத் ஜட்ஜ் சிறு துந்த னாவை மீட்டி கதைப் பாடல் பாடியது, பீகார் அபிவியக்தி தோழர் அமிதாப் நகர்ப்புற ஏழைகள் வாழ்வை உள்ளக் கொந்தளிப்போடு பாடிக் காட்டியது, ம.க.இ.க. தோழர் 'மறையாது மடியாது நக்சல்பரீ' என்று தமிழில் இசைத்தது, வயதில் முதிர்ந்த அ.இ.பு.ப.மை செயற்குழுத் தோழர்கள் தெலுங்கு, வங்காளி, பஞ்சாபி மொழிகளில் பாடி ஆடியது ஆகியவை பிற முக்கிய அம்சங்கள்.


மாநாட்டில் புதிய செயற்குழு தெரிவு செய்யப்பட்டது. *பீகார் புரட்சிகர அறிவு ஜீவிகள் சங்கம்* (KBS) செயலாளர் தோழர் ராஜ்கிஷோர் அ.இ.பு.ப.மையத்தின் புதிய செயலராகத் தேர்வு செய்யப்பட்டார்.

அடக்குமுறை இருள் கவிந்த சூழலில் அ.இ.பு.ப. மையத்தின் 8-வது மாநாடு புரட்சிச் செய்தியையும், புத்தம் புதுக் கலை முயற்சிகளையும் இணைத்து எதிர்காலப் புதிய ஜனநாயகக் கலாச்சாரப் படைப்பூக்கத்தின் சாட்சியாக மலர்ந்தது.

● குப்பண்ணன்


படிப்பகம்

www.padippakam.com



## பா.ஜ.க.வின் பாடத்திட்டம்

# “மனுவின் புதல்வர்கள் மானுடர்கள்”

அனேகமாக நாட்டின் முக்கிய கல்வி, பண்பாட்டுத் துறை நிறுவனங்களில் தங்களின் விசுவாசிகளை ஆர்.எஸ்.எஸ். நிரப்பிவிட்டது. ‘இந்திய வரலாற்று ஆய்வுக் கழகத்தில்’ (ICHR) எல்லாப் பதவிகளிலும் காவி ஆதரவாளர்கள் வந்து நுழைந்துவிட்டார்கள். அங்கு முன்பு அங்கம் வகித்தவர்கள் எல்லோருமே இடதுசாரிகள் என்று பொய் குற்றச்சாட்டைச் சொல்லி அரசு அவர்களை வெளியேற்றி விட்டது.

அடுத்துவருவது ‘அகழ்வாராய்ச்சித் துறை’: ஆரியர்களே இந்நாட்டின் பூர்வ குடிகள் என்று கயிறு திரித்துக் காட்ட அத்துறை (ASI) பணிக்கப்பட்டிருக்கிறது.

‘இந்தியச் சமூக அறிவியல் ஆய்வுக் கழகம்’ (ICSSR) தற்போது இந்துமத வெறிக்குத் தூபம்போடும் சர்வதேசக் கருத்தரங்குகள் நடத்தும் நிறுவனமாக்கப்பட்டு விட்டது.

1987 - இல் உருவாக்கப்பட்ட கலைகளுக்கான ‘இந்திராகாந்தி தேசியமையம்’ ‘பாஜக’வால் கையகப்படுத்தப்பட்டு நிகழ்த்து கலைகளுக்கான மையமாகக் குறுக்கப்பட்டுவிட்டது; இந்துமதம் சார்ந்த கோயில்களுக்குச் சென்றுவர (சேத்திராடனம்) வழிகாட்டும் கையேடு தயாரிக்கச் சொல்லி அதற்கு உத்தரவும் சென்று விட்டது.

அதேபோல, ‘கல்வி ஆய்வு மற்றும் பயிற்சிக்கான தேசீயக் கழகம்’ NCERT இந்து தேசியத்தைப் பரப்பும் கழகமாக மாற்றப்பட்டுவருகிறது.

கல்வித்துறையில் ஆர்.எஸ்.எஸ். இப்போதுதான் வேகமாக நுழைகிறது என்பதல்ல; மெள்ளமெள்ளத் தனது ஆட்களை நுழைக்க பல பத்து ஆண்டுகள் மீண்டும் மீண்டும் முயற்சி செய்து வந்திருக்கிறது; தடைசெய்யப்பட்டிருந்த காலங்களிலும் கூட அதன் ஆக்கிரமிப்புகள் நடந்திருக்கின்றன.

இவ்வாறு நடந்ததற்குக் காரணமிருக்கிறது. இன்று ஆர்.எஸ்.எஸ். புகுத்தும் அப்பட்டமான இந்து மதவெறிக் கல்வித் திட்டத்தை எதிர்க்கும் கல்வியாளர்கள் பலரும் பழைய பாடத்திட்டத்துடன் இதனை ஒப்பிட்டுத்தான் அம்பலப்படுத்துகிறார்கள்.

மிதவாத இந்துமதவாத தேசியத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டிருக்கும் பழைய பாடத்திட்டத்தை உந்து பலகையாகக் கொண்டுதான் இந்தப் ‘புதிய’ பாடத்திட்டத்தைத் திணிக்கிறது ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனியம், இந்து தேசியம், மதம் ஆகியவற்றை நேருக்கு நேர் எதிர்க்காத அல்லது எதிர்க்கத் துணிவில்லாத இக்கல்வியாளர்கள், ‘பன்முகத் தன்மை’ ‘பல கண்ணோட்டங்களும் இடம் பெற வேண்டும்’ என்ற வாதங்களில் ஒளிந்து கொண்டு நிழற்சண்டை நடத்துகிறார்கள்.

இந்த மொண்ணையான எதிர்ப்பைக் கண்டு அஞ்சாத இந்துமதவெறியர்கள், ‘‘காலத்துக்கு ஏற்பப் பாடத்திட்டத்தை மாற்றுகிறோம்’’ என்று சொல்லிக் கொண்டு பாடத்திட்டத்தைத் திருத்தியமைக்கிறார்கள்.

திருத்தம், சீர்திருத்தம் என்று இந்துமதவெறியர்கள் சொல்வது ‘தேசீயமும்’ ‘தேசீயப் பெருமிதமும்’. ஏகாதிபத்தியங்களின் சேவைச் சிப்பாய்களாக இந்தியக் குடிமக்களை மாற்றுவதுதான் இவர்களின் ‘தேசீயம்’. ‘விழுமியக் கல்வி’ என்ற பெயரில் இந்து மதக் கல்வியை நுழைத்து ‘இந்து மதவெறி பிடித்த சிப்பாய்களை’ உருவாக்குவதே இவர்கள் லட்சியம். சிசு மந்திர், வித்யாமந்திர் போன்ற ஆர் எஸ் எஸ் அடித்தளம் உள்ள பள்ளிகளிலும், பா.ஜ.க ஆளும் மாநிலங்களில் உள்ள எல்லாப் பள்ளிகளிலும் இதற்கேற்ற பாடநூல்களை அமைத்துவிட அவசரப்படுகிறது பாஜக. ஆட்சியில் மூன்று ஆண்டுகள் முடிந்துவிட்டதல்லவா?

**

பள்ளிகளில் பாடநூல்கள் மூலமாக மதவெறியையும், சாதியத்தையும் விதைப்பது ஆர் எஸ் எஸ்ஸின் திட்டம். நாடெங்கும் உள்ள 20,000 சிசுமந்திர், வித்யாபாரதி பள்ளிகள் ஆர் எஸ் எஸ்ஸோடு தொடர்புடையவை; ஆனால் அவற்றைத் தாண்டி மொத்தக் கல்வி அமைப்பையுமே வலியத்தாக்கிப் பணிய வைக்க அது எண்ணுகிறது. ஏற்கெனவே பா.ஜ.க ஆட்சியில் உள்ள மாநிலங்களில், அதன் சித்தாந்த வேர் கொண்ட பள்ளிகளில் ‘அறிவு’ என்ற பெயரில்



படிப்பகம்

www.padippakam.com

ஊட்டப்படும் விஷத்தை இதோ பாருங்கள்:

✱ இலட்சக் கணக்கான அந்நியர்கள் ஆயிரம் ஆண்டுகளாகப் படை எடுத்து வந்தார்கள்; ஆனால் மண்ணைக் கவ்வினார்கள்; தோற்றார்கள்... முகலாயர்கள், பத்தானியர்கள், கிறித்தவர்கள் என்று சிலரைச் சொல்லலாம்...''(இதிகாஸ் காரஹா ஹை, வகுப்பு 5, சிசு மந்திர்)

✱ இந்தியா வேதங்களின் நாடு என்று அழைக்கப்படுகிறது; அதாவது, வேதங்களே அதற்குச் சான்று'' (மத்யமிக் கத்ய பத்ய சஞ்சயன், அத் 4, வகுப்பு 10)

அதுமட்டுமா? ''சமஸ்கிருத ஞான வாசகங்கள்'' என்று சில முத்துக்கள் வித்யா பாரதி, சிசுமந்திர் பாடங்களில் ஏற்கனவே இருந்து வருகின்றன. ஒரு சில இதோ:

✱ ராம ஜென்ம பூமியே ராமன் பிறந்த இடம்.

✱ ஈரானில் முதலில் வாழ்ந்தவர்கள் இந்தியரே. (அது: ஆரியர்களே)

✱ ஹோமர், வால்மீகியின் ராமாயணத்தைத் தழுவித் தனது 'இலியட்' என்ற காப்பியத்தை எழுதினார்.

✱ கிரேக்க தத்துவ ஞானிகளான ஹெரடோடஸ், அரிஸ்டோபேன்ஸ் ஆகியோர் 'வேதங்களின் தாக்கத்தால் உந்தப்பட்டவர்கள்.

✱ பிளாட்டோ, பித்தகோரஸ் ஆகியோர் கூற்றுப்படி எகிப்திய நம்பிக்கை, மரபுகள் இந்தியப் பாரம்பரியத்தை அடிப்படையாகக் கொண்டவை.

✱ அமெரிக்கப் பூர்வகுடி இந்தியர்களின் மொழி நமது இந்திய மொழிகளிலிருந்து உருவானதாகும்.

✱ நம் எல்லோருக்கும் தாயானவள் கோமாதா (பசு) அவளது உடலில் பல கடவுள்கள் வசிப்பதாக நம்பப்படுகிறது.

✱ ஆயுர்வேதமே உலகின் முதல் மருத்துவமாகும்; அது தானே தோன்றி வளர்ந்தது.

✱ ஏசுகிறிஸ்து இமயமலைகளில் சுற்றித்திரிந்த போது இந்து மதத்திலிருந்து தன் எண்ணங்களை உருவாக்கிக் கொண்டார்.

தற்போது வடக்கே பல பள்ளிகளில் இருந்து வருகின்ற ஸம்ஸ்கார் ஸவ்ரப் தொடர் நூல் வரிசையிலிருந்து சில எடுத்துக்காட்டுகள்:

✱ குரு தேஜ் பகதூரின் பிடிவாதமான மதப்பிடிப்பைப் பார்த்து மன்னன் அவுரங்கசீப்பின் முகம் கோபத்தால் சிவந்தது. (இதே அவுரங்கசீப்தான் முன்பு மட்டி தாஸை வாள் கொண்டு அறுத்து எறிந்தவன்; கொதிக்கும் எண்ணெய்க் கொப்பரையில் தயாள்தாரை வீசி எறிந்தவன்; பஞ்சில் சுற்றி சத்திதாசை உயிரோடு எரிந்தவன்...) அப்படிப்பட்ட தேஜ்பகதூர் அவுரங்கசீப்பின் கரங்களால் கொல்லப்பட்ட போதும் தான் ஒரு இந்து என்ற பெருமிதம் முகத்திலே பிராசித்துக் கொண்டே இருக்க... தியாகியானார். (குருதேஜ்பகதூரின் தியாகம், பக் 49,50. ஸ.ச)

✱ அகண்ட பாரதத்தின் படத்தை வரையவும் (பக்11, ஸ.ச. பகுதி2)

✱ நாமெல்லோரும் மனுவின் புத்திரர்கள்; எனவேதான் மனுஷ் அல்லது மானவ (மனிதன்) என்று அழைக்கப்படுகிறோம். (மனுவும், மானவும்; அத்.3; ஸ.ச பகுதி4)

✱ நவ 2, 1990 (பாப்ரி மஸ்ஜித் தாக்கப்பட்ட நாள்): வரலாற்றின் அந்தக் காரணத்தை நினைக்கும் ஒவ்வொருவருக்கும் கண்ணீர் ஊற்றெடுக்கும்... அங்குதான் நமது வெற்றிக்கான எக்காளம் முழங்கப்பட்டது... (பக் 70 - 71, ஸ.ச. பகுதி 4)

✱ ராமஜென்ம பூமி பற்றி மட்டும் 8 கேள்விகள் உண்டு: ''அந்த இடத்தைக் கைப்பற்றுவதற்காக 78 சண்டைகள் நடந்தன; அந்த லட்சியத்துக்காக 3 1/2 லட்சம் பேர் உயிர்த்தியாகம் செய்தார்கள்; எந்தெந்த நாட்களில் கோயிலின் பூட்டுக்கள் திறக்கப்பட்டன என்று தேதி வாரியாக விவரங்கள் உள்ளன; கரசேவை தொடங்கிய நாள், தாக்குதல் தொடங்கிய நாள், கோத்தாரி சகோதரர்கள் பற்றிய முழு விவரங்கள் - மாணவர்கள் இத்தனை விவரங்களையும் மனப்பாடம் செய்து கொண்டால் தான் 8 கேள்விகளுக்குப் பதில் எழுத முடியும். (பக்.14, ஞான பரீக்ஷா)

✱ உருது ஒரு தனிமொழியல்ல; வேறொரு (அராபிய) வடிவத்தில் எழுதப்பட்ட இந்தி மொழியே. (பக் 65, சடாச்சாரி கீ பாதேய்ன்)

✱ இந்தப்புனித ஆரிய பூமியில் இராமபிரான் காலடி எடுத்து வைத்து சுமார் 9 லட்சம் வருடங்களாகி விட்டன; சந்தோஷம், செல்வம், அமைதி ஆகிய மூன்றையும் நம் பூமிக்கு அளித்ததற்காக அவனது நல்லாட்சி என்றும் நினைக்கப்படும். (பக்29, தர்ம சிக்ஷா, வகுப்பு16).

குறிப்பாக, பாஜக ஆட்சியில் இருக்கும் மாநிலங்களில் இந்துமத, இந்து மத வெறி அடிப்படையிலான உலகக் கண்ணோட்டம் மற்றும் கருத்துக்களைப் பரப்பும் பாடநூல்கள் மட்டுமே நடைமுறையில் உள்ளன. இவற்றுக்கு அவர்கள் சூட்டியுள்ள பெயர் விழுமியக் கல்வி.

ஆர்.எஸ்.எஸ்.ஸின் அதன் சோதனைக் களமான குஜராத்தில் பள்ளிப்பாட நூல் திட்டம் துவங்கி, சமூக நடைமுறை வரை அதன் திட்டங்கள் பச்சையாகச் செயல்படுத்தப்படுகின்றன.

குஜராத் முழுக்கவும் 'இந்துராஷ்டிரத்திற்கு வருகை தரும் உங்களுக்கு வாழ்த்துக்கள்!' என்று விஸ்வ இந்து பரிஷத்தின் விளம்பரப் பலகைகள் வைக்கப்பட்டுள்ளன.

பூகம்பத்தை விடக் கொடிய மோதல்களையும், வேதனையையும் ஆர்.எஸ்.எஸ். அன்றாடம் குஜராத் மக்கள் மீது சுமத்திக்கொண்டிருக்கிறது.

- பள்ளிக்கூடங்கள் ஆர் எஸ் எஸ்ஸின் மாத ஏடான 'சாதனா'வுக்குச் சந்தா கட்ட வேண்டும்.

- பள்ளி ஆசிரியர்கள் கண்டிப்பாக சமஸ்கிருதப் பயிற்சி பெற வேண்டும்.

- குஜராத் நகரங்களின் மையப் பகுதிகளில் முசுலீம்கள் வீடு வாங்கிக் குடியேறக் கூடாது.

-வி.ஆர். சோமானி, பக்த வல்லபா போன்ற இந்து நிர்வாகப்பள்ளிகளில் 95% மாணவர்கள் முசுலீம்கள். அங்கு வேலை செய்வதும் இந்து ஆசிரியர்கள். மாணவர்களுக்கு அவர்கள் பாடம் நடத்துவதே இல்லை - இதன் மூலம் முசுலீம்களைப் பழி வாங்குகிறார்களாம்!

- அகமதாபாத் நகராட்சிப்பள்ளி மாணவர்களுக்கு 5, 6 வகுப்புகளில் கேட்கப்பட்ட கேள்வி: ''மியாக்களுக்கும் (முசுலீம்களைக் கேலி செய்யும் பெயர்) மற்றவர்களுக்கும் அடிப்படை வேறுபாடு என்ன?''

அன்றாடம் சமூக ரீதியில் இவ்வாறு சச்சரவுகளை உருவாக்கிக் கொண்டே, பள்ளிகளில் போதிக்கப்படும் கருத்துக்களிலும் திட்டமிட்டு இந்துமதக் கண்ணோட்டத்தைத் திணித்து வருகிறது.

பாடத் திட்டம் வரையறுக்கப்படத் தொடங்கும் 5 - வது வகுப்பிலேயே இந்தியக் கலாச்சாரம் இந்துக் கலாச்சாரமே என்று சித்தரிக்கப்பட்டுள்ளது.

குஜராத் அரசின் பாடநூல்களில் ஆரிய இனமே உயர்ந்தது, அவர்களே சுத்த இந்திய இனம் என்றும் எழுதப்பட்டுள்ளது. தொடர்ந்து பல ஆண்டுகளாக - ஆரியப்படையெடுப்பு, பூர்வீகத் திராவிடப் பழங்குடிகள் பற்றிய - ஆய்வுகளும் விவாதமும் நடந்துகொண்டிருக்கும் போதே இந்த அரசு ஒரு முடிவுக்கு வந்துவிட்டது;

ஆசியா, ஐரோப்பாவில் பேசப்படும்


படிப்பகம்

www.padippakam.com

மொழிகளில் பொதுவான சொற்கள் உள்ளன என்றும் அதுவே ஆரிய இனத்தின் வேரைச் சுட்டுவதாகவும் எவ்வித ஆதாரமும் இல்லாமல் வரலாறு எழுதப்பட்டுள்ளது. உண்மையைத் திரித்தது மட்டுமல்லாமல், ஒருபடி மேலேபோய் ஆரியர்கள் (இந்தியாவின்) தென்பகுதியை வென்றதையும், ஆரிய - ஆரியமல்லாத கலாச்சாரங்களுக்குள் மோதல், பிறந்து பிறகு அது சரிசெய்யப்பட்டதையும், ஆரியரல்லாதாரின் ஒத்துழைப்போடுதான் ஆரிய மேலாண்மை நிறுவப்பட்டது என்ற 'உண்மை'யையும் இராமாயணம் வருணிப்பதாகவும் கொஞ்சமும் கூச்ச நாச்சமின்றி வரலாற்று மோசடி செய்கிறது அந்தநூல்.

இனம் பற்றி மட்டுமல்ல; சாதி, சாதி ஒடுக்குமுறை பற்றிய உண்மைகளும் அந்தப் பாட நூல்களில் இல்லை; ஜோதிபா பூலே, அம்பேத்கர், பெரியார் போன்றோர் வாழ்நாள் முழுக்க எதிர்த்துப் போராடிய 'தீண்டாமை'யின் கோரமுகம் பற்றிய சிறுகுறிப்புக் கூட இல்லை. பதிலாக, 'ஆரியர்கள் மனிதகுலத்திற்கு அளித்த மாபெரும் நன்கொடை நால்வருண அமைப்புமுறை' என்ற குறிப்புகள் குஜராத் கல்விக்கழக 9 ஆம் வகுப்புப் பாடங்களில் இடம் பெற்றுள்ளன.

அதே நூலில் தலித்துக்கள் மீதான எல்லாச்சமூக ஒடுக்குமுறைகளும் மூடிமறைக்கப்பட்டு, ''அவர்கள் படிப்பறிவின்மையாலும், குருட்டுத்தனமான நம்பிக்கைகளாலும்தான் மோசமான நிலையில் வாழ்கிறார்கள்.'' என்று பார்ப்பனியச் சுரண்டலும், தற்கால ஆதிக்கச்சாதிகளின் சுரண்டலும் மறைக்கப்படுகிறது.

வரலாற்றுப்பாட அட்டவணை முழுதாகத் திருத்தப்பட்டுவிட்டது. ஒரு சில எடுத்துக்காட்டுகள்:

✱ புராதனகாலம்: வேதகாலத்திலிருந்து ஹர்ஷவர்த்தனனின் காலம் வரை

✱ வேதஇலக்கியம்: இந்தியக்கலாச்சாரத்தின் வெளிப்பாடு

✱ இந்தியக்கலாச்சாரத்தின் பின்னணியில் மட்டுமே உண்மைகளை அறிய வேண்டும்.

✱ குடும்ப வாழ்க்கையின் தூய்மை; துன்பம்வரினும் உண்மைக்காகவே வாழ்வது - இவையே ஆதாரமானவை.

✱ ஒழுக்கத்தால் உயர்ந்தது இந்தியக் கலாச்சாரம். எனவேதான் இன்றும் அது நீடித்து நிலைக்கிறது; ஆனால் எகிப்து, மெசபடோமியா (ஈராக்), சீனா போன்ற நாகரீகங்கள் உலகிலிருந்து அழிந்துவிட்டன. (அதாவது மற்ற நாகரீகங்கள் ஒழுக்கத்தில் தாழ்ந்தவை என்பது அதன் உட்பொருள். தோண்டிப் பார்த்தால் இவர்களின் நாகரீகத்தில் தான் உலகிலேயே மோசமான ஒழுக்கக் கேடுகள் நடந்திருக்கின்றன என்பது ஊரறிந்த விசயம்.)

ஒன்பதாவது வகுப்புப்பாடத்திலும் - புத்த - சைவ முரண்பாடு, பெண்கள் மீதான



அடக்குமுறை, 'சூத்திரர்கள்' மீதான ஒடுக்குமுறை, இன்றும் தலித்துக்கள் ஒடுக்கப்படுவது போன்ற எந்த ஒரு விவரமும் இல்லை. காரணம் - 'இந்தியக் கலாச்சாரம் வன்முறையற்றது, சகிப்புத்தன்மை நிறைந்தது, அமைதியே வடிவானது' என்றும், மற்ற இசுலாமியர்கள், கிறித்தவர்கள்தான் 'கொலைகாரர்கள், ஆக்கிரமிப்பாளர்கள், அன்னியர்கள்' என்றும் எதிர்கருத்துப் பரப்புவதும் ஆர்.எஸ்.எஸ்.ஸுக்கு அவசியத் தேவையாக உள்ளது; அவர்கள் சத்தியம், சத்தியம் (உண்மை) என்று நூறுமுறை சொல்லக் காரணமே அவை பொய்கள் என்பது தான்.

உலகப் பாசிஸ்டுகள் பற்றியும், இட்லர் 60 லட்சம் யூதர்களைக் கொன்றதும் இடம் பெற வில்லை. ஆனால் ''இட்லரின் பாசிசத்தாலும், முசோலினியின் நாசிசத்தாலும் நிர்வாகம், அதிகார வர்க்கம் அற்புதமாகச் செயல்பட்டது; படிப்பறிவின்மை நீங்கியது; வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிந்தது; சமூகம் கட்டுப்பாட்டுடன், ஒழுக்கத்துடன் திகழ்ந்தது'' என்று புகழ்மாலை சூட்டத் தவறவில்லை.

இந்தியா முழுக்க மேற்குறிப்பிட்ட நூல்கள் விமர்சிக்கப்பட்ட பிறகும் குஜராத் அரசு பாடநூல்களை திரும்பப்பெறவே இல்லை.

✱✱

கல்வியைக் காவிமயமாக்க பாஜக முயல்வதைப் பல எடுத்துக்காட்டுகளில் பார்த்தோம்; ஒரு சோதனைக்களமாக குஜராத்தில் பாடநூல்களைக் காவிமயமாக்கிவிட்டதையும் பார்த்தோம்.

இப்போது கர்மகாண்டத்தையும், சோதிடத்தையும் ஒரு சில பல்கலைக்கழகங்கள் மூலமாக நுழைத்துள்ளது மைய அரசு. பார்ப்பன வேத மரபிலேயே கணிதம், அறிவியல் உள்ளது என்று புளுகுமூட்டையை அவிழ்த்துவிட்டு வந்தவர்கள் அதைப் பாடத் திட்டமாகவே - அறிவியல் உண்மையாகவே அறிவித்துள்ளார்கள்.

ஆர்.எஸ்.எஸ்.ஸின் எடுபிடியாக இருக்கும் குஜராத் அரசு இன்று சிறுபான்மையினர் மீது வன்முறையாட்டம் போடுகிறது. இது நாடு முழுவதும் பரவும் - எதிர்ப்பாரில்லையானால்.

குஜராத் முதலமைச்சரான கேசுபாயைப் பின்னாலிருந்து ஆட்டுவிக்கும் விஸ்வஇந்து பரிஷத்தின் தலைவன் பிரவீண் எச்சரிக்கை விட்டிருக்கிறான்: ''இன்று குஜராத்தில் என்ன நடக்கிறதோ அதுதான் நாளை இந்தியா முழுவதும் நடக்கும்''

அந்த எச்சரிக்கை வன்முறைகளுக்கு மட்டுமல்ல; அவர்களின் பாசிசச் சிந்தாந்தத்தைப் பரப்புவதற்கும் பாடப் புத்தகங்களைக் காவிமயமாக்குவதற்கும் சேர்த்துத்தான்.

இந்தப் பாசிசத் தயாரிப்பு உழைக்கும் மக்களின் வருங்காலத்திற்கும் சேர்த்து விடப்பட்டுள்ள ஒரு சவால்!

● க.மு.



படிப்பகம்

www.padippakam.com

# அடையாளம்

எல்லோரது கைகளும்
ஒரே பக்கத்தைக் காட்டி நிற்கின்றன

கடந்துபோக அஞ்சி
வெறிநாய் பின்வாங்கும் அந்தப் பாதையில்
குதறப்பட்டுக் கிடக்கும் ஒருபெண்ணின் கைகள்
குறிப்பாக அடையாளம் காட்டுகிறது
''அதோ அவர்கள் அந்தப்பக்கம்தான்....''

பட்டப்பகலில்
பணப்பையைப் பிடுங்க வந்தவனிடமிருந்து தப்பித்து ஓடி
பஸ்ஸ்டாண்டு ரவுடிகளிடம்
பாதுகாப்பாக ஒளிந்துகொண்ட
அப்பாவி ஒருவரின் கைகள் அடையாளம் காட்டுகின்றன
''அதோ அந்தப்பக்கம்தான்...''

தறிகெட்டு ஓடிவரும் பன்றியின் கால்கள்
பூக்கூடை, பழக்கூடைகளைத்
தள்ளிவிடாமல் சென்றபிறகும்
விரட்டிவசைபாடும் சாலையோர வியாபாரிகள்
நிதானமாக வந்து எட்டி உதைக்கும்
கால்களைப் பார்த்து வாயடைத்து
ஆத்திரத்துடன் அடையாளம் காட்டுகிறார்கள்,
''அதோ அது அங்கிருந்துதான் வருகிறது.....''

வயலுக்குள் புகுந்து
நாசம் செய்வதைத் தடுக்க
ஒரு வைக்கோல் பொம்மையை நம்பும் விவசாயி
தனது கோரிக்கை ஊர்வலத்தில் புகுந்து
நாசம் செய்வதைப் பார்த்து
குலைநடுங்கச் சொல்கிறார்,
''அதோ அதுகள் ஓடிப்போனது அங்கேதான்...''

மலக்கிருமிகளுக்குள்ளும்
வாழ்வதற்கான போராட்டம் நடக்கிறது - என்பதை
ஆராய்ச்சியின் முடிவில்
அறிந்துகொண்ட மாணவன்,
தனது போராட்டத்திற்குள் தொற்றி
''போதும் முடித்துக்கொள்!
போதும் முடித்துக்கொள்!'' என்ற
புழுத்த அடிமைகளைப் பார்த்து
ஆச்சரியத்துடன் அடையாளம் காட்டுகிறான்
''அதோ அவைகள் அந்தப் பக்கம்தான்...''

உயிரியல் பூங்காவில் இருந்து தப்பித்த
மிருகத்தின் தடையங்களைச் சொல்வதில்
கருத்து வேறுபாடு இருந்தாலும்
பாதிக்கப்பட்ட மக்கள்
அனைவரது கைகளும் மாறுபாடில்லாமல்
ஒரேபக்கத்தை அடையாளம் காட்டுகின்றன
''அதோ, அந்தப் பக்கம்தான்
*காவல் நிலையம்*''

— துரை. சண்முகம்





படிப்பகம்

www.padippakam.com

# எல்லாம் கல்மயம்



பாரதப் பண்பாடு எந்தப் பகுதிக்கோ, எந்தக் காலத்திற்கோ மட்டும் உரியது அல்ல. தொன்றுதொட்டு அது குமரி முதல் இமயம் வரை பரவிக் கொண்டே இருக்கிறது. நம் கோயிலமைப்புகளில், அவற்றில் உள்ள சிலைகளில், நம் அணிகலன்களில், இலக்கியங்களில், இசையில், பழக்க வழக்கங்ளில் தினசரி வாழ்க்கையில், தத்துவ எண்ணங்களில் இந்தப் பண்பாடு உள்நீரோட்டமாகப் பாய்ந்து கொண்டே இருக்கிறது. பாரத சிற்பிகளின் உளி கர்வத்தால் அமைக்கப்பட்ட கற்சிலைகள் ஈடற்ற அழகை ஒளி விடுகின்றன. ''நம் திறமையின் தாக்கத்திற்கு இந்தச் சிலை வளம் ஒரு நல்ல உதாரணம்'' என்றார் சர்வேபள்ளி இராதாகிருஷ்ணன்.

இத்திறமையின் தாக்கத்தின் வாரிசே நம் ஆகமய்யா. ஆகமய்யாவின் கைவண்ணத்தால் கருங்கற்கள் கருங்கன்னிகளாகவும், கற்பாறைகள் அழகான பதுமைகளாகவும் உருவெடுப்பது மிகச் சர்வசாதாரணச் செயல். ஒரு கருங்கல்லைப் பார்த்தவுடன் அதன் தன்மையை ஆகமய்யாவால் அறிந்து கொள்ள இயலும். அந்தக் கல் எந்தச் சிலைக்காவது பயன்படுமா இல்லையா என்பதைக் கண் பார்வையாலேயே பார்த்துச் சொல்லுவான். ஒவ்வொரு கல் வெளிப்பார்வைக்குச் சிறந்ததாகத் தோன்றினாலும் உள்ளே தோஷம் இருக்குமாம். அத்தகைய கற்கள் சிலைகளைச் செதுக்குவதற்குச் சிறிதும் பயன்படாது என்றான் ஆகமய்யா.

அவனது முன்னோர்களுடையது கர்நூல் வட்டம். அவர்களுக்கு அங்கே சிறிதளவு நிலபுலன்கூட இருந்ததாம். ஆனால் அந்த நிலம் ஓணான்கள் முட்டையிடத் தவிர மற்ற எதற்கும் பயன்படாதாம்.

''பனகானபல்லி நவாபுக்கு எங்க அப்பா கல்லாலேயே கட்டிலு செய்து கொடுத்தாருங்க. எல்லாம் சாதாரண கட்டிலு போலவே இருக்குங்க. நாலு காலுங்க, ரெண்டு நேரு பட்டைங்க, ரெண்டு குறுக்குப் பட்டைங்க. மேலே தெரியறாப்போல பலகைங்க. எல்லாம் மாமூலு கட்டிலுக்குப் போலதாங்க. மரத்தாலேகூட அவ்வளவு ஒழுங்கா செதுக்க இப்பக்கூட முடியாதுங்க. வார் பட்டையைத் தவிர எல்லாம் கல்லால செய்ததே. இத்தனைக்கும் இவையெல்லாம் ஒரே கல்லால செய்யணுங்க'' என்றான் ஆகமய்யா பழம் நினைவுகளை நினைவு கூர்ந்தவாறே.

மொத்தத்தில் அப்படிக் கட்டில் செய்ய முயன்றதே வியப்பு. முதலில் அதற்குப் பயன்படும் பெரிய கற்பாறையைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அதுவே பெரிய யாகம் செய்வதைப் போன்ற பெரிய வேலை. அதன் பின்னர் அதனைக் கட்டில்


படிப்பகம்

www.padippakam.com

பகுதிகளாக, கால்கள் போன்றவைகளாகச் செதுக்க வேண்டும். அப்படிச் செதுக்கு வதில் சிறிய தவறு ஏற்பட்டால்கூட, இவ்வ ளவு சிறிய சில்லு சிதறி விட்டாலும்கூட அது வரை செய்த உழைப்பு எல்லாம் வீணாகி விடும். ஒருமுறை அப்படி ஆனதும்கூட.

''அம்மன் சிலையைச் செதுக்கிக்கிட்டி ருந்தேன். நாலு அடிகளுக்கு மேல உயரம். எல்லாம் சாத்திரம், சம்பிரதாயம் முறைப் படி இருக்கணும் இல்லீங்களா? காலின் விரலில் மெட்டியைச் செதுக்கிக்கிட்டி ருந்தேன். என்ன தோஷம் பட்டதோ, யாரு திருஷ்டிப் பட்டதோ தெரியல, பாதிக்குப் பாதியா காலு உடைஞ்சு முன்னே விழுந் துட்டுது. என் சப்த நாடியும் குறுகிப் போச்சு. கூட இருக்கறவங்க முன்னே அவ மானத்தாலே தலை கீழே குனிஞ்சு போச்சு. இரண்டு நாளு பச்சைத் தண்ணியைக் கூட தொடலேன்னா நம்புங்க. எம் பெரிய அண்ணன்தான் தேறுதல் சொன்னாரு. இப்படின்னா ஆவாதுன்னு இந்த முறை கோயில் முன்னமே உட்கார்ந்தேன். சுற்றிலும் சாக்குப் பைகளைக் கட்டி வச்சேன். யாரையும் உள்ளே நுழைய வுடலே. ஆறே நாள்ல அம்மன் சிலை தயா ராயிட்டது. அந்த நாள்லே ஒரு வேளை உணவே தவிர சாயந்திரம் 'டிபன்' கூட தொடல'' என்றான் ஆகமய்யா.

இது எப்போதோ நடந்த செயல். ஒரு நம்பிக்கையுடன், தீட்சையுடன் சாப்பிட உணவு இருந்தும்கூட ஒரு வேளையே உணவு உட்கொண்டான் ஆகமய்யா. இப்பொழுது மட்டும் பெரும்பாலும் ஒரு வேளை மட்டும் நான்கு பருக்கைகளையே தின்கிறான் ஆகமய்யா. இதற்குக் காரணம் தீட்சையன்று. நம்பிக்கையும் அன்று. முழுக்க முழுக்க இல்லாமையே காரணம்.

சாத்திரங்கள் சம்பிரதாயங்கள் குறித்து இவ்வளவாகப் பேசும் ஆகமய்யா படிப் பேதும் இல்லாதவர் எனின் வியப்பு ஏற்படும். இந்தச் சாத்திர மர்மங்கள் யாவும் வம்ச பாரம்பரியமாக அவர்களுக்கு வரு கின்றனவாம். இந்த விவரங்கள் யாவும் தன்னுடனே அழிய உள்ளதற்கு அவன் மிகவும் வேதனைப்பட்டான்.

''லாபம் இல்லீங்க. இந்தத் தொழில நம்பிகிட்டிருந்தா வயித்தைக் கழுவ முடி யாதுங்க. மக்கள்லே வரவர கடவுள் பக்தி குறைஞ்சுக்கிட்டே வருது... இருக்கற கோயிலு கோபுரங்களே பாழடைஞ்சுப் போறப்ப புதுசா யாரு கட்டப் போறாங்க நீங்களே சொல்லுங்க. அப்படிக் கட்ற புண்ணியவாங்க இருக்கறப்பல்லவா எம்மாதிரியானவங்க தேவைப்படுவாங்க'' என்றான் ஆகமய்யா, வேதனையுடன் முகத்தில் தோன்றிய வியர்வையைத் துணியால் துடைத்துக்கொண்டே.

**பரம்பரை பரம்பரையாக அழகுச் சிலைகளைச் செதுக்கிய அவனது திறமை இன்று ஒரு பிடிச்சோற்றை அவனுக்குச் சம்பாதித்துத் தர இயலாமல் உள்ளது. அதனால்தான் அம்மிக்கும் உரலுக்கும் நொக்கு அடிக்கிறான்.**

சிலையைச் செதுக்கச் சொல்பவர்கள் இல்லாமல், அத்திப் பூத்தாற்போல, கோடிக்கு ஒருவர் அப்படி இருந்தாலும் அவர்கள் தருவது சரிபோகாமற் போவதால், ஆகமய்யா அத்தொழிலை ஏறக்குறைய விட்டு விட்டான். பல நூற்றாண்டு காலமாக கற்களுடன் உற வாடிக் கலந்துபோன அவனது கலை; பரம் பரை பரம்பரையாக அழகுச் சிலைகளைச் செதுக்கிய அவனது திறமை இன்று ஒரு பிடிச் சோற்றை அவனுக்குச் சம்பாதித்துத் தர இயலாமல் உள்ளது. அதனால்தான் அம்மிக்கும் உரலுக்கும் நொக்கு அடிக் கிறான்; இயந்திரக் கல்லைத் தயார் செய்கிறான்; உரல் தயார் செய்கிறான்.

''இதிலும் லாபம் இல்லீங்கய்யா! ஒரு ஒரலு கல்லு வாங்கிப் போட்டா ரெண்டு தலைமுறைக்குப் பயன்படுது. ஒரு இயந் திரக்கல்லால பத்துக் குடும்பங்கள் நடத்திக் கிடுதுங்க. இதுலேகூடப் பெரும்போட்டி. இப்ப இவற்றை எல்லாருமே தயார் பண்றாங்க. மலிவா விற்கிறாங்க. ஒவ்வொருவாட்டி கூலிக்குக் கூடக் கட்டா துங்க'' என்றான் ஆகமய்யா வேதனை கலந்த குரலில்.

அது உண்மையேயானாலும் அதற் காக குடும்பச் செலவுகள் எதுவும் குறை யாது அல்லவா! உயிர் உள்ளவரைக்கும் இந்த ஒரு சாண் வயிற்றுக்குக் கஞ்சியோ, கூழோ இவ்வளவு ஊற்றணும் அல்லவா! அதற்காக அவன் கற்களை உடைக்கும் வேலைக்குக் கூடத் தயாரானான். ஏதோ ஐயாவின் கையைக் காலைப் பிடித்து நானூறு ரூபாய் கடன் வாங்கி வந்தான். அந்த நானூறு ரூபாயை நான்கு குழுக்க ளுக்கு முன் பணமாகக் கொடுத்து கற்களை உடைப்பித்தான். தயாரான சல்லிக் கற்களை ரோடு காண்டிராக்டர்களுக்கு விற்று, கூலிகளுக்குத் தரவேண்டியதைத் தந்து மீதியானதை வைத்துக் கொள்ள நினைத்தானாம். இரண்டு முறை நன்றா கவே நடந்ததாம். பெரியதாக எதுவும் மிஞ்சவில்லையென்றாலும் கடும் பட்டினி கிடக்க வேண்டிய கொடுமை மட்டும் தீர்ந்தது என்று எண்ணிக் கொண்டான்.

''எல்லாம் நாசமாய்ப் போச்சுங்க. முன் பணம் வாங்கிக்கிட்டவங்க கடனைத் தீர்க்காமலேயே 'முகாம்' எடுத்துட்டாங்க. எங்கே போனாங்களோ தெரியாது. நானு தேடவும் இல்லீங்க. தேடிக் கண்டுபிடிச் சாலும் என்ன லாபம் சொல்லுங்க. அவங் களகிட்ட என்ன இருக்கு வசூல் பண்ண'' என்றான் மழுங்கிப் போன சுத்தியைப் பார்த்தவாறு ஆகமய்யா.

அதுகூட ஆகமய்யாவின் வாழ்க்கையைப் போல உறைந்து போய் இருந்தது. அவனுக்கு மூன்று குழந்தைகள். மூத்த பெண்ணை அக்காவின் மகனுக்கே கொடுத்துத் திருமணம் செய்தான். அவ னுக்குக் கடப்பாவில் ஒரு சிறிய மிதி வண்டிக் கடை இருக்கிறதாம். ''என்னை எதிர்பார்க்காம அவங்க கஞ்சியை அவங்க குடிக்கறாங்க'' என்றான் ஆக மய்யா. ஒருவேளை அது ஒன்றுதான் அவ னுக்குச் சற்று மன அமைதியைக் கொடுத் துள்ளது போலும்.

தன் இரும்பு உளியால், சாணையால், ஆணியால், பழஞ்சுத்தியால் கற்களில் உறங்கும் அழகைத் தட்டியெழுப்பி அனை வரின் முன் வைத்த ஆகமய்யா - பல யுகங் களாகப் பாரத பண்பாட்டின் சின்னமாக நின்ற தெய்வச் சிலைகளை எளிதாகச் செதுக்கும் ஆகமய்யா - கற்றூண்களிலி ருந்து தெய்வீக இசையை எழுப்பவல்ல ஆகமய்யா - ஒரு பிடிச் சோற்றிற்காக, பாதையின் ஓரத்தில் உள்ள புளியமரத்தின் கீழ், கற்களைச் சிறுசிறு சல்லிகளாக உடைத்துக் கொண்டிருக்கிறான் இப்போது.

ஒவ்வொருவரும் தன் உழைப்புக் கேற்ற பயன் கிடைக்கவில்லை என்றுதான் சொல்வார்கள். இப்படிக் கூறுபவர்கள் மண்டை காயும் உச்சி வெயிலில், வியர் வையைக் கக்கிக் கொண்டு பாறைக் கற்களை உடைப்பவர்கள் குறித்துப் பேச மாட்டார்கள். குறைந்தது எண்ணிக்கூடப் பார்க்க மாட்டார்கள். உண்மையில் இத்த கைய வேலைகளைச் செய்பவர்களுக்கு அவர்களின் உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்கிறதா என்று வினவுகிறார் மாக்ஸிம் கோர்க்கி ஒரு இடத்தில்.

இதற்குள் நீங்கள் என்ன விடை கூறுவீர்கள்?

●

**'வாழ்க்கைப் போராட்டம்'**
**தெலுங்குச் சித்திரங்கள் மூலம்: ராவூரி. பரத்வாஜ் தமிழில்: நி. கிருபானந்தம் (வெளியீடு: சாகித்திய அகாதெமி.)**



படிப்பகம்

www.padippakam.com

# புத்தகச் சந்தை

சென்னை காயிதே மில்லத் அரசு மகளிர் கலைக் கல்லூரியில் 25-ஆம் ஆண்டு புத்தகக் கண்காட்சி மைதானத்தில் 'கார் பார்க்கிங்கின் ஒரு பகுதி' என்று படம் பிடித்துப் போட்டு, வந்திருக்கும் கூட்டத்தை மட்டுமல்ல, தனது வர்க்கத்தையும் பார்த்துப் பூரித்துப் போகிறது தினமணி. பழனி தைப்பூசத்தில் கந்தர் அலங்காரத்தைக் கண்ட பக்தர்கள் 'முருகா... முருகா' என்று எகிறிக் குதிப்பதைப் போல நுழைவாயிலில் அமைக்கப்பட்டிருந்த 'ஹிக்கின் பாதம்ஸ்'ன் கட்டட மாடலைப் பார்த்து 'ஹை' போட்டுப் பூரிக்கிறது ஆனந்த விகடன்.

தமிழ்வழிக் கல்வி, தமிழில் அர்ச்சனை என்றாலே தனது அக்கிரகாரத்துக் கும்மட்டி அடுப்பிலிருந்து கொதித்தெழுந்து எள்ளி நகையாடும் இந்தியா டுடே, 'மெல்லத் தமிழினி தழைக்கும்' என்று புத்தகக் கண்காட்சிக்குப் பொழிப்புரை போடுகிறது. தினமணியிலிருந்து ஆனந்த விகடன் வரை கவனமாகப் புத்தகச் சந்தையின் வர்த்தக நோக்கத்தை மட்டும் சிலாகித்தபடி நீட்டி முழக்குகின்றன. ஆனால் சமூக நோக்கில் புத்தகக் கண்காட்சியை உற்று நோக்கினால் ஒரு சந்தைக்கான சலசலப்பே விஞ்சுகிறது.


முதலாளித்துவச் சந்தைகள் மக்களின் தேவைகளை அடிப்படையாகக் கொண்டவையல்ல; பொருளுற்பத்தியின் விற்பனை இலக்குக்கு ஏற்ப நுகர்வோரின் ஆவலைத் தூண்டி விடுவதுதான் அவர்களது வர்த்தகத் தந்திரம். இந்தத் தாரக மந்திரத்தைத்தான் ''சீரியஸ் இலக்கியம்'', ''கோமா இலக்கியம்'' என்று பேசும் காரியக் காரக் கோமாளிகள் 'நாங்களே எதிர்பார்க்கல, நல்ல விற்பனை' என்று வேறு மொழியில் போட்டு உடைக்கிறார்கள். புத்தகக் கண்காட்சியின் புறநிலைக் கவர்ச்சியைக் கண்டு மயங்கிக் கட்டுரை எழுதிக் கொண்டிருக்கிறார்கள் சில எழுத்தாளர்கள்.

குப்பைகளுக்கு எதற்கடா கொலுபீடம் என்று கேட்கத் தோன்றுவது போல இன்றைய சமுதாயப் பிரச்சினைகளைப் புரிந்து கொள்வதற்கான தேவைகளை நிறைவு செய்யும் புத்தகங்கள் வெகு சிலவே அங்கு கிடைக்கின்றன. நம்மைச் சூழ்ந்திருக்கும் உலகமய, தனியார்மய, தாராளமயக் கொடுமைகள், சமகால இந்து மதவெறிப் பயங்கரவாதம் பன்னாட்டு கம்பெனிகளின் எல்லைதாண்டிய தாக்குதல் இவற்றினால் அன்றாடம் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் மக்களுக்கு இவைகளைப் பற்றி தேவையான இலக்கிய, அரசியல் புரிதல்களை வழங்கக் கூடிய ஒரு சில நூல்களை சந்தையில் பங்கு பெற்ற 240 கடைகளில் ஓயாசிஸ், கீழைக் காற்று, சிலிக்குயில், அலைகள், தமிழ் முழக்கம் என்று விரல் விட்டு எண்ணக் கூடிய கடைகளில் மட்டுமே காண முடிந்தது. புத்தகக் கண்காட்சி பொதுவாக மக்களிடம் விழிப்புணர்வை ஊட்டி விடுகிறது என்பது வெறும் பம்மாத்து. நடுத்தர வர்க்கத்தின் நுகர்வுக் கலாச்சாரத்திற்குத் தீனி போடும் மேய்ச்சல் நிலமாகவே காயிதே மில்லத் கல்லூரி வளாகம் விளங்கியது.

பிரான்ஸிலிருந்தும், ஜெர்மனியிலிருந்தும், வெளிவரும் பெண்ணிய இதழ்களை ஒரு நொடிக்குள் இறக்குமதி செய்து இங்கிருக்கும் 'இன்டியா டுடே'யில் 'ஆகா தீவிர இலக்கியம்' என்று தீபாராதனை காட்டும் இந்தத் தீவிரவாதிகளால் போலீசு மிருகங்களால் குதறப்பட்ட ரீட்டா மேரியைப் பற்றிய சிறு வெளியீட்டை புதுச்சேரி மக்கள் சிவில் உரிமைக் கழகத்திலிருந்து வாங்கி கண்காட்சி வாசகர்களிடம் வழங்க முடியாத மர்மம் என்ன? மெய்யான பெண்ணியக் குரலை மறைப்பதில் போலீசை விடத் தீவிரமாக இயங்கும் இந்த சீரியஸ் இலக்கியவாதிகளுக்குக் கொடுக்கலாம் அண்ணா பதக்கத்தை.

பேச்சுரிமை, பத்திரிக்கைச் சுதந்திரத்தை பறிக்கும் பொடோ சட்டம் என்ற விவாதம் அன்றாடப் பத்திரிகைகளில் இடம் பெற்றிருந்தும் அது தொடர்பான விளக்கத்தைக் கொடுக்கும் விடுதலை ராசேந்திரனின் ''பொடோ ஒரு சட்ட பயங்கரவாதமே'' என்ற வெளியீட்டை வாசகர்களுக்கு வழங்க முடியாத வர்த்தகச் சிரமம் தான் என்ன?

எனவே புத்தகக் கண்காட்சியால் வாசகர்களின் அறிவுப் பசி நிரம்பி வழிகிறது என்பதும், வாசக சுதந்திரம் பேணப்படு





படிப்பகம்

www.padippakam.com

கிறது என்பதும், பத்திரிகைகளின் புனை கதைகளே தவிர உண்மை அல்ல.

புதுசா என்ன இருக்கு பார்க்கலாம் என்ற நுகர்வுக் கலாச்சாரத்திற்குத் தூசு தட்டுவதிலேயே பதிப்பக, விற்பனையாளர்கள் அக்கறை காட்டுகிறார்கள். இவர்களுடைய இந்த மதிப்பீடுகளையும் தாண்டி வாழ்க்கையின் புறநிலை நிர்ப்பந்தங்களால் உலகமயம் என்றால் என்ன? தனியார்மயம்னா என்ன? எல்லா அரசியலும் ஏமாற்று... மார்க்சிய நூல்களைப் படித்துப் பார்ப்போம் என்று வருகின்ற வாசகர்கள் கீழைக்காற்று விற்பனை நிலையத்தில் ம.க.இ.க.வின் குறைந்த விலையிலான வெளியீடுகளைப் புரட்டும்போது திருவிழாக் கூட்டத்தில் காணாமல் போன குழந்தையைக் கண்டடைந்ததைப் போல மகிழ்ந்து எங்களை மனதார வாழ்த்தியது ஒரு நம்பிக்கையான அனுபவம்.

புதுமைப்பித்தன், ஜெயகாந்தன், தலித்தியம், பெண்ணியம் என்பன போன்ற வகைகளுக்கு பத்திரிகைகளில் விளம்பரம், கல்வி சார்ந்த நிறுவனங்களின் தூண்டுதல் ஆகியவைகள் விற்பனைக்கு ஆதாரமாக அமைகின்றன. ஆனால் பத்திரிக்கை, கல்வி நிறுவனங்களின் திட்டமிட்ட புறக்கணிப்புக்கு உள்ளானபோதும், மார்க்சிய - லெனினிய நூல்களைப் பெருமளவு வாசகர்கள் வாங்கிச் சென்றனர் என்றால் சமூகக் களத்தில் அதற்கான பணிகளை வீச்சாகக் கொண்டு செல்லும் மார்க்சிய - லெனினிய இயக்கங்களையே அந்தப் பெருமை சாரும்.

போலீசு, சிறை, சித்திரவதை என்பது மட்டுமல்ல, காட்சித் தகவல் ஊடகங்களின் இருட்டடிப்புக்களையும் தாண்டி சமூகக் கல்விக்கான தேவைகளை ஈடு செய்வதற்கான போராட்டத்தில் மார்க்சிய - லெனினிய நூல்கள் மகத்தான சேவை புரிகின்றன. ஆனால் இந்தத் தேவையை நிறைவு செய்வதற்கான அறிவுத் துறை ஜனநாயகத்தை வெறும் புத்தகக் கண்காட்சியில் மட்டும் போராடிப் பெற முடியாது என்பதே உண்மை. வழக்கம் போலவே கல்வி நிறுவனங்களாலும் அறிவுசார் நிறுவனங்களாலும் வெளியே நிறுத்தப்பட்டிருக்கும் உழைக்கும் மக்கள் புத்தகக் கண்காட்சியிலும் வெளியேதான் நிறுத்தப் பட்டிருக்கிறார்கள். அவர்கள் தங்களது போராட்டக் களத்தில் முன் செல்லும் போது புத்தகக் கண்காட்சிக்கும் தன்னை மாற்றிக் கொள்ள வேண்டிய தேவை ஏற்படும். உண்மையான வாசக சுதந்திரம் அப்பொழுதுதான் நிறைவு செய்யப்படும். அதுவரை வர்த்தகச் சுதந்திரமே வாசக சுதந்திரமாகச் சித்தரிக்கப்படும்.

**● கீழைக்காற்று வெளியீட்டகம்**

# எழுத்து வியாபாரிகளும் புத்தக நுகர்வோரும்

புத்தகக் கண்காட்சி என்ற பெயரில் தனது பிற்போக்குக் கழிவுகளைக் கொண்டு வந்து கொட்டும் மதவாத நிறுவனங்களை நிறைய வாசகர்கள் மொய்ப்பதாய்ப் பறைசாற்றும் பத்திரிகைகள், கூட்டம் அதிகமாக இருந்தும், தமிழ் முழக்கம், கீழைக்காற்று போன்ற அரசியல் பளிச்சிடும் கடைகளை புத்தகக் கண்காட்சியில் இருப்பதாய்க்கூடக் காட்டாமல் புறக்கணிப்பு செய்தும் தங்களது வர்க்க சாதி பாசத்தைக் காட்டுகிறார்கள்.

விற்பனையான நூல்களைப் பற்றி, விவரம் எழுதும் இந்தப் பேர்வழிகளுக்கு நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்திலிருந்து கட்டுக் கட்டாக வாசகர்கள் வாங்கித் தூக்கிச் சென்ற மாஸ்கோ நூல்களின் விற்பனைச் சிறப்பைப் பற்றி மட்டும் எழுதக் கை இழுத்துக் கொள்கிறது.

புத்தகக் கண்காட்சியில் எங்கெல்லாம் நல்ல நூல்கள் இருக்கின்றன என்பதை ஆய்ந்தறிந்து சொல்ல அறிவு நாணயமற்ற இந்தத் தரகர்கள் எந்தக் கடையில் கூட்டமிருக்கிறது என்று பொருட்காட்சியியை நோட்டமிடும் வர்த்தகச் சூதாடிகளைப் போல வளைத்து வளைத்து எழுதுகிறார்கள்.

இன்னொரு புறத்தில் புத்தகக் கண்காட்சியைப் பதிப்பாளர், விற்பனையாளர்களைவிடப் பக்குவமாகப் பயன்படுத்திக் கொள்பவர்கள் இந்த பத்திரிக்கைகளின் உள்வட்டத்தில் இயங்கும் எழுத்துத் தரகர்களே. ''பிரதிகளைப் பேசவிடுங்கள், எழுத்தாளன் இரண்டாம் பட்சம், வெகுஜன ரசனை என்றாலே பெரிய இலக்கியம் கிடையாது'' என்றெல்லாம் பாசாங்கு செய்யும் இந்தப் பேர்வழிகள் புத்தகக் கண்காட்சிக் கடைகளில் வந்து உட்கார்ந்து கொண்டு ''புள்ளையார் பால் குடிக்கிறார், மூப்பனார் சைக்கிள் ஓட்டுகிறார்'' என்பது போல ''மனுஷ்ய புத்திரன் கையெழுத்துப் போடுகிறார், இந்தக் கடையில் சுஜாதா சொடுக்குப் போடுகிறார், அதோ வானதியில் உதயமூர்த்தி உட்கார்ந்திருக்கிறார்'' என்று ஒலிபெருக்கியில் அறிவித்த வண்ணம் இருந்தனர். இந்தப் பச்சையான சுய விளம்பரங்களைப் பார்க்கச் சகிக்கவில்லை. 'நீராலானது' என்ற தன்னுடைய கவிதைத் தொகுப்பு 95 பிரதிகள் விற்றதில் மனுஷ்ய புத்திரனுக்கு ஏகக் குஷி, எல்லாம் விளம்பரத்தாலானது என்று அவருக்குத் தெரியாதா என்ன?

யாரெல்லாம் தான் படிக்கும் புத்தகங்களின் மூலமாக ஒரு மயிரளவும் மாற்றம் வராதவர்களாக நீடிக்கிறார்களோ அவர்கள்தான், அந்த நுகர்வோர்கள்தான் இவர்களின் வாசகர்தளம்.

இந்தச் சந்தையில் நாம் என்ன விலைக்கு விற்கப் போகிறோம் எனத் தெரியாமல் விழித்துக் கொண்டிருக்கும் மாட்டுத் தரகர்களைவிடக் கைதேர்ந்தவர்கள் சில எழுத்தாளர்கள். இதற்கு ஒரு வகை மாதிரி அட்சரம் பத்திரிகையின் 'வெளி - ரங்கராஜன்.' அட்சரம் என்ற பத்திரிகையை தானாகவே வலிய வந்து விற்பனைக்குத் தந்துவிட்டு கீழைக்காற்றுக்குள் பலபேர் புத்தகம் பார்த்துக் கொண்டிருந்த நேரத்தில் உடனே கணக்கை முடியுங்கள் என்று உத்தரவு பிறப்பித்தார். புத்தகங்களைத் தேடி எடுக்க வேண்டும் என்றால் கடைக்குள் இருக்கும் அனைத்து வாசகர்களையும் வெளியேற்ற வேண்டிய சூழ்நிலை இருந்ததால், கண்காட்சி நேரம் முடிந்த பிறகு வாருங்கள் இல்லையேல் நாளை காலை வாருங்கள் என்றோம். உடனே வசிட்டருக்கு வந்தது கோபம் ''நான் வியாபாரி அல்ல எழுத்தாளன்'' என்று பிரகடனம் செய்தார்.

புரிந்து கொண்டோம், போட்ட முதலுக்கு லாபம் பார்க்கக் காத்திருப்பவன் வியாபாரி, அடுத்தவன் முதுகிலேறி அன்றைக்கே கல்லா கட்ட நினைப்பவன் - எழுத்தாளன் என்ற இரகசியத்தை! பண வடிவிலான பதில் எங்களிடமிருந்து உடனே கிடைக்காததால் வெளி ரங்கராஜன் தனக்கான நாடகச் சூழலை உருவாக்க ஆரம்பித்தார். ''இலக்கியம் தெரியாதவன் கிட்ட புத்தகம் கொடுத்தது என் தப்பு'' என்று ஊரைக் கூட்டி ஒப்பாரி வைக்க முயற்சித்தார்.

புத்தகத்தைக் கொடுக்கும்போது எங்களின் இலக்கிய அறிவு பற்றிய விசாரணை இல்லை. கேட்டவுடன் பணம் தரவில்லை என்றவுடன் கலை இலக்கியம் மற்றும் எங்களின் கற்பு நெறியைப் பற்றி அவரின் டிராமா அரங்கேறத் தொடங்கியது.

காசு பார்ப்பதில் மட்டுமல்ல கீழைக்காற்று கடையிலிருக்கும் மார்க்சிய ஆசான்களின் படத்தைப் பார்த்துச் சூடேறிப் போனவர்கள் பலர். ஏதோ இங்கிலாந்து மைதானத்தில் ''கோல்ஃப்'' விளையாடும் கனவானைக் கூப்பிடுவது போல எதற்கெடுத்தாலும் ஆங்கிலத்தில் அறிவிப்புகள். அன்றாட வாழ்க்கையில் வணக்கம் என்பது நடைமுறைக்கு வந்த பிறகும் பார்ப்பனத் திமிருடன் அறுசுவை அரசு கேண்டீன் வாயிலில் 'அனைவருக்கும் எமது நமஸ்காரம்' என்ற வரவேற்புப் பலகை. நாங்கள் வியாபாரியல்ல எழுத்தாளர்கள் என்று நாக்கைச் சுழற்றிய எந்தத் தமிழ் எழுத்தாளனும் தனது தார்மீக ஆவேசத்தை இதன்பால் எழுப்பியதாகத் தகவல் இல்லை.


படிப்பகம்

www.padippakam.com

## காதல், தியாகம், மரணம்:

# பகத்சிங்கின் பார்வை

**காதல், தியாகம், தற்கொலை, மரணம் ஆகியவை குறித்து பகத்சிங் கொண்டிருந்த கருத்துக்களை அவர் சுகதேவுக்கும், படுகேஸ்வர் தத்துக்கும் எழுதிய கடிதங்கள் வெளிப்படுத்துகின்றன. புரட்சியாளர்கள் எனப்படுவோர் 'உணர்ச்சியற்ற எந்திரங்கள்' என்ற அவதூறையும், 'உணர்ச்சி வேகத்தில் அறிவிழந்த இளைஞர்கள்' என்ற பிதற்றலையும் ஒருங்கே முறியடிக்கின்றன இக்கடிதங்கள்.**

*சுக்தேவும், பகத்சிங்கும் மிகவும் நெருங்கிய தோழர்கள். வெடிகுண்டு வீசுவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் பற்றி இருவருக்குமிடையே கருத்து வேறுபாடுகள் இருந்தன. இவற்றைத் தீர்த்துவைக்கும் நோக்கத்துடன் பகத்சிங், சுக்தேவிற்குக் கடிதம் எழுதினார். ஏப்ரல் மாதம் 11-ம் தேதியன்று, சுக்தேவ் கைது செய்யப்பட்ட சமயத்தில், இக்கடிதம் அவரிடமிருந்து மீட்கப்பட்டது. அதன்பின் அது வழக்கு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாகிவிட்டது. அக்கடிதத்திலிருந்து சில பகுதிகள்:*

*அன்புள்ள சகோதரருக்கு,*

இந்தக் கடிதம் கைக்குக் கிடைப்பதற்குள் நான் எனது இலட்சியம் நோக்கிய திசையிலே வெகுதூரம் சென்றிருப்பேன். என்னை நம்பு; இப்பொழுதெல்லாம், நான் மிகுந்த மகிழ்ச்சியுடன் இறுதிப் பயணத்திற்குத் தயாராகிவிட்டேன்..... நானும் வாழ்க்கையின் ஆசைகளும் அபிலாஷைகளும் நிறைந்தவன்தான் என்பதை வலியுறுத்திக் கூறுகிறேன்; இருந்தாலும் வேண்டிவந்தால் எல்லாவற்றையும் தியாகம் செய்யவும் சித்தமாக இருக்கிறேன். மெய்யாகவே தியாகம் செய்வேன். மனிதன் உண்மையான மனிதனாக இருக்கும் பட்சத்தில், இவை இடையூறாக இருக்கவே முடியாது. இதற்கான சான்று உனக்கு விரைவிலேயே கிடைக்கும்.

ஒரு மனிதனின் குணாதிசயங்களைப் பற்றி ஆராயும்போது கருத்தில் கொள்ள வேண்டிய ஒரு முக்கியமான விசயம் காதல் ஒரு மனிதனுக்கு, எங்காவது உதவியாக இருந்திருக்கிறதா என்பதுதான். இதற்கான எனது பதில் -- ஆம், இருந்திருக்கிறது என்பதுதான். ஆம், அவர்தான் மாஜினி. தமது முதல் புரட்சியின் தோல்வியையும், தமது கடுமையான தோல்வியின் வேதனையையும், இறந்துவிட்ட தமது சகாக்களின் நெஞ்சைப் பிழியவைக்கும் நினைவுகளையும், அவரால் பொறுத்துக் கொள்ள முடியாமல் இருந்தன என்று படித்திருப்பாய். ஆனால், அவருடைய அன்புக் காதலியிடமிருந்தான ஒரு கடிதம் மட்டும் வராமல் இருந்தால், அவருக்குப் பைத்தியமே பிடித்திருக்கலாம்; அல்லது அவர் தற்கொலை செய்து கொண்டிருக்கலாம். இந்தக் கடிதம்தான், அவரை மற்றவர்களைப் போலவே வலிமையுள்ளவராக ஆக்கியது. சொல்லப்போனால் மற்றவைகளைவிட மிக வலிமையானவராகச் செய்தது.

காதலின் தார்மீக ரீதியான நிலையைப் பொறுத்தமட்டில், காதல் என்பது மனக்கிளர்ச்சி. அதாவது உணர்ச்சி வேகத்தைத் தவிர வேறெதுவுமில்லை என்றுதான் நான் கூறுவேன். அது ஒரு மிருக இயல்புணர்ச்சி அல்ல; ஆனால், இனியதோர் மனிதாபிமான மனக்கிளர்ச்சி. காதல், காதலாகவே இருக்கும் பட்சத்தில், மனித குணாதிசயங்களை, அது எப்போதுமே. மேலான நிலைக்கு உயர்த்துகிறது; கீழே சரிவதற்கு ஒரு போதுமே அனுமதிப்பதில்லை. இந்தப் பெண்களைப் பைத்தியம் என்று ஒருபோதுமே கூறமுடியாது. நாம் திரைப் படங்களில் பார்க்கிறோமே - அங்கே அவர்கள் எப்போதுமே, மிருக இயல்புணர்ச்சியின் கரங்களில்தான் விளையாடுகிறார்கள்.

மெய்யான காதலை ஒருபோதுமே உருவாக்கிட முடியாது; அது தானாகவே வளருகிறது. எப்போது என்று யாருமே சொல்ல முடியாது.

இளம் ஆண்களும் பெண்களும், ஒருவரையொருவர் காதலிக்கலாம். காதலின் துணையோடு அவர்கள் தங்கள் காமவெறிகளுக்கும் உயரே உன்னதமான ஒரு நிலையை எட்டலாம்; தங்கள் நேர்மையையும் தூய்மையையும், மாசுபடாமல் வைத்திருக்கலாம் என்று நான் கூறுவேன்....

கடமையுணர்வின் அடிப்படையில் ஒரு மனிதன் முடிவெடுக்கும் போது காதலையும், வெறுப்பையும், வேறு எல்லா மன உணர்ச்சிகளையும் கட்டுப்படுத்த முடிந்தால் அதுவே மிக உயரிய, இலட்சியப்பூர்வமான ஒரு மனநிலையாக அமையும்.

ஒரு தனிநபருக்கு, இன்னொரு தனி நபரின்பால் ஏற்படும் காதலை, அதுவும் கூட, இலட்சியப்பூர்மான செயல்பாடுகளைக்கோருகின்ற நிலைமைகள் இருக்கும் சூழ்நிலையில் ஏற்படுகின்ற காதலைத்தான் நான் கண்டனம் செய்துள்ளேன். ஒரு மனிதன், ஆழ்ந்த காதல் உணர்வு கொண்டிருக்க வேண்டும்; அது, ஒரு தனி மனிதரிடம் மட்டுமே காட்டப்படாமல், உலகனைத்துக்குமே உரியதாய் அமைந்திட வேண்டும்.

*அன்புள்ள சகோதரா,*

உன் கடிதத்தை, நான் மிகுந்த கவனத்துடன் திரும்பத் திரும்பப் படித்தேன். மாறியுள்ள சூழ்நிலைகள் நம்மை வெவ்வேறான விதத்தில் ஈர்த்திருக்கின்றன என்றே நான் கருதுகிறேன். நீ சிறைக்கு வெளியே இருந்த காலத்தில் வெறுத்து ஒதுக்கிய விசயங்கள் இப்பொழுது உனக்கு இன்றியமையாதவை ஆகியுள்ளன.

அதுபோல, நான் சிறைக்கு வெளியே இருந்தபோது ஆதரித்துவந்த விசயங்கள் இப்பொழுது எனக்கு முக்கியத்துவம் வாய்ந்தவையாகத் தெரியவில்லை. உதாரணமாக, இதற்கு முன்னர், தனிமனிதரின் காதலுக்கு நான் மிகுந்த முக்கியத்துவம் அளித்துவந்தேன்; ஆனால் இப்போதோ அந்தக் காதலுக்கு, என் இதயத்திலும் மனதிலும் குறிப்பிட்ட இடம் எதுவுமே இல்லை.

வெளியில், நீ அதை வன்மையாக எதிர்த்தாய், ஆனால் இப்போதோ, இதுபற்றிய உன் கருத்துக்கள் பெரிதும் மாறுபட்டுள்ளன; மானுட வாழ்க்கையில், காதல் இன்றியமையாத பகுதி என்றும் இப்போது நீ கருதுகிறாய். இந்த அனுபவம் உனக்கு மகிழ்ச்சியளித்துள்ளது.

தற்கொலையைப்பற்றி நான் ஒருநாள் உன்னிடம் பேசியது, உனக்கு நினைவிருக்கலாம். குறிப்பிட்ட ஒருசில சந்தர்ப்பச் சூழ்நிலைகளில், அது சரியாகவே இருந்திருக்கலாம் என்று நான் அப்போது கூறினேன். ஆனால், நீ எனது கருத்துக்களை எதிர்த்தாய்...



படிப்பகம்

www.padippakam.com

இத்தகைய கோழைத்தனமான செயலை, நியாயமானது என்று கருதவே முடியாது என்று நீ பரிகாசமாகக் கூறினாய். ஆனால், இந்த விஷயத்தைப் பற்றியதான உன் கருத்துக்களும்கூட, இப்பொழுது முழுக்க முழுக்க மாறிவிட்டன என்பதை நான் உணருகிறேன். இப்போது, குறிப்பிட்ட ஒரு சில சந்தர்ப்பச் சூழ்நிலைகளின் கீழ், அது நியாயமானது மட்டுமல்ல இன்றியமையாதது என்றும் நீ கருதுகிறாய்.

ஆனால், தற்கொலை என்பது முற்றிலும் கோழைத்தனமான, வெறுக்கத்தக்க குற்றம் என்று நீ முன்னர் கூறிய அதே கருத்துக்களை ஒத்தவையாகவே எனது கருத்துக்களும் இன்று அமைந்துள்ளன. எந்த ஒரு மனிதனுமே, அதனை நியாயமானதாகக் கருதமுடியாது. அப்படியிருக்க, புரட்சியாளர் மட்டும் இதற்கு விதிவிலக்கா என்ன?...

இதுதவிர, தங்களுக்கு மரண தண்டனை அளிக்கப்படும் என்றே நம்மில் சிலர் நம்புகிறார்கள். அவர்கள் விசயத்தில், மரண தண்டனைக்கான தீர்ப்பு வழங்கப்பட்டு, அதன் பின்னர், மரண தண்டனையும் நிறைவேற்றப்படும்வரை, நாம் மிகுந்த பொறுமையுடன் காத்திருக்க வேண்டும். அது, ஒரு அழகான இனிய சாவாகவும் இருக்கும்.

ஆனால், தற்கொலை செய்து கொள்வது என்பது, குறிப்பிட்ட சில இன்னல்களையும் துன்பங்களையும் விட்டுத் தப்பித்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக உயிரை விடும் கோழைத்தனம். இன்னல்கள், ஒரு மனிதனை முழுமையாக்குகிறது என்பதை நான் உனக்குக் கூற விரும்புகிறேன். நானோ - நீயோ - நம்மில் யாருமே இன்னும் இன்னல்களை அனுபவிக்கவில்லை; நமது வாழ்க்கைகளின் இந்தப் பகுதி இப்பொழுதுதான் தொடங்குகிறது....

''புரட்சியாளர்களாக'' இருந்து வருவதில், பெருமைகொள்ளும் நம் போன்ற மக்கள், தாங்களாகவே தொடங்கியுள்ள போராட்டங்கள் வாயிலாக வரவழைத்துக் கொண்டிருக்கும், இன்னல்களையும் இடர்ப்பாடுகளையும், வேதனையையும், துன்பங்களையும் பொறுத்துக் கொள்வதற்குத் தயாராகவே இருக்க வேண்டும்.....

சிறைச்சாலையில், 14 ஆண்டுகள் வரை துன்பங்களை அனுபவித்த ஒரு மனிதர், அவர் சிறைக்குச் செல்வதற்கு முன்னர் கொண்டிருந்த அதே கருத்துக்களையே தொடர்ந்து கொண்டிருக்க வேண்டும் என்பதில்லை என்று நீ எழுதுகிறாய். சிறைச்சாலைச் சூழ்நிலைகள், அவரது சிந்தனைகள் அனைத்தையும் நொறுக்கிப் பொடியாக்கி விடும் என்றும் காரணம் காட்டுகிறாய்.

சிறைக்கு வெளியே நிலவும் சூழ்நிலை, நமது கருத்துக்களுக்கு இசைவானதாக இருக்கிறதா என்று நான் கேட்கட்டுமா? தோல்விகளின் காரணமாக, நாம் அவற்றைக் கைவிட்டிருக்க முடிந்திருக்குமா? இந்தத் துறையில் நாம் புகாமல் இருந்திருந்தால் புரட்சி நடவடிக்கை எதுவுமே ஆரம்பித்திராது என்று நீ கூறுகிறாயா? அப்படியென்றால், நீ நினைப்பது தவறு; சுற்றுச் சூழ்நிலையை மாற்றுவதில் பெருமளவிற்கு நாம் துணை புரிந்துள்ளோம் என்பது உண்மையானாலும் கூட நாம் நமது காலத்தினுடைய தேவையின் விளைவுதான்!

கம்யூனிசத்தின் படைப்பாளியான கார்ல் மார்க்ஸ், இந்தச் சிந்தனையை உருவாக்கிடவில்லை என்றும் நான் கூறுவேன். குறிப்பிட்ட சில சிந்தனையாளர்களை உருவாக்கியதே ஐரோப்பாவில் தோன்றிய தொழில்துறைப் புரட்சிதான்! அவர்களில் கார்ல் மார்க்ஸும் ஒருவராக இருந்தார். காலச்சக்கரத்துக்கு, ஓரளவிற்கு, குறிப்பிட்ட ஒரு உந்துதலை அளிப்பதில் கார்ல் மார்க்ஸ் தம் சொந்த முறையிலே மிகவும் உதவியாக இருந்தார் என்பதில் சந்தேகமேயில்லை.

**“காதல் என்பது மனக்கிளர்ச்சி. அதாவது உணர்ச்சி வேகத்தைத் தவிர வேறெதுவுமில்லை என்றுதான் நான் கூறுவேன்.... கடமையுணர்வின் அடிப்படையில் ஒரு மனிதன் முடிவெடுக்கும் போது காதலையும், வெறுப்பையும், வேறு எல்லா மன உணர்ச்சிகளையும் கட்டுப்படுத்த முடிந்தால் அதுவே மிக உயரிய, இலட்சியப்பூர்வமான ஒரு மனநிலையாக அமையும்.”**



இந்த நாட்டில், கம்யூனிசம் மற்றும் பொதுவுடைமைச் சிந்தனைகளுக்கு, நான் (ஏன் நீயும்கூட) உயிர் கொடுக்கவில்லை. மாறாக, நமது காலங்கள் மற்றும் சந்தர்ப்பச் சூழ்நிலைகள், நம்மீது ஏற்படுத்தியுள்ள தாக்கத்தின் விளைவுதான் அது. இந்தக் கருத்துக்களை எங்கும் பரப்பிடச் செய்வதில் நாமும் எளிமையான அளவில் முயற்சி செய்திருக்கிறோம் என்பதில் ஐயமில்லை. ஆகவே, இந்தப் பொறுப்பான பணியின் சுமையை நாம் நம்மீது சுமந்து கொண்டிருக்கிறோம் என்பதால், அப்பணியைத் தொடர்ந்து நடத்தி நிறைவேற்ற வேண்டும் என்று நான் கூறுகிறேன். கஷ்டங்களைத் தவிர்ப்பதற்காக தற்கொலை செய்து கொள்வது என்பது மக்களுக்கு நல்வழி காட்டாது; மாறாக, அது ஒரு பிற்போக்குச் செயலாகவே அமையும்....

வாழ்வு, மரணம் போன்ற விசயங்களிலும் நாம் முற்றிலும் உலகாயத முறையிலேயே சிந்திக்க வேண்டும். ஒருமுறை, நான் தில்லியிலிருந்து இங்கு அழைத்துவரப்பட்ட போது, உளவு இலாகாவைச் சேர்ந்த அதிகாரிகள் சிலர், இந்த விசயத்தைப் பற்றி என்னிடம் பேசினார்கள்.

எந்த ஒரு ரகசியத்தையும் வெளியிட நான் தயாராக இல்லாததாலும், என் உயிரைக் காப்பதில் நாட்டம் காட்டாததாலும், நான் வாழ்க்கையில் விரக்தி அடைந்து விட்டேன் என்பதை அது நிரூபித்து



படிப்பகம்

www.padippakam.com

விட்டதாக அவர்கள் கூறினார்கள். என் மரணம் ஒரு தற்கொலைக்கு ஒப்பாகவே இருக்கும் என்பது அவர்களின் தர்க்கம்.

அதற்கு நான் சொன்ன பதில்: ''என் போன்று திடமான நம்பிக்கையும் எண்ணங்களும் கொண்ட ஒருவன், வீணாக இறந்துபோவதை ஒருபோதும் பொறுத்துக் கொள்ள மாட்டான். வாழ்க்கையை அதிக அளவு பயன்படுத் தவே நாங்கள் விரும்புகிறோம். முடிந்த வரை மானுட நலன்களுக்குத் தொண்டு செய்வதே எங்கள் நோக்கம். குறிப்பாக, துயரமோ கவலையோ இன்றி வாழும் மனிதன், தற்கொலையைப் பற்றி சிந்திப் பதே முறையற்றது என்றுதான் கருதுவான். அப்படியிருக்க, அச்செயலில் எப்படி இறங்குவான்?'' அவர்களுக்குச் சொன்ன அதே பதிலைத்தான் உனக்கும் சொல்ல விரும்புகிறேன்.

உன்னைப் பற்றி நான் என்ன நினைக் கிறேன் என்று கேட்கிறாயா? எனக்கு மர ணதண்டனை விதிக்கப்படும் என்பதில் கொஞ்சம்கூட சந்தேகமில்லை; இதுவிச யத்தில், தண்டனைக் குறைப்போ அல்லது முழு அளவிற்கான மன்னிப்போ அளிக்கப் படும் என்பதில் எனக்குச் சற்றும் நம்பிக்கை இல்லை. அப்படியே பூரண மன்னிப்பு அளிக்கப்பட்டாலும்கூட, அது அனைவருக்கும் அளிக்கப்படமாட்டாது. அதிலும் எனக்கு மன்னிப்பு கிடைக்காது; இருந்தும்கூட நமக்கு விடுதலையளிக்கப் பட வேண்டும் என்று நான் விரும்பு கிறேன்.

மக்கள் கிளர்ச்சியாக நமது இயக்கம் மலர்ந்து உச்சகட்டத்தை அடையும் சம யத்தில் நான் தூக்கிலிடப்பட வேண்டும் என்பது எனது விருப்பம்.

***படுகேஸ்வர் தத்திற்கு எழுதிய கடிதம்***

***அன்புள்ள சகோதருருக்கு,***

எனக்குத் தண்டனை விதிக்கப்பட்டு விட்டது - தூக்குத் தண்டனை. என்னைத்த விர, தூக்குத்தண்டனைக்காகக் காத்தி ருக்கும் பல குற்றவாளிகள் உள்ளனர். தூக்கு மேடையிலிருந்து எப்படியாவது தப்புவதற்காக அவர்கள் இறைவனிடம் வேண்டுகிறார்கள். ஆனால் அவர்களி டையே நான் ஒருவன்தான் தன்னுடைய லட்சியங்களுக்காகத் தூக்குமரத்தில் தொங்கும் பாக்கியத்துக்காக, அந்த நாளை மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்தி ருக்கிறேன். ஒரு புரட்சியாளர், தன் உயிரைத் தியாகம் செய்ய முடியும் என்பதை மகிழ்ச்சியுடன் தூக்கு மேடையே றுவதன்மூலம் நான் உலகிற்கு எடுத்துக் காட்டுவேன்.

எனக்கு மரணதண்டனை விதிக்கப்பட் டுள்ளது; ஆனால் உனக்கோ ஆயுள் தண்டனை அளிக்கப்பட்டுள்ளது. புரட்சி யாளர்கள், தங்களின் இலட்சியங்களுக் காகச் சாவது மட்டுமல்ல; அவர்கள் உயி ருடன் இருக்கும்போது பல கஷ்டங்க ளையும் எதிர்த்திட முடியும் என்பதை, நீ உயிருடன் இருந்து உலகுக்கு எடுத்துக் காட்ட வேண்டும்.



**சுகதேவ்**

மரணம் என்பது உலகப் பிரச்சினைக ளிலிருந்து விடுதலை பெறுவதற்கான ஒரு வழியாக ஆகிவிடக்கூடாது; மாறாக, தற்செயலாகத் தூக்குத் தண்டனையி லிருந்து தப்பிய புரட்சியாளர்கள் தூக்கு மேடை ஏறவும் அஞ்சாமல் இருப்பது மட்டுமின்றி, சிறைச்சாலையின் குறுகிய இருண்ட அறைகளில் அடைக்கப்பட்ட நிலையிலும், படுகேவலமான அநியாயங் களையும் அட்டூழியங்களையும் பொறுத்துக் கொள்ள முடியும் என்ப தையும், உன் சொந்த வாழ்க்கை மூலமா கவே உலகுக்கு எடுத்துக் காட்ட வேண்டும்.

உன்
பகத்சிங்.

*தூக்கு தண்டனை நிறைவேற்றப்படு வதற்கு முதல்நாள், சிறையின் இன்னொரு வார்டில் இருந்த புரட்சியா ளர்களிடமிருந்து, அவருக்குக் குறிப்பு ஒன்று வந்து சேர்ந்தது. கடைசித் தரு ணத்தில் காப்பாற்றுவதற்கு முயற்சி செய்யும் யோசனை அதில் இருந்தது. இந்தக் குறிப்புக்கு பகத்சிங் பதில் அனுப்பினார். தமது இன்னுயிரைத் தியாகம் செய்ததற்கு முதல் நாளன்று, தமது தோழர்களுக்கு எழுதிய கடைசிக் கடிதம் பின்வருமாறு.*

***தோழர்களே!***

உயிருடன் இருக்கும் ஆசை என்னுள் ளிலும் இருப்பது இயல்பானதே. நான் அதனை மூடிமறைக்க விரும்பவில்லை. ஆனால், என் விசயத்தில், உயிருடன் இருப்பது என்பது நிபந்தனைக்கு உட்பட் டது. நான் ஒரு கைதியாகவோ அல்லது கட்டுதிட்டங்களுக்கு உட்பட்டோ, உயி ருடன் இருப்பதை விரும்பவில்லை.

என்னுடைய பெயர், இந்தியப் புரட்சிக் கட்சி (ஹிந்துஸ்தானி இன்கலாப் பார்ட்டி)யின் ஒரு சின்னமாகிவிட்டது. புரட்சிக் கட்சியின் இலட்சியங்களும் தியா கங்களும் என்னை மிகவும் உயர்த்தியுள் ளன. நான் உயிருடன் இருந்தால்கூட ஒருக்கால் இந்த உயரத்தை எட்டியிருக்க மாட்டேன்.

இன்று என்னுடைய பலவீனங்கள் மக்களின் முன்னிலையில் இல்லை. தூக்கி லேற்றப் படுவதினின்றும் ஒருக்கால் நான் தப்பித்தால், அந்தப் பலவீனங்கள் வெளிப் படலாம். புரட்சிச் சின்னம் ஒளியிழக் கலாம், ஏன்? அது அறவே அழிந்தும் போகலாம். ஆனால் நான் துணிவுடனும், புன்னகையுடனும் தூக்குமேடை நோக்கிச் சென்றால் இந்தியத் தாய்மார்கள் தம் புதல் வர்கள் பகத்சிங் போல் விளங்கிட வேண்டும் என்று விரும்புவார்கள்; நாட்டின் விடுதலைக்காகத் தியாகம் செய்வோர்களின் எண்ணிக்கை, ஏகாதிபத் தியத்தின் அரக்கத்தனமான சக்தியினாலும் கூட புரட்சியைத் தடுத்து நிறுத்தச்செய்ய முடியாத அளவிற்குப் பெருகிவிடும்.

ஆனாலும் ஒரு விசயம் இன்றும் எனக்கு வேதனை தந்து கொண்டிருக்கிறது. இந்த நாட்டுக்காகவும், மனித குலத்துக்கா கவும் என் இதயத்தில் சில ஆசைகளும் அபிலாஷைகளும் இருந்தன; ஆனால் அவற்றில் ஆயிரத்தில் ஒரு பங்கைக்கூட என்னால் நிறைவேற்ற முடியவில்லை. நான் உயிருடன் இருந்திருந்தால், இந்த நோக்கங்களை எட்டும் வாய்ப்பு கிடைத்தி ருக்கும்; என் ஆசைகளை நிறைவு செய்யவும் முடிந்திருக்கும்.

இதைத் தவிர, தூக்குமேடையிலிருந்து தப்புவதற்கான ஆசை என் இதயத்தில் இருந்ததில்லை. ஆகவே என்னை விடவும் பாக்கியசாலி யார்தான் இருக்க முடியும்? இப்பொழுதெல்லாம் நான் என்னைப்பற்றி பெருமையடைகிறேன். இறுதித் தேர்வுக் காக நான் மிகுந்த ஆர்வத்துடன் காத்திருக் கிறேன்; அந்தத் தேர்வு விரைவிலேயே நெருங்கி வந்திட வேண்டுமென்று விரும் புகிறேன்.

உங்கள் தோழன்,
**பகத்சிங்.**

**''எப்போதாவது எண்ணிப் பாருங்கள்'' (பப்ளிகேஷன்ஸ் டிவிசன் நூலிலிருந்து)**



படிப்பகம்

www.padippakam.com

● சிறுகதை

# அடிக்கட்டுமானம்

துரை. சண்முகம் ●

''என்ன கண்ணன் சார் இன்னைக்கும் லீவா!''

''வாங்க ரகு, நம்ம ஏ செக்ஷன் சுப்பிரமணிய அட்ஜஸ்ட் பண்ணச் சொல்லியிருக்கேன் மத்தியானத்துக்கு மேல அப்புடியே வந்து தலைய காட்டணும்.''

''இந்த மாசம் முழுக்க உங்கள சீட்லயே பாக்க முடியலயே.''

''ஆமாம் சார், இந்த வீட்டக் கட்டி முடிக்கிறதுக்குள்ள நம்ப அஸ்திவாரமே ஆடிப் போய்டும் போல இருக்கு. பத்து மூட்ட சிமெண்டும்பான், கொஞ்சம் அசந்தா வழியில எங்காவது ரெண்ட எறக்கிடுவான். டெய்லி போய் நோட்டம் பாக்க வேண்டியிருக்கு.''

''இங்க உள்ள கொத்தனாருங்கதான் டபாய்ச்சிடுவான்னு ஊர்லேந்து அழைச்சிட்டு வந்து வீடு கட்டுறீங்க அவனுகளுமா அப்படி?''

''நம்ப முடியாது சார்! நாலு மாசமா இங்கயே தங்கியிருக்கான்ல, இங்க உள்ள எடுப்பாளு, தொடுப்பாளோட சேர்ந்து ஏதும் பண்ணிட்டான்னா? யார சார் நம்ப முடியுது?''

''அதுவும் சரிதான், கூடவே பத்து வருஷமாப் பழகுறோம். கஷ்டப்பட்டு நாம தேத்தி வச்ச பார்ட்டிகிட்ட, நான்தான் சேங்ஷன் ஆர்டர் வருமானத்த பண்ணேன்னு நம்ப ஹெட் கிளார்க்கு மொத்தமாத் தட்டிட்டான். கொத்தனாருங்க எம்மாத்திரம்?

''செலவு இழுத்துகிட்டே போவுது சார். நெஜமாத்தான் ஆவுதா, இல்ல சும்மா கணக்கு காட்டுறானான்னு புரிய மாட்டேங்குது. நமக்கு வீடு கட்றது புதுசா, அதான் பயந்து பயந்து கண்காணிக்க வேண்டியிருக்கு. ஒரு லோடு மண்ணுங்குறான். அடிச்சா பத்தாது, பூமி ஈரவாகு, இன்னும் ஒண்ணுங்குறான், பேஜாரா இருக்கு சார்!''

''இவனுகள எல்லாம் நாம வச்சு வேலை வாங்க முடியாது சார். இஞ்சினீயருங்கதான் இவனுங்களுக்கு லாயக்கு. கம்பி வளைக்குற மாதிரி வளைச்சி எடுத்துடுவான். இத்தன நாளு மாசக் கணக்குல இவனுங்க வேலைய இழுக்க வுடுவானா? சரி இங்கவுள்ளவனுங்க மட்டப் பலகையைத் தேச்சே ஒரு நாளு கூலிய வாங்கிடுவானேன்னுதான் ஊர்லேந்து கொண்டாந்தேன். இவனும் நல்ல வேலக்காரன்தான். என்ன! ஒவ்வொண்ணா ஏத்திகிட்டே போறான். நானும் எதையும் அவன் கைல தர்றது இல்ல. பெரும்பாலும் நானே போய் வாங்கிப் போட்டுர்றது. இருந்தாலும் பயமா இருக்கு!''

''நீங்க வேற ஊர்க்காரனாவது, ஒறவுக்காரனாவது; ஒண்ணுக்கு மூணு போட்டாதான் கிரிப்பா இருக்கும்னு, பத்து மூட்டைக்கு இருபது கேட்பான். எறக்குனீங்கன்னு வச்சுக்குங்க, அப்புறம் பாலு ஊத்தி அடிச்சா கொஞ்சம் சைனிங்கா இருக்கும்னு இன்னும் ரெண்டு மூட்டை கேப்பானுங்க. அவனுங்கள மணல் சல்லடை மாதிரி நாம சலிச்சிகிட்டே இருந்தாத்தான் சமாளிக்க முடியும்.''

ரகு விவரித்துக் கொண்டே போக கட்டிடமே தலையில் இடிந்து விழுவது மாதிரி கண்ணனின் முகம் மாறிக் கொண்டே போனது.

''என்ன சார்! இதுக்கே மலைச்சிட்டீங்க, சும்மாவா சொன்னான் வீட்ட கட்டிப் பாரு கல்யாணத்த பண்ணிப் பாருன்னு!''

''அதுக்கில்லீங்க ரகு, நீங்க சொல்ற மாதிரிதான் செலவாகுது. நேத்துகூட பேஸ்மண்ட்ட சுத்தி அப்படியே ஒரு அடிக்கு கல்லு போட்டு மொழுகுனா, ரயில்வே லைனுங்கறதுனால அதிர்ச்சி தாங்கும்னான். இப்ப காலைல இன்னொரு லோடு வேணுங்குறான்.''

பொறி தட்டியது போல நிமிர்ந்து உட்கார்ந்த ரகு ''அது நல்லதுதான் சார். ஏன் பெரிசா கவலபடுறீங்க. ஜோரா இன்னும் அழகா பண்ணிடலாமே! பத்து வருஷமா ஹெட் குவார்ட்டர்ஸ்ல இருந்தும் உங்களுக்கு எதையும் யுட்டிலைஸ் பண்ணிக்க தெரியல சார். எங்கிட்ட ஒரு வார்த்த சொல்லக் கூடாது. நம்ப மச்சினந்தான் கார்ப்பரேஷன்ல ஜே.இ.யா இருக்கான். சொன்னா ஜல்லியும், குவாலிட்டியான மார்பிள்சும் இறக்கி விட்டுட்டுப் போறான். நேரு சீரா லோ பட்ஜெட்ல முடிச்சிடலாம். கண்ணன் டோன்ட் ஒர்ரி!''

ஒண்ணுக்கு ஒண்ணு போட்டது போல இறுகிக் கிடந்த கண்ணனின் முகத்தில் ஒளி பிறந்தது.

கண்ணன் 'செட்' ஆனதால் ரகுவுக்கும் நிறைவாக, ஆறுதல் வார்த்தைகளால் கண்ணனைத் தேற்றினார்.

''நேர்மை, உண்மை எல்லாம் போச்சு சார். எவனையும் நம்ப முடியாது, உஷாரா பாத்துக்குங்க. என்ன பண்றது. அவனவன் டூட்டிய சின்சியரா பாத்தா நாம ஏன் கெடந்து அலையணும். வரட்டுங்களா, மச்சினனுக்குப் போன் பண்ணிடறேன். லோட எறக்கிக்குங்க!''

''ரகு சார், ஆபீஸ் பக்கம் போனா ஏ.ஓ. சார்கிட்ட 'டே புக்க அட்ஜஸ்ட் பண்ணச் சொல்லிடுங்க.''

''அதெல்லாம் பிராப்ளம் இல்ல சார், நாம அவனுகளுக்குச் செய்யலியா? நானே இன்னைக்கு ஆபீஸ் போறது சந்தேகந்தான் ஒடம்பு ஒரு மாதிரி இருக்கு''

''அப்ப... லீவுதான்'' கண்ணன் இழுத்துக் கேட்க....

''லீவா? அட்ஜஸ்ட்மண்ட்தான்'' சட்டென ரகு சிரித்தபடி விடைபெற, கண்ணனும் சிரித்துக் கொண்டே வாசல் கேட்டைச் சாத்த அதுவும் கிரீச்செனச் சிரித்தது.

***

''சார்... சார்...'' மாணிக்கம் கொத்தனாரின் குரல்தான் சன்னமாக ஒலித்ததே தவிர முகத்தில் ஒருவிதச் சலிப்பு குடிகொண்டிருந்தது.

''வாய்யா.. இன்னைக்கு என்ன அணுகுண்ட தூக்கிப் போடப் போறே?''

''வேல எல்லாம் முக்கால் வாசி முடிஞ்சுதுங்க. நான் சொன்னேன்ல செவுர சுத்தி ஜல்லியக் கொட்டி ஒரு அடி ஏத்திவுட்டா நல்லா இருக்கும்.''

''ஜல்லியோட, மார்பிளும் வந்துடும்,... பண்ணிவுட்டுரு''

''அப்புறம்...'' மாணிக்கம் ஆரம்பித்தவுடனேயே கண்ணனுக்குக் கோபம் முதலில் வந்தது.

''ஆரம்பிச்சுட்டியா?!''

''என்ன சார்! என்ன ஏதுன்னு கேக்காமலே கோவப்படுறீங்க. மனை திங்குற காசு நாளைக்கு வட்டியும், மொதலுமா உங்களுக்குத் தானுங்களே, கரையான் மண்ணா இருக்குறதுனால திரும்பவும் இன்னொரு ரெண்டு அடி தள்ளி துளை போட்டு மருந்து வச்சுவுட்டா நல்லது. மேலும் நகாசு வேலைக்கு இந்த ஒயிட்டு சிமெண்டு மூணு மூட்ட வேணும்!

''ஏன்யா... அஞ்சாஞ்தேதி கிரகப் பிரவேசத்துக்கு நாளு மொதக் கொண்டு குறிச்சாச்சு. இன்னும் வேலைய வளத்துற,



படிப்பகம்

www.padippakam.com

போட்ட லோனு பத்தாம பொண்டாட்டி வளையல் வரைக்கும் போச்சு. இன்னும் இழுத்துவுட்டா நான் எங்க போறது? ஏண்டான்னு இருக்கு எனக்கு.'' வெகுண்டு பார்த்தார் கொத்தனாரை.

''கிரகப் பிரவேசத்து தேதிக்குள்ள முடிஞ்சிடும். என்ன கா கவுளி வெத்தல வேலதான். போட்ட வெத்தலய துப்புறதுக்குள்ள ஆளுங்க மளமளன்னு முடிச்சிடுவாங்க சார், வேண்டுமான பொருளு இருந்தாத்தானே வேலை சுத்தமா இருக்கும்!''

''ஆமாம்யா இப்ப ரோட்டு மண்லயா வேலை நடக்குது? என்னமோ ஒன்னும் வாங்கித் தராத மாதிரி பொலம்புற. உன் வேலையும் என்ன பண்ணி வெச்சிருக்குற நீ?''


கோபத்தை வெளிப்படுத்த ஏதாவது ஒரு சுவரைத் தேடி அலைந்தார் அவர். அஞ்சு மாசமா புள்ள பெத்த மகளைக் கூடப் போய் பார்க்காமல், பாத்துப் பாத்து வேலை செய்த மாணிக்கம் கொத்தனாருக்கு மனசில் திமிசு கட்டையைப் போட்டு அடித்தது மாதிரி இருந்தது.

''ஏன்யா அந்த சித்தி நாடகம் பாத்தியா நீ? அதுல வர்ற வீட்ட பாருய்யா. நிலப்படியெல்லாம் அழகா சதுரம் சதுரமா மார்பிள்லயே என்ன அழகா வச்சிருப்பான் தெரியுமா? அதைப்போல டிசைன் பண்ணுன்னா. வழக்கம்போல வளைச்சு வளைச்சு வச்சிருக்க. நாட்டுப்புறக் கொத்தனார வச்சா இப்புடித்தாங்குறாங்க எல்லாரும். உன்ன வச்சி வேலை செஞ்சது என் தப்புய்யா.''

தொண்டைக் குழி வரைக்கும் வந்த கோபத்தை மாணிக்கம் புகையிலைச் சாரோடு போக்கிக் கொண்டு முகத்தை மாற்றி தனக்குத் தானே தேற்றிக் கொண்டார்.

''ஏங்க ஒரு மூணு கிரவுண்டாவது இருக்கணும். அப்புடியே பில்லர் போட்டுத் தூக்கணும். அதெல்லாம் பண்ணலாம். முக்கா கிரவுண்ட்ல கல்லு வச்சி தூக்கியிருக்கோம். மேல இன்னும் ஒரு மாடி வேற கட்டி வாடகைக்கு விடற மாதிரி பிளானு இருக்குன்னீங்க. நிலை வாசலெல்லாம் ஆர்ச் போட்டாத்தான் வெயிட்டு தாங்கும். அதான் அப்புடிப் பண்ணது. செலவும் ஆகக் கூடாது ஆனா எல்லாம் வேணும்னா எப்படிங்க?''

''என்னமோ வெறுங்கையால முழம் போடுற மாதிரி பேசுற. நானே டென்சனா இருக்கேன். அப்புறம் ஏதாவது பேசிடப் போறேன். இருக்கறத வச்சி சிறக்கச்செய்யறதுதான் வேலைக்காரனுக்கு அழகு. நானே வெவரம் தெரியாம மூணு மூட்டைன்னு சொன்னா நீ ரெண்டுங்கணும். நீ என்னான்னா பத்தும்ப போல இருக்கு? நீ போய்யா ஜல்லி மார்பிளு வரும். இதோட வேலைய முடி. போட்ட காசெல்லாம் பொலிவா தெரியணும் ஆமா. பெரிய எழவா போச்சிப்பா, நீ போ சாமான் வரும்.



''என்ன சார் எழவு கிழவுன்னு அபசகுனமா பேசாதீங்க சார். நல்ல காரியம் நடக்குறப்ப இப்படியெல்லாம் கோபப்படாதீங்க. மனைக்கட்டு சந்தோசமாக அமையணும், நான் நல்லபடியா முடிக்குறேன். வாரேன் சார்!''

செங்கல் விழுந்தால் கூட வாடாத அவரது முகம் வாடிப் போய் வெளியே வந்தார்.

''என்னண்ணே மூஞ்சி வாடிக் கெடக்கு, அந்த ஆளு வேற சட்டிய வறண்டுன மாதிரி கத்திக் கிட்டு இருந்தான்'' - ராசு விசாரித்தான்.

''எனக்கு ஏம்ப்பா இங்க வந்தோம்னு இருக்கு. ஊர் பழக்கத்துல மொக தாட்சண்யத்துக்காக வந்து மாட்டிக்கிட்டேன். எப்ப வேல முடியும்னு இருக்கு ராசு. ஒண்ணும் சொல்றதுக்கில்ல. அந்தாளு நம்ப வேலையோட தரம் தெரியாம வேகப்படுறாரு. அவுங்க அப்பா காலத்துலேர்ந்து வேல செஞ்சிருக்கேன். வயசுக்குக் கூட மரியாத இல்லாம அந்த ஆளு பேசுறான்.''

''அண்ணே! நீ வேஸ்ட்டுண்ணே; அவனுக்கெல்லாம் கழுத விட்ட கைய நிறைய; அவனுக்குப் போய் நீ சந்தனக்கட்ட மாதிரி இழைச்சு, இழைச்சு வேலை செய்யுற, சாணி மொழுகுன மாதிரி தீத்திவுட்டுறு, மேல எங்கள வுடு சுண்ணாம்பு அடிச்சு சுருக்கா



படிப்பகம்

www.padippakam.com

வேலைய முடிச்சிடலாம்னோம் கேட்டியா நீ! இவனுக்கெல்லாம் போய் நீ பாத்துப் பாத்து ஏன் வேல பாக்குற, அவன் கேக்குற மாதிரி சீப்பா சீச்சி வுட்டுட்டுப் போறியா.. நீ வேற'' முருகனும் எரிச்சல்பட்டான்.

''தம்பி, வீடு யாருதோ? ஆனா மனை கட்டுல கைய வச்சா பச்ச புள்ளயத் தூக்கி தொட்டில்ல போடுற மாதிரி. அவ்வளோ பக்குவமா வேலை செய்யணும், சீவி, சிக்கெடுத்து பள்ளிக் கூடத்துக்குப் போற புள்ளைய தூரமா நின்னு பாத்து சொவம் காண்றா பாரு ஆத்தாகாரி, அதபோல வீட்ட நல்ல விதமா முடிச்சு பாக்குறதுதான் நம்ப தொழில் சுத்தம். அப்படியே பழகி டுச்சு, நாளைக்குக் குடிவந்தோன்ன அங்க உதிருது. இங்க வெடிக்குதுன்னு ஒரு கொ ற வரக்கூடாது பாரு''

''அதெல்லாம் மனுச ஜென்மத்துக்கு ஏத்துக்கும், நீ இவன்கிட்ட போய் மாரடிக் குற பாரு. நாங்கதான் ஆரம்பத்துலேர்ந்து பாக்குறோமே. அவன் உனக்கு ஊருக்குப் போவ லீவு கூடக் கொடுக்காம நல்லா வேல வாங்கிட்டான். இதுல கோவம் வருதா கோவம். ஏன்னா நாளைக்கு கிரயப் பத்திரம் நம்ப பேருக்கு எழுதப் போறான் பாரு.''

''சரி சரி, கலவையைப் போடுங்க, ஏ ராசு பாண்ட கொண்டா...''

* * *

''சார்...! வேலையெல்லாம் முடிஞ்சி டுச்சு போதுங்களா?'' மாணிக்கம் கொத்த னாரின் குரலுக்கு முதன் முறையாக மதிப் பளித்து,

''ரொம்ப நல்லதுப்பா. பரவாயில்ல'' என்று கண்ணன் அப்பாடா என்று புரு வத்தை உயர்த்திப் பெருமூச்சு விட்டார்.

''என்ன கண்ணன் சௌகர்யம் எப்படி? கூப்டேளாம்?'' சத்தமாகப் பேசிக் கொண்டே ராமய்யர் உள்ளே வர, நாற்கா லியில் வளைந்து கிடந்த கண்ணன் பரபரப் புடன் எழுந்தார். ''வாங்க வாங்க கும்புடப் போன தெய்வம் குறுக்க வந்த மாதிரி. இப்பதான் உங்கள வந்து பாக்கலாம்னு இருந்தேன். நீங்களே வந்துட்டீங்க'' ஏற்கெ னவே சுத்தமாக இருந்த சோபாவை மீண்டும் ஒரு தட்டுத் தட்டி அய்யரை உட்காரச் சொல்லி பவ்யமாய் நின்றார் கண்ணன்.

''ஏய் லெட்சுமி காஃபி போடு'' கண்ணன் பரபரக்க,

''நேக்கு இப்ப ஏதும் வேணாம்'' என்று அய்யர் மேலுக்கு மறுப்புச் சொன்னார்.

''கிரகப் பிரவேசம் லிஸ்ட் போட்டுட்டு போவலாமேன்னு வந்தேன். முந்தா நாளே சொன்னேள் வேலையா போச்சு. நேத்து வேற ஒரு கல்யாணம். நாளு இழுத் துண்டே போறது அதான் திடீர்னு வந்துட்டேன். நோக்கு ஏதும் சிரமம் இல்லியே!''

''அட நீங்க வந்ததே பெரிசு! சிரமமா?''

''இவா யாரு? உங்க ஊர்காராளா?''

சுவரோரம் நெடுநேரமாய் நின்று கொண்டிருந்த மாணிக்கம் கொத்தனாரைப் பார்த்து அய்யர் கேட்க, கண்ணன்,

''இவுரா... இவருதான் வீடு கட்டுன கொத்தனாரு. சொல்ல மறந்தே போயிட்டேன். இருய்யா, பேசி முடிச் சிட்டு வர்றேன்...''

''ஆகட்டுங்க'' என்ற மாணிக்கத்திடம்.

''நோக்கு எந்தூரு?'' என்றார் ராமய்யர்.

''வலங்கைமானுங்க''

''அட நம்ம பக்கம். நேக்கும் பூர்வீகம் திப்பிராஜபுரந்தான். கண்ணன் நம்ம ஊர்காரா. நன்னா பாத்து வேலை பண்ணணும். வீடு ஸ்ட்ராங்கா இருக் கணும்!

''நல்லபடியா இருக்கும் சாமி. சார் இப்டியே வெளில இருக்குறேன். வாசல் பக்கம் நின்ற சித்தாள் ராசும், முருகனும் உள்ளே நடப்பதை வைத்த கண் வாங்காமல் பாத்துக் கொண்டிருந்தனர்.''

''என்ன கண்ணன் லிஸ்ட்ட கேக்கு றேளா?''

''ஊம் சொல்லுங்க'' குழைந்து பச்சரி சியாய்ப் பொங்கினான்.

''இந்த ஹோமம் பண்ற குச்சி, பசும் நெய், இத்யாதி, இத்யாதி நீங்களே நன்னா பாத்து வாங்குறேளா. இதுல ஆட்சே பணை இல்லேன்னா நான் பாத்துக் கறேன்.''

''அட நீங்க வேற என்ன இப்டி கேட்டுட்டீங்க'' எனச் செல்லமாய் கோபித்துக் கொண்ட கண்ணன், ''நமக்கு என்ன தெரியும். எவ்வளோ பணம்னு மட்டும் சொல்லுங்க. நீங்க என்ன செஞ்சாலும் சரி''

''அப்புறம் கண்ணன் பதினோரு இலையும் போடலாம். இல்ல செலவைக் கம்மி பண்ணணும்னா ஒத்தப் படையில அஞ்சு இலைகூடப் போடலாம்.

''சார், இந்த சாஸ்திரத்துல மிச்சம் பாக்கக் கூடாது. பதினொன்னே போடுங்க. இல்ல இருவத்தொண்ணு போட்டாலும் சரிதான்.'' ஆர்வத்துடன் சிரித்தார் கண் ணன்.

''இந்த... வாழைப்பழம் அஞ்சு சீப்பு, எதுக்கு... மூணே போடுங்கோ.''

''என்ன சார் நீங்க வேற, யானை போறது தெரியல. பூனை போறதுக்கு கணக்கு பாக்குறீங்க. போடுங்க அஞ்சுங் குற இடத்துல ஒரு ஏழு. கோமியம் ஒரு சொம்பு போதுமா?'' கண்ணன் எதார்த்த மாகக் கேட்க இராமய்யருக்குச் சிரிப்பு மேலிட்டது.

''என்ன கண்றாவி, அதுக்கு ஒரு சொம்பு போறும் போங்கோ! மாவிலை ஒரு கொத்து, இந்த ரமணா கற்பூரம் ஒரு பாக்ஸ்சு...'' ராமய்யர் வரிசையாகப் படித்து முடிக்க.

''இத பாருங்க சார், கிரகப் பிரவேச செலவுல எந்த குறையும் வெக்கப்புடாது. பத்துங்குற எடத்துல பதினைஞ்சா போடுங்க ஆமா..''

''அப்புறம் நீங்க வந்து போக ஆட்டோ காரன்கிட்ட சொல்லி வெச்சிட்டேன். உங்க ளுக்கு நாங்க மனசார கொடுக்கறதுக்கு எதும் தடை சொல்லக்கூடாது ஆமா.''

''என்ன சரிங்களா?''

''என்னை எங்க பேசவிட்டேள்? நான் என்ன சொல்றது? தோப்பனார் மாதிரியே நோக்கு பெரிய மனசு. சகல சௌகர்யங்க ளோடும் பெரியவா ஆசீர்வாதமும் அனுக் கிரகமும் நோக்கு எப்போதும் உண்டு. அஞ்சாந்தேதி காத்தால டாண்ணு வந்து டறேன். நீங்க ஒங்க ஜோலியப் பாருங்கோ''

''நீங்க பாட்டுக்கு நடந்து வந்துடா தீங்க. ஆட்டோ அனுப்பிடறேன்.'' துள்ளிக் கொண்டு பதில் கூறினார் கண்ணன்.

''வேண்டான்னா கேக்கவா போறேள் செய்ங்கோ. எல்லாரும் க்ஷேமமா இருக் கணும். பகவானே ராமா... ராமா... வரட்டுமா''

''லெட்சுமி, சார் கௌம்புறார்'' என்று வேகமாகக் கூறிய கண்ணன் ''ஆசிர்வாதம் வாங்கிக்க'' என்பது போல் பல்லைக் கடித்து ஜாடை காட்டினார். மனைவி குழந் தைகளுடன் வாசல் வரை வந்து ராமய் யரை புன்னகை தவழ கண்ணன் வழிய னுப்பியதை மாணிக்கம் கொத்தனார் ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார். அவருக்குப் பின்னால் நின்று கொண்டி ருந்த முருகனுக்கும், ராசுவுக்கும் தலையில் ஜல்லி கொட்டியது மாதிரி கனத்தது. கண்ணன் உள்ளே போக அவரையே வெறித்துப் பார்த்த முருகனும் ராசுவும்,

''பாத்தியா'' என்பது போல உதட்டைக் கடித்துக் கொண்டு மாணிக்கத்திடம் சாடை காட்டினர்.

ஒரு புதவிதமான கலவையை விளங்கிக் கொண்ட மாதிரி கண்ணனைப் பார்த்தபடியே மாணிக்கம் தனக்குத் தானே தலையை அசைத்துக் கொண்டிருந்தார்.



படிப்பகம்

www.padippakam.com

## என்ரான்

# ஒரு பன்னாட்டு நிறுவனம் திவாலான கதை

நாட்டின் பொருளாதாரம் சீர்படவும், முன்னேறவும் பொதுத்துறைகளைத் தனியார்மயமாக்குவதே சிறந்தது என்கிறார்கள் தனியார்மய ரசிகர்கள். அதுவே நமது அரசின் நடைமுறையாகவும் இருக்கிறது. அரசாங்கங்களும் எல்லா ஓட்டுக் கட்சிகளும் இதை ஆதரித்து ஏற்கின்றனர்.

மாதச்சம்பளம் வாங்கும் நடுத்தர வர்க்கம் ஓரளவிற்குத் தனியார்நிறுவனங்களைப் பயன்படுத்துவதும் கூடவே தனியார்மயமாக்கத்திற்கு ஆதரவான பிரச்சார பீரங்கியாக இருப்பதும், முதலாளித்துவப் பத்திரிக்கைகள் அதற்கான பிரச்சாரக்குண்டுகளைத் தயாரித்து வழங்குவதும் சாதாரண நடைமுறையாக இருக்கிறது. மக்கள் பணத்தை விரயமாக்கும் பொதுத்துறை நிறுவனங்கள் சோம்பேறிகளாக இருப்பதாகவும், பங்குதாரர்களுக்கு வருடாவருடம் அதிக ஈவுத் தொகை கொடுக்கும் உழைப்பால் உயர்ந்த, முதலாளிகளால் நிர்வகிக்கப்படும் பன்னாட்டு நிறுவனங்கள் அழகுப்பதுமைகளாகவும் போற்றப்படுகின்றனர்.

பன்னாட்டு நிறுவனங்களின் தொலைநோக்கு, தேர்ந்த திட்டமிடல், அயராத உழைப்பு, சவால்களை எதிர்கொள்ளும் சளைக்காத முயற்சி, சிக்கனமான செலவும் அபரிமித இலாபமும் கொண்ட நிதிநிலைமை, பணியாளர்களை வேலை வாங்கும் திறன், தொழில் தரத்தில் விட்டுக் கொடுக்காமல் இருப்பது, வாடிக்கையாளரை மதிக்கும் பாங்கு, வெளிப்படையான கணக்கு வழக்குகளைக் கொண்ட நிதிநிலை அறிக்கை, ஆரோக்கியமான சந்தைப் போட்டிக்கு வித்திடுவது என்றெல்லாம் புகழ்ந்து பன்னாட்டு நிறுவனங்களைத் தூக்கிப்பிடிக்கிறார்கள்.

இப்படித் தனியார்மய ரசிகர்களின் உள்ளம்கவர்ந்த, உலகின் 14 வது பெரிய பன்னாட்டு நிறுவனமான 'என்ரான்' என்ற அமெரிக்க நிறுவனம் சென்ற மாதம் திவாலாகிவிட்டது. திருடனுக்குத் தேள் கொட்டியதைப்போல விழிக்கிறார்கள் தனியார்மயப் பூசாரிகள்.

### என்ரான் மகாராட்டிராவைத் திவாலாக்கிய கதை

என்ரான் என்றதும் மின்சாரம் நினைவுக்கு வரவேண்டும்; மின்சாரம் என்றதும் தற்போதைய கட்டண உயர்வை நினைக்க வேண்டும்; கட்டண உயர்வு என்றவுடன் தமிழ்நாடு உள்ளிட்ட பல மாநிலங்களில் மின் வினியோகம் தனியாருக்குத் தாரை வார்க்கப்பட்டது நினைவில் வர வேண்டும். இந்தியாவில் மின்சாரத்தைத் தனியார்மயமாக்கும் திட்டத்தின் முதல் கொள்ளி மராட்டியத்தின் தபோல் மின்சார நிறுவனம். இந்த தபோல் நிறுவனம் என்ரானுக்குச் சொந்தமானது.

சரத்பவாரை முதல்வராகக் கொண்ட காங்கிரசு அரசு மகாராட்டிரத்தில் ஆட்சியில் இருந்த போது, தபோல் மின் நிலைய ஒப்பந்தம் போடப்பட்டது. அதைக் கடுமையாக எதிர்த்து 'சுதேசி' பேசி மகாராட்டிர ஆட்சியைக் கைப்பற்றியது பாஜக - சிவசேனாக் கூட்டணி.

ஆட்சிக்கு வந்தவுடன் முதல் வேலையாக முந்தைய ஒப்பந்தத்தைக்காட்டிலும் மோசமான ஒரு ஒப்பந்தத்தை பா.ஜ.க என்ரான் நிறுவனத்துடன் போட்டுக் கொண்டது.13 நாள் பிரதமராக டெல்லியில் நாற்காலியைப் பிடித்த யோக்கிய சிகாமணி வாஜ்பாயி அந்த மோசடி ஒப்பந்தத்திற்கு அவசர அவசரமாக மைய அரசின் ஒப்புதலை வழங்கினார்.

மராட்டிய மின்வாரியத்திற்குச் சொந்தமான அனல்மின் நிலையமும் டாடா அனல்மின் நிலையமும் முறையே யூனிட் ஒன்றிற்கு 1 ரூபாய், 2 ரூபாய் விலையில் வழங்கிய மின்சாரத்தை 5 ரூபாய்க்கு வாங்குவதாக ஒப்பந்தம் போடப்பட்டது. என்ரான் உற்பத்தி செய்யும் மொத்த மின்சாரத்தையும் மராட்டிய அரசு வாங்க வேண்டும் என்றும், அவ்வாறு வாங்கத்தவறினாலும் பணத்தைக் கட்டவேண்டும் என்றும் ஒப்பந்தம் போடப்பட்டது.

யூனிட் 5 ரூபாய் விலையில் என்ரானின் மின்சாரத்தை அம்மாநில அரசால் வாங்கமுடியவில்லை. எனவே என்ரான் மின்உற்பத்தியை நிறுத்தியது. இருந்தாலும் உற்பத்தி செய்யாத மின்சாரத்திற்கு மாதம் 90 கோடி ரூபாய்க்கு 'பில்' அனுப்பியது. கரண்ட் பில் கட்ட முடியாத மராட்டிய அரசின் கஜானா காலியாகி அரசு ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுக்கவே வழியில்லாத நிலை தோன்றியது.

வேறு வழியின்றி தற்போதைய மாநில அரசு என்ரான் ஒப்பந்தத்தை மறுத்து வழக்கு தொடர்ந்தவுடன், அதற்கு லண்டன் நீதிமன்றத்தில் தடை உத்தரவு வாங்கியது என்ரான். ஒப்பந்தத்தை ரத்து செய்தால் 'கடும் விளைவுகளை'ச் சந்திக்க நேரிடும் என்று அமெரிக்க அரசு இந்தியாவை மிரட்டிக் கொண்டிருக்கிறது. ஒப்பந்தத்தை ரத்து செய்வதாக இருந்தால் எத்தனை ஆயிரம் கோடி ரூபாய் நட்டஈடு தர வேண்டியிருக்கும்

என்ரான், புஷ் கூட்டுக் கொள்ளைக்கு எதிராக கலிபோர்னியாவில் நடந்த ஆர்ப்பாட்டம்.






படிப்பகம்

www.padippakam.com

என்று பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறது.

**ஆமை புகுந்த வீடு**
**என்ரான் புகுந்த நாடு:**

என்ரான் ஒப்பந்தத்தை ரத்து செய்தால் பன்னாட்டு நிறுவனங்கள் இந்தியாவின் மீது நம்பிக்கையிழந்து விடும் என்றும், தாராளமயக் கொள்கைக்கே அது குழிபறித்துவிடும் என்றும், பாரதீய ஜனதா அரசும் தனியார்மய ஆதரவாளர்களும் அலறிக் கொண்டிருந்த நேரத்தில்தான் எல்லோருக்கும் சேர்த்து என்ரான் பெரிய குழியாய் வெட்டிவிட்டது.

என்ரானிடம் ஒப்பந்தம் போட்டு மீள முடியாத அமெரிக்க அடிமை நாடான பிலிப்பைன்ஸ், ஆண்டுதோறும் அன்னியக்கடன் வாங்கி 'கரண்ட் பில்' கட்டுகிறது. இந்தோனேசியாவின் சுகார்த்தோ அரசு என்ரானிடம் மின்சாரம் வாங்குவதற்காக தேசீய மின்நிலையத்தை இழுத்துமூடியது. இந்தோனேஷியா திவாலாகி சுகார்த்தோ அரசு தூக்கியெறியப்பட்டவுடன் என்ரான் ஒப்பந்தமும் அங்கே ரத்து செய்யப்பட்டு விட்டது.

என்ரான் புகுந்த நாடுகள் பல திவாலாகி இருக்கின்றன; ஆனால் உற்பத்தியே செய்யாத மின்சாரத்திற்குத் தண்டம் வசூலிக்கும் 'என்ரான்' திவாலாவது எப்படிச் சாத்தியம்?

எண்ணெய்க்குழாய் நிறுவனமாய் இருந்த என்ரான் 80 ஆம் ஆண்டுகளில் உலகின் மிகப்பெரிய எரிசக்தி மின்சார நிறுவனமாக மாறியது. இத்துறையில் அமெரிக்கா - ஐரோப்பியச் சந்தையின் 25 சதவீதத்தைக் கட்டுப்படுத்தியதுடன் உலகின் 16 - வது பெரிய நிறுவனமாகவும், அமெரிக்காவில் 8 - வது பெரிய நிறுவனமாகவும் மதிப்பிடப்பட்டது. எண்ணெய்க்குழாய், எரிசக்தி - மின்சாரம் என்று வளர்ந்த என்ரான், பின்னர் இணையவணிகத்திலும் இணையச் சேவையிலும் தனது சாம்ராச்சியத்தை விரிவுபடுத்தியது. அதன் மூலம் மின்சாரம், காகிதம், காகிதக்கூழ், பிளாஸ்டிக், தண்ணீர் என்று விதவிதமான பொருட்களையும் உருவாக்கியோ, வாங்கியோ, கைமாற்றியோ விற்பனை செய்து வந்தது.

என்ரான் நிறுவனத்தின் 'சிறப்பு' இது வரை யாரும் தொடாத மனித வாழ்க்கைக்குத் தேவையான காற்று, நீர், சுற்றுச்சூழல் ஆகியவற்றைக்கூட தனது வர்த்தக நடவடிக்கைக்குள் கொண்டு வந்ததுதான். ஆம் குடி நீரைக்கூடப் பல நகரங்களில் வினியோகம் செய்து வந்த என்ரான், எதிர்காலத்தில் இது ஒரு பெரிய இலாபம் ஈட்டும் தொழில் என்று கணித்தது. குடிநீர் கூட ஒரு மனிதனுக்கு இலவசமாகவோ, வாழும் உரிமையாகவோ, அரசுச் சேவையினாலோ கொடுக்கப்படுவது ஆரோக்கியமான பொருளாதார வளர்ச்சிக்கு நல்லதல்ல என்பது என்ரான் உருவாக்கியிருக்கும் வர்த்தக நெறி.

**கணினி ஏற்றுமதி**
**பெட்ரோமாக்ஸ் இறக்குமதி**

மின்சாரத்தை முழுவதுமாகத் தனியார் மயமாக்கினால் தடையின்றி மின் சப்ளை தருவோம் என்றுகூறி கலிபோர்னியா மாநிலத்தில் மின்சாரத்தைத் தனியார்மயமாக்குவதில் வெற்றி கண்டது என்ரான். கட்டணம் உயர்ந்தது; மக்கள் பணம் கட்ட முடியாததால் மின்வெட்டு வந்தது. சென்ற ஆண்டு அமெரிக்கா இந்தியாவிலிருந்து பெட்ரோமாக்ஸ் விளக்குகளை இறக்குமதி செய்தது என்றால் நம்பமுடிகிறதா? கலிபோர்னியாவின் அனுபவத்திற்குப் பின் தனியார்மயம் என்ற பேச்சைக் கேட்டாலே கொந்தளிக்கிறார்கள் அமெரிக்க மக்கள்.

இப்படி மக்களால் பணம் கட்டமுடியவில்லை என்பதனாலோ, அரசாங்கமே திவாலாகிவிட்டாலோ, மக்கள் எதிர்ப்பு காரணமாகக் கம்பெனியை மூட்டை கட்டும் நிலைமை தோன்றினாலோ ஏற்படும் நட்டத்தை எப்படிச் சரிக்கட்டுவது? இந்த 'அபாயங்களை' எல்லாம் எதிர்பார்த்து, இவற்றிற்காகக் காப்பீடு செய்திருக்கிறது என்ரான்.

காப்பீட்டிற்கான பிரீமியம் தொகையையும் சேர்த்து வாடிக்கையாளர் தலையில் வைத்து மின்கட்டணமாக வசூல் செய்து விடுகிறது.

## என்ரானின் கல்லாப் பெட்டிக்குள் அமெரிக்க நாடாளுமன்றம்!

என்ரான் - உலகவரலாற்றில் இதுதான் ''பிரம்மாண்டமான திவால்'' என்கிறார்கள் பொருளாதார வல்லுனர்கள். நம்மூர் சீட்டுக் கம்பனிகளைப் போல உலகத்தையே ஏய்க்க என்ரானால் எப்படி முடிந்தது?

முதல் காரணம் வெள்ளை மாளிகை மீது என்ரானுக்குள்ள செல்வாக்கு. இன்றைய அதிபர் புஷ் என்ரானின் ஓடும் பிள்ளை. அமெரிக்க நாடாளுமன்றத்தின் 75 % உறுப்பினர்களும், செனட் அவையின் 50% உறுப்பினர்களும் என்ரானுக்கு ரசீது கொடுத்துத் தேர்தல் நிதி வாங்கியவர்கள். லஞ்சமெல்லாம் தனிக்கணக்கு.

கிளிண்டனின் கட்சிக்கு என்ரான் 50 இலட்சம் ரூபாய் அதிகாரபூர்வமாக நன்கொடை கொடுத்த நாலாவது நாள் தபோல் ஒப்பந்தம் கையெழுத்தானது. வாங்காத மின்சாரத்திற்குப் பல நூறு கோடி ரூபாயை வசூல் செய்து தருவதற்கு என்ரான் சார்பாக இன்றைய துணை அதிபர் டிக் செனி, இந்திய அரசிடமும் சோனியாவிடமும் புரோக்கர் வேலை செய்திருக்கிறார். அமெரிக்க அரசின் அட்டார்னி ஜெனரல் ஆஷ்கிராப்ட் என்ரானிடம் நன்கொடை வாங்கியவர்.

இதற்கு மேல் சொல்லத்தேவையில்லை. என்ரான் தான் அமெரிக்க அரசு.

எனவே கம்பெனியைத் திவாலாக்கிப் பங்குதாரர்களுக்கும் இந்தியா போன்ற நாடுகளுக்கும் நாமம் போடுவது என்ற என்ரான் நிர்வாகத்தின் சதித்திட்டம் அமெரிக்க அரசின் உயர்மட்டத்தினருடன் பேசித் திட்டமிட்டுச் செய்த நடவடிக்கை தான்.

1999 முதல் 2001 வரையிலான காலத்தில் என்ரானின் பங்கு ஒன்று 4000, 5000 ரூபாய்க்கு விலை போனபோது என்ரானின் நிர்வாக இயக்குனர்கள் தங்கள் வசமிருந்த பங்குகளை விற்றுக் கோடிக்கணக்கில் சுருட்டிவிட்டார்கள்.

தற்போது ராஜினாமா செய்திருக்கும் என்ரானின் சேர்மன் கென்னத் லே, 500 கோடி ரூபாய்க்குத் தன் பங்குகளை விற்றுக் காசாக்கியிருக்கின்றான்; தபோல் நிறுவனத்தின் தலைவராக இருந்த ரெபக்கா மார்க் 400 கோடி ரூபாய்க்குத் தன் பங்குகளை விற்றிருக்கிறாள்.

இவர்களைப் பார்த்து என்ரான் ஊழியர்களும் தங்கள் பங்குகளை விற்கமுனைந்தபோது ''இப்போது விற்காதீர்கள், பங்கின் மதிப்பு இன்னும் உயரப்போகிறது'' என்று ஆசைகாட்டி அவர்களைத் தடுத்திருக்கிறார்கள்.

பரிசு விழாத லாட்டரிச்சீட்டைப் போல என்ரான் பங்குகளைக் கத்தைகத்தையாகக் கையில் வைத்துக்கொண்டு கண்ணீர் விடுகிறார்கள் ஊழியர்கள். பன்னாட்டு முதலாளிகளின் இரக்கமின்மைக்கும் நயவஞ்சகத்திற்கும் வேறு சான்று தேவையா?

www.padippakam.com

1996 - ஆம் ஆண்டு இந்தியாவின் தபோல் நிறுவனப் பிரச்சினைக்காக 1000 கோடி ரூபாயும், தென்அமெரிக்காவின் பொலிவியா நாட்டு எண்ணெய்த் தொழிற்சாலைப் பிரச்சினைக்காக இன்னும் ஒரு 1000 கோடியும் இன்சூரன்ஸ் நிறுவனங்களிடம் இருந்து இழப்பீடாகப் பெற்றிருக்கிறது என்ரான்.



முன்னாள் அமெரிக்கத் தூதர் செலஸ்டேயுடன் மராட்டிய முதல்வர் தேஷ்முக் - தூதரல்ல; என்ரானின் தரகர்.

இந்தக் காப்பீடு உள்ளிட்ட பொதுநல சேவைத் துறைகள், சுகாதாரம், கல்வி, குடிநீர், போக்குவரத்து அனைத்தும் உலகவர்த்தகக் கழகத்தின் சுதந்திர வணிகத்திற்கு உட்பட வேண்டும் என்று காட் ஒப்பந்தத்திலும் என்ரான் செல்வாக்கு செலுத்தியது யாருக்கும் தெரியாது. அரசுப் பொதுத்துறைகள் ஒழிக்கப்பட வேண்டும், உலகவர்த்தகக் கழகமே ஆட்சிசெலுத்த வேண்டும் என்பதற்காக என்ரான் முனைப்புடன் வேலை செய்திருக்கிறது. தனியார்மய உலகமயத்தை எதிர்க்கும் மக்களை நேரடியாகவே ஒடுக்கவும் என்ரான் தயங்கியதில்லை.

பம்பாயின் தபோல் மின்சார நிறுவனத்தை எதிர்த்து மக்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தைக் கொடூரமாக நசுக்கி ஒடுக்குவதற்கு என்ரான் மராட்டியப் போலீசுடன் கூட்டுச் சேர்ந்தது என்று சர்வதேச மனித உரிமை **'அம்னஸ்டி'** அமைப்பே குற்றம் சாட்டியிருக்கிறது. அதேபோல பொலிவியா நாட்டின் எண்ணெய்க் குழாய்த் தொழிற்சாலையினால் ஏற்பட்ட சுற்றுச்சூழல் பாதிப்பும் ஏராளம். அந்நாட்டு நதியொன்றில் 10,000 பீப்பாய் எண்ணெய்யைக் கொட்டி அதனால் பாதிப்படைந்த பழங்குடிமக்களின் போராட்டத்தையும் என்ரான் மேற்படி கூற்றின் மூலம் ஒடுக்குகிறது.

இப்படி உலகெங்கும் மோசடி, அநீதி, அரசியல் சதி போன்ற திறமைகளுடன் பீடுநடைபோட்ட என்ரான் அமெரிக்க 'வால்ஸ்ட்ரீட்' பங்குச்சந்தையில் ஒரு சூப்பர்ஸ்டாராக விளங்கியது. என்ரானின் பங்கு கடந்த ஆண்டு மட்டும் 4500 ரூபாய்க்கு விற்கப்பட்டதென்றால் அதன் மதிப்பைப் புரிந்துகொள்ளலாம்.

**சூப்பர் ஸ்டார் திவால்!**

இறுதியில் என்ரானின் வண்டவாளம் கடந்த அக்டோபர் மாதம் அதன் நிதிநிலை அறிக்கையில் தெரிய வந்தது. கடந்த 5 ஆண்டுகளாகத் தான் காட்டிய வருட லாபமான 3000 கோடி ரூபாய் பொய் என்று என்ரானே ஒப்புக்கொண்டது. அதன் பங்கு மதிப்பு 4500 ரூபாயிலிருந்து 30 ரூபாய்க்குச் சரிந்தது.

அமெரிக்க நிதி - கடன் கொடுக்கும் நிறுவனங்கள் என்ரான் மூழ்கிவிட்டதாகவும், திவாலாகிவிட்டதாகவும் அறிவித்தனர். அதாவது என்ரானுக்கு இருக்கும் சொத்து மதிப்புகூட அதன் கடனை அடைக்கமுடியாது என்று அறிவிக்கப்பட்டது. என்ரானின் 21 ஆயிரம் ஊழியர்கள் இன்று தெருவில் நிற்கிறார்கள்.

பல கோடி டாலர்களைக் கொடுத்து என்ரானின் பங்குகளை வாங்கி வைத்திருந்த பல்லாயிரக்கணக்கான பங்குதாரர்கள் போண்டியாகிவிட்டார்கள். தனது ஊழியர்களுக்கு ஓய்வூதியத்திற்குப் பதிலாகத் தனது பங்குகளையே வழங்கியிருந்தது என்ரான். வேலையில் இருந்தவர்களுக்கு வேலை போனது. ஓய்வுபெற்றவர்களின் பென்சனும் ஒரே நாளில் இல்லாமல் போய் விட்டது.

இந்தப் பணம் அனைத்தும் எங்கே போனது, எப்படி என்ரான் திவாலானது என்ற இரு கேள்விகளுக்கு என்ன விடை?

**பங்குதாரர்கள் திவால்**

பொய்க் கணக்குக் காட்ட இரண்டு எளிய மோசடிகளை என்ரான் செய்துள்ளது. என்ரான் நிறுவனத்திற்குக் கடன் தேவையென்றால் அதை என்ரான் தன் பெயரில் வாங்காது. மாறாக என்ரானின் உயரதிகாரிகள் தங்கள் பெயரில் தனியே வைத்திருக்கும் பெயர்ப் பலகை நிறுவனங்களின் பெயரில் கடன் வாங்குவார்கள். என்ரான் அதற்கு ஜாமீன் கையெழுத்துப் போடும். ஆனால் கடன் தொகையோ என்ரானின் செலவிற்குப் பயன்படுத்தப்படும். இந்த உத்தியின் மூலம் தனது பங்குதாரர்களுக்கு வரவு - செலவுக் கணக்கைக் காட்டும் போது 'கடனே இல்லை' என்று கணக்கு காட்டியது என்ரான். இதன் காரணமாகப் பங்கு மதிப்பு எக்கச்சக்கமாக உயர்ந்தது.

அடுத்து, இணையத்தின் மூலம் என்ரான் நடத்திய தரகு வணிகத்தில் தனக்கு கிடைக்கும் கமிசனை மட்டும் கணக்குக் காட்டுவதற்குப் பதிலாக மொத்த வணிகத்தையும் தானே நடத்தியது போலக் கணக்கு காட்டியது. இதனால் என்ரானின் ஆண்டு விற்பனைத் தொகை பல்லாயிரம் கோடியாக உயர்ந்தது.

**இந்தியாவின் காணிக்கை 7000 கோடி**

''பல ஆயிரம் கோடி ஆண்டு விற்பனை, பல்லாயிரங்கோடி சொத்துக்கள், கடனே இல்லை'' என்ற மாயத் தோற்றத்திற்குப் பங்குதாரர்கள் களப்பலி ஆகிவிட்டார்கள். ''கடன் வாங்கிய பெயர்ப் பலகை நிறுவனமும் திவால் - கடனுக்கு ஜாமீன் போட்டவனும் திவால்'' என்ற காரணத்தினால் உலகெங்கும் என்ரானுக்குக் கடன் கொடுத்த பல நிதி நிறுவனங்களும் கடனை வசூலிக்க முடியாமல் திவாலாயிருக்கின்றன. குறிப்பாக 13000 கோடி ரூபாய் மூலதனத்தில் துவக்கப்பட்ட தபோல் மின்நிலையத்திற்கு இந்திய அரசின் நிதி நிறுவனங்கள் மட்டும் 7000 கோடி ரூபாய் கடனாகக் கொடுத்திருக்கின்றன.

கடனை வசூலிக்க முடியாவிட்டால் மின் நிலையத்தையாவது ஏலம் போடலாம். ஆனால் தபோல் மின்நிலையத்தின் முக்கியமான எந்திரங்களை என்ரான் பிரித்துக் கடத்திவிட்டதாக சமீபத்திய செய்திகள் கூறுகின்றன. மொத்தத்தில் இந்திய மக்களின் வரிப்பணம் 7000 கோடி ரூபாயை என்ரான் ஏப்பம் விட்டது.

இப்படி ஒவ்வொரு விசயத்திலும் நமது நாட்டின் இயற்கை, உழைப்பு, பணம், சலுகைகள் எனக் கொட்டிக் கொடுக்கப்பட்டுத்தான் பன்னாட்டு நிறுவனங்கள் இங்கே தொழில் செய்து சுரண்டிக் கொள்ளையடிக்கின்றன. தனியார்மயம், தாராளமயம், உலகமயம் என்ற கொள்ளைக்கு என்ரானின் கதை ஒரு சாட்சியம். இப்போது சொல்லுங்கள் தனியார்மய ஆதரவாளர்களுக்கு, அதாவது, தேசத்துரோகிகளுக்கு என்ன தண்டனை கொடுக்கலாம்?

● இளநம்பி

www.padippakam.com



# பீச்சக்கை

சிதம்பரத்திலிருக்கும் என் நண்பனைப் பார்க்கப் போயிருந்தேன். போனநேரம் அவன் வீட்டில் இல்லாததால் காத்திருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. மதியம் சாப்பாட்டு நேரம் வேறு.

''அப்பாவுக்கு அரசியல், கம்யூனிசம் என்றால் அலர்ஜி'' என்று ஏற்கெனவே நண்பன் அறிமுகப்படுத்தியிருந்ததால் மவுனமாக அவர் பேசுவதைக் கேட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தேன். என்னைப் பற்றியும் நண்பன் ஓரளவு அறிமுகப்படுத்தியிருப்பான் போலும். ''சாப்பிடுறீங்களா'' என்று கம்பீரமாகக் கூப்பிட்டவர் நான் கூச்சத்துடன் மறுத்தவுடன் ''என்ன சூடம் சாம்பிராணி எல்லாம் காட்டிட்டுச் சாப்பிட உக்கார்றேன்னு பாக்குறீங்களா, இன்னைக்கி அமாவாசை, உங்கள மாதிரி யூத்துக்கெல்லாம் இதுல நம்பிக்கை இருக்காது.''

''நானும் அந்த காலத்துல டி.கே.ல இருந்தவன்தான், எங்க அப்பா கூட அந்த காலத்துல சுனா மானா கட்சின்னு சொல்லுவாங்க. உங்களுக்கு தெரியுமோ தெரியாதோ. சுயமரியாதை கட்சியில இருந்தவங்க. இப்ப நீங்கள்லாம் என்ன, எங்கள மாதிரி தீவிரமா இப்ப யாரும் இருக்க மாட்டாங்க. பெரியார் இருக்காரு பாருங்க அவருக்கே புராணத்துலேர்ந்து பல விஷயங்களை எடுத்துச் சொன்னவரு எங்க பெரியப்பா. எத்தனப் பேருக்கு இது தெரியும். என்னமோ போங்க, வயசான பெறகுதானே வாழ்க்கைன்னா என்னான்னு தெரியுது.''

அவரது பேச்சில் தன்னிலை விளக்கத்தைவிட தனக்குத் தெரியாதது எதுவுமே இல்லையென்ற எண்ணம் அதிகம் வெளிப்பட்டது.

''நீங்கதான் கூப்டா சாப்பிட வரமாட்டேங்குறீங்க'' என்று சடங்குக்குச் சொல்லி விட்டு சாப்பிட இலை விரித்தார் குடும்பத்துடன்.

''அம்மா லெட்சுமி வந்துருக்கேன், அம்மா லெட்சுமி வந்துருக்கேன்'' என்று மூன்று முறை வாசல் பக்கத்திலிருந்து ஒரு குரல் வந்தது. குரல் கேட்டதுதான் தாமதம் குடும்பமே பூகம்பம் வந்தது மாதிரி தவித்துப் போனது.

''இவளுக்கு எத்தன தடவ சொன்னாலும் அறிவிருக்காது. சாப்பிடுற நேரத்துலதான் வந்து நிப்பா. நவருங்க, நவருங்க எல்லாத்தையும் தூக்கி ஓரமா வெய்யுங்க முண்டங்களா'' என்று கோபத்தை குடும்பத்தின் மேல் காட்டினார் அவர்.

எனக்கு அப்போதைக்கு ஒன்றுமே புரியவில்லை. வீட்டுக்குள் நுழைந்த அந்தப் பெண்ணின் கையில் ஒரு இரும்பு முறமும் இரும்புக் கரண்டியும் இருப்பதைப் பார்த்துப் புரிந்து கொண்டேன், அவள் மலம் அள்ளும் தொழிலாளியென்று.

தங்களது மலத்தை விடவும் அதை வீட்டில் நுழைந்து வாரிக் கொண்டு போகும் அந்தப் பெண்ணின் மேல் அருவெறுப்பைக் கொட்டியது அந்தக் குடும்பம்.

''திமிருக்குன்னே செய்றியா நீ! அறிவே கிடையாதா'' என்று நண்பனின் அம்மாவும் சத்தம் போட, ''என்னம்மா பண்றது, இன்னைக்கும் ஆபீசரு ரெண்டு

> **தங்களது மலத்தை விடவும் அதை வீட்டில் நுழைந்து வாரிக் கொண்டு போகும் அந்தப் பெண்ணின் மேல் அருவெறுப்பைக் கொட்டியது அந்தக் கும்பல்.**

தெருவு சேத்து அனுப்பிச்சிட்டாரு. கோச்சிக்காதம்மா'' பொறுமையாகப் பதில் சொல்லிவிட்டு போன அந்தப் பெண் ஒரு மணி நேரம் கழித்துத் திரும்பவும் வந்தாள்.

''அம்மா! அமாவாசைப் பலவாரம் தாங்கம்மா'' என்று அந்தப் பெண் இறைஞ்சினாள். அவள் இடுப்போரம் பையனும் நின்றிருந்தான்.

''நான் சொல்லல நோட்டம் பாத்துட்டுப் போயிருப்பா; கரெக்டா வந்துடுவான்னு'' ஒரு ஆராய்ச்சியாளருக்குரிய பெருமிதத்துடன் சொல்லிவிட்டு,

''ஏய் அந்த வடைய எடுத்தாந்து கொடு'' என்றார்.

நண்பனின் அம்மா இரண்டு வடையை எடுத்து வந்து நீட்ட மலம் வாரும் அந்தப் பெண்ணின் மகன் பீச்ச கையால் வாங்க எத்தனித்தான். உடனே நண்பனின் அப்பா ஒரு அலட்சியமான மேதைமையுடன் ''ஏய் அறிவு கெட்டவனே, திங்கிற பொருள பீச்ச கையாலயா வாங்குவாங்க, சோத்து கைல புடிடா ராஸ்கல்'' என்றார் ஓங்கிய குரலில்.

சொல்லி முடித்ததுதான் தாமதம் அந்த மலம் வாரும் பெண் நிதானமாக ஆனால் உதட்டில் மெல்லிய புன்னகையுடன் பதில் சொன்னாள்: ''எங்களுக்கு ஏது சாமி பீச்ச கையி, சோத்து கையெல்லாம்.''

● சுடர்விழி

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி.வல்லபேசன், 3, செகந்நாதபுரம் நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர்: எழில் பிரிண்ட்ஸ், 110, இண்டாவது மாடி, 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.
புதிய கலாச்சாரத்தில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் சமுதாயத்தில் காணப்படும் உண்மைகளே!

TAMIL MONTHLY FOR INDIA UNDER No: 42647/87 Regd. No: IN/Chief PMG - 303/2001
www.padippakam.com



## ம.க.இ.க - வின்
# தமிழ் மக்கள் இசை விழா

## ஒன்பதாம் ஆண்டு

**பிப்ரவரி - 9, 2002**
**சனிக்கிழமை,**
**திருவள்ளுவர் திடல்,**
**தஞ்சை.**

நாட்டுப்புற இசை - செவ்விசை
இயக்கவியல் உறவு
பேரா. செ. அ. வீரபாண்டியன்

தொலைக்காட்சியும் தமிழர் பண்பாடும்
பேரா. ஷாஜகான் கனி

நாட்டுப்புறக்கலைகள் மற்றும்
கலைஞர்களின் அவல நிலை
முனைவர். மு. ராமசாமி

இந்துஸ்தானி இசை
தனிமரபு இசையா?
திரு. நா. மம்மது
திரு. ராஜா என்கிற ஷாகுல்ஹமிது

தில்லையில் தமிழுக்குத் தீண்டாமை
தீட்சிதர்களால் தாக்கப்பட்ட
திரு. ஆறுமுகசாமி அவர்களின் உரை.

**கழியல் ஆட்டம், களரி, கணியான் கூத்து, மகுடாட்டம், களத்துப்பாடல்கள், பாரதிதாசன் பாடல்கள், வில்லிசையில் பெரியார் வரலாறு மற்றும் புரட்சிகரக் கலை நிகழ்ச்சிகள்.**

## அனைவரும் வருக!

## இசை விழாவில் வெளியிடப்படவுள்ள நூல்கள்










- ம.க.இ.க. வின் பாடல் ஒலிப்பேழைகள்.
- இசைவிழா உரைகள் மற்றும் பிற பேச்சு ஒலிப்பேழைகள்
- கோவை - மறுகாலனியாதிக்க எதிர்ப்பு மாநாட்டு நிகழ்ச்சிகளின் தொகுப்பு - ஒளிக்குறுந்தகடு
- தீக்கொழுந்து : குறும்படம் - ஆகிய அனைத்தும் விழா அரங்கில் விற்பனைக்குக் கிடைக்கும்.

படிப்பகம்